## பதிப்புரை

புத்தம் புதுக் கருத்துக்களுடன் புதுப் பொலிவுடன் கூடிய நாவல் வரிசையிலே இதுவும் ஒன்று.

'எத்தனை நாவல்கள் வந்தாலும் 'திருமதி. ரமணிசந்திரன்' நாவல்களுக்கு இணையாகுமா' என்ற வாசகர்களின் சொல் கேட்க மன நிறைவு ஏற்படுகிறது.

குடும்பத்தைக் கட்டுக்கோப்போடு நடத்த, குழந்தைச் செல்வங்களை செம்மையாக வளர்த்து ஆளாக்க, ஒருவரோடு ஒருவர் கருத்து மோதல்களை மறந்து கனிவுடன் கட்டுக்கோப்பாக வாழ, விட்டுக் கொடுத்துப் போக, வீண் விவாதங்களைத் தவிர்க்க, ஏற்றத் தாழ்வுகளை சமன் படுத்த, இப்படி எத்தனையோ அன்றாடப் பிரச்சனைகளுக்கு அற்புதமான தீர்வு கண்டு வெற்றி காண வழி வகுக்கும் அற்புத நாவல்களை தொடர்ந்து தந்து வரும் ஆசிரியை ரமணிசந்திரனை வாழ்த்தாத நெஞ்சங்கள் கிடையாது.

மேலும் மேலும் புதுமையான குடும்பப் பாங்கான கருத்துக்களைச் சொல்லி வாசகர்களைக் கவரும் ஆசிரியைக்கு, தொடர்ந்து வாசகர்கள் தரும் வரவேற்பிலே மகிழ்ந்து அவர்களின் நாவல்கள் மேலும் மேலும் அற்புதமாக அமைய வழி வகுக்கட்டும்.

**- அருணோதயம் அருணன்**

# வாழ்வு என் பக்கம்

## 1

"அம்மா!" என்று ஆத்திரத்துடன் பல்லைக் கடித்தாள் மது. "ஆனாலும், இந்த அப்பா செய்வது, ரொம்பவும் அதிகப்படி. அப்படி என்ன பெரீ..ய்ய அண்ணாத்தை, கிண்ணாத்தை? திடீர் என்று அவர் வந்து காட்சி கொடுப்பதும், இவர் இப்படி அலட்டிக் கொள்வதும், வர வரக் கொஞ்சமும் சகிக்கவில்லை! நாளுக்கு நாள் எனக்கு இந்தப் பயணமே பிடிக்காமல், ஒரே வெறுப்பாக ஆகிக் கொண்டிருக்கிறது!" என்றாள் எரிச்சலுடன்.

"ஆமாம்மா! இந்த உடை கூடாது... அந்த 'டிராப்ஸ்' போடாதே என்று அப்பா... உங்கள் புருஷனைத்தான் சொன்னேன். அவர் அடிக்கிற கொட்டம் கொஞ்சமும் தாங்கவே முடியவில்லை! போகிற போக்கைப் பார்த்தால், ரயில் கிளம்பியதும், வெளியே குதித்து, வீட்டுக்குத் திரும்பி வந்து விடுவேன் என்றுதான் தோன்றுகிறது!"

என்றாள் மதுரிமாவுடைய இரட்டையான மதி என்று அழைக்கப்படுகிற மதுமதி.

''ச்சு... சும்மா இருங்களடி. ஏதோ அதிசயமாக அப்பா ஆசைப்படுகிறார். பல்லைக் கடித்துக் கொண்டு, அவர் சொல்கிறது போல ஓர் இரண்டு வாரம் இருக்க முடியாதா? என்னமோ ஆயுள் தண்டனை கொடுத்துவிட்ட மாதிரி ரொம்பத்தான் அலட்டுகிறீர்களே!'' என்று அதட்டும் பாவனையில் பேசி அவர்களை அடக்க முயன்றாள் அவர்களைப் பெற்றவள் சுமதி.

''இரண்டு வாரம்! பதினாலு நாட்கள்! ஆயுள் தண் டனைக்கும், இதற்கும் அப்படி என்ன வித்தியாசமாம்? அது, பதினாலு ஆண்டு! இது பதினாலு நாள்! இந்தப் பதினாலு நாட்கள் கண்ட கோணியையும் வைத்துத் தலையிலிருந்து கால்வரை மூடிக்கொண்டுதான் இருந்தாக வேண்டும் என்றால், அப்புறம் பதினாலு ஆண்டுகள் அப்படி இருப்பதில் என்ன கஷ்டமாம்? ஆனால் ஒன்று, வருங்காலத்தில் அதாவது கொலை, கிலை செய்து ஆயுள் தண்டனையே கிடைத்தாலும், உடை விஷயத்தில் கவலைப்பட வேண்டாம்! அதுதான் இப்போதே பழகி விடுவோமே!'' என்று ஒருத்தி விளக்கோ விளக்கு என்று விளக்கி, அடியெடுத்துக் கொடுத்தாள்.

உடனே அடுத்தவள் அதைப் பிடித்து ''ரொம்பக் கரெக்ட்! அப்பா கூட, ஏதோ உதவிதான் செய்கிறார் போல!'' என்று சிலாகித்தாள்!

''சீ, கழுதைகளா! வாயை மூடுங்கள். ஒன்று பிடிக்க வில்லை என்றால், என்னதான் சொல்வது என்று இல்லையா? தப்பித் தவறி, நம் கெட்ட நேரம். சொன்னது பலித்து விட்டால் என்ன ஆவது என்று மனதில் ஒரு பயம் வேண்டாம்?'' என்று அன்னை அச்சத்துடன் ஆத்திரப் பட்டதும், பிள்ளைகளுக்குச் சிரிப்பாகத்தான் இருந்தது!



''ஹையோ மதி, நீ பழங்கால உடையைத்தான் போடப் போகிறாய் என்று பார்த்தால், அதற்கும் முந்திய முனிவரே ஆகிவிட்டாயா? சாபம் பலித்து விடும் என்று அம்மா இப்படிப் பயப்படுகிறார்களே!'' என்று மது வினவ, ''ஆமாம், ஆமாம்! எங்கே என் காவி உடை? ருத்திராட்ச மாலை? அதையும் வாங்கி விடுங்கள்! அப்பாவுக்கு... அப்பாவுக்கும் அவருடைய அண்ணாத்தை அந்தப் பெரியப்பாவுக்கும் சந்தோஷமாக இருக்கும்'' என்றாள் மற்றவள்!

சொன்னதோடு நில்லாமல், முனிவர் அருள் பாலிப்பது போல ஒரு 'போசு'ம் அவள் கொடுக்கவே, மற்ற இரு பெண்களுக்கும் சிரிப்பு வந்துவிட்டது!

உடனே மதி அதே ரீதியில் இன்னும் கொஞ்சம் நடிக்க, மூவருக்கும் சிரிப்பு பீறிட்டது!

மூன்று பெண்களுமாகச் சிரித்து ஓய்கையில், ''என்ன இது ஒரே சத்தம்?'' என்று கேட்டபடி வீட்டுத் தலைவர் வாகீசன் வந்துவிட்டார்.

சும்மா என்றால், என்ன நடந்தது என்று கேட்டு, மீண் டும் நடிக்க வைத்து, மனைவி மக்களோடு கூடத் தானும் சேர்ந்து, குதூகலமாக நகைக்கிறவர்தான் வாகீசன்.

ஆனால், இன்று அவரது முகத்தில், மகிழ்ச்சி மருந் துக்குக் கூட இல்லை!

மாறாகச் சினம் துளிர்க்க, ''என்ன சுமதி, வீட்டுப் பெண்கள் சிரிக்கிற சத்தம். இப்படித் தெரு வரைக்குமா, கேட்பது? தெருவில் போகிறவர்கள், வருகிறவர்கள், நம் வீட்டைப் பற்றி என்ன நினைப்பார்கள்? இன்...'' என்று

வேகமாகப் படபடவென்று சொல்லிக்கொண்டே போனவர், பேச அனுமதி கேட்பதுபோல, மதி கையைத் தூக்கவும் பேச்சை நிறுத்தி, ''என்ன?'' என்று ஆத்திரமாகக் கேட்டார்.

சாதுவாய் முகத்தை வைத்துக் கொண்டு ''நான் வேண்டுமானால், போய்க் கேட்டு வரட்டுமாப்பா?'' என்று பணிவுடன் கேட்டாள் பெண்.

சாதாரண நாட்களில், மகளின் சாது முகமே அவருக்குக் காட்டிக் கொடுத்திருக்கும்! ஆனால், அன்று அவரது கவனம் வேறு விஷயத்தில் இருக்கவே ''யா... யாரிடம், எ... என்ன கேட்கப் போகிறாய்?'' என்று சீரியஸாக வினவினார்.

வரப் போவதை உணர்ந்து, கணவர் அறியாமல், 'சும்மாயிரு' என்பது போலத் தாயார் செய்த சைகையைக் காணாதது போலத் திரும்பிக் கொண்டாள் மகள்.

தொடர்ந்து, ''அதாம்ப்பா, தெருவிலே போகிறவர்கள், வருகிறவர்களிடம், நம் வீட்டைப் பற்றி என்ன எண்ணுகிறார்கள் என்று விசாரித்து அறிவது! நாலே நாலு பேரிடம் மட்டும் கேட்டால் போதுமாப்பா?'' என்று கேட்டு, அவள் கிளுக்கிச் சிரிக்க, மற்றவளும் சேர்ந்து கொண்டாள்.

வழக்கமாக, இது போன்ற வேடிக்கையான கிண்கிணிச் சிரிப்பில், ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டு, பெற்றோரும் சேர்ந்து கொள்வார்கள்.

ஆனால், சற்றும் எதிர்பாராத விதமாக, அன்று வாகீசன் வள்ளென்று விழுந்தார். ''வயதாகிறதே தவிர வயதுக்குத் தகுந்த அறிவு கொஞ்சமேனும் வேண்டாம்? பதினாலு வயதுப் பெண், தெருவில் போகிறவர்களிடம், வீட்டைப் பற்றி அபிப்பிராயம் கேட்கப் போகிறாளாம்! இதற்கு, அடுத்ததும் கூடச் சேர்ந்து ஒத்து ஊதுகிறது! ஊகூம்! நான் குடும்பத்தோடு வருகிறேன் என்று அண்ணனிடம் சொன்னது பெரிய தப்பு! மூடத்தனமாக, நம்முடையது நல்ல குடும்பம் என்று எண்ணிச் சொல்லிவிட்டேன்! ஆனால், இதுகள் என்னை நன்றாகக் கேவலப்படுத்தத் தான் போகிறார்கள்! கடவுள்தான் என்னைக் காப்பாற்ற வேண்டும்!'' என்று கோபத்தில் தொடங்கிப் புலம்பலில் முடித்தார் அவர்!



நியாயமற்ற பேச்சுக்கு அடங்கிப் போகிறவர்கள் அல்ல, அவருடைய மக்கள்! அப்படி, அவர் வளர்க்கவும் இல்லை!

அதிலும், அவருடைய முதல் மகளுக்குப் பிறகு, ஏழு ஆண்டுகள் கழித்துப் பிறந்த இந்த இரட்டையர்களுக்குத் துணிச்சல் கூடப் பிறந்த குணம் எனலாம்!

ஆனால், தந்தையின் பழக்கமோ காரணமோ அற்ற குற்றச்சாட்டு ஆத்திரமூட்டிய போதும், தொடர்ந்த அவரது கவலை திகைப்பூட்ட, இருவருமே மலங்க விழித்துக் கொண்டு நின்றனர்.

சுமதிக்கும் திகைப்புதான்.

ஆனால் உடனே சமாளித்து, பெண்களைச் சும்மா இருக்கும்படி சைகை செய்து அடக்கிவிட்டுக் கணவரிடம் சென்றாள்.

''என்ன இது, சும்மா அலட்டிக் கொண்டு? வெளியே அலைந்து திரிந்து களைத்து வந்தவர், முதலில் உட்காருங்கள்! மதி, மது இரண்டு பேரும் போய், அப்பாவுக்கு ஜூஸ் கொண்டு வாருங்கள். கிருணிப் பழ ஜூஸ் செய்து ஃப்ரிஜ்ஜில் வைத்தேன். இரண்டு ஐஸ் துண்டு போட்டு எடுத்து வாருங்கள்!'' என்று மகள்களை அங்கிருந்து அனுப்பி வைத்தாள்.

பிறகு, கணவர் அருகில் உட்கார்ந்து, இதமாகப் பேசலானாள். ''பாருங்கள், நம் பெண்கள் சற்றுக் குறும்புக்

காரிகளே தவிர, நாம் தலைகுனியும்படி, எப்போதேனும் நடந்தது உண்டா? வந்து... சொன்னால், கோபப்பட மாட்டீர்களே? எனக்கென்னவோ உங்கள் அண்ணனைப் பார்த்ததில் இருந்து, நீங்கள்தான் கொஞ்சம் அதிகமாகக் கவலைப்படுவது போலத் தோன்றுகிறது!'' என்று நயந்த குரலில் கூறி, அவரை அமைதிப்படுத்த முயன்றாள்.

வாகீசனுக்கும் பிள்ளைகளிடம் கத்தியது அதிகமோ என்ற சந்தேகம்தான்.

ஆனால், செல்லுமிடத்தில் மக்கள் கெட்ட பெயர் வாங்கிவிடக் கூடாதே என்ற கலக்கமும் இருக்கவே, ''அப்படி இல்லைம்மா. இங்கே இருப்பதற்கு எல்லாம் சரிதான். ஆனால், நாம் போகுமிடம் எல்லாம் சென்னை மாதிரி இருக்குமா? அந்தந்த இடத்துக்குச் சரியாக நடக்கவும் பழகவும் வேண்டும் அல்லவா? அதற்காகத்தான் கண்டிப்புப் பண்ணினேன்! என் கூடக் கோயிலுக்கு வந்து, வரும் வழியில் அண்ணனை நீயும் நேரில் பார்த்திருந்தால், நீ எனக்கு மேலே அதட்டிக் கொண்டு இருப்பாய்!'' என்றார் கவலையோடு.

“அன்றைக்கே திரும்பிப் போக ரயிலுக்கு டிக்கெட்டையே காட்டினார். அத்தோடு, நீ வேறு விடுமுறை தொடக்கம் என்று பிள்ளைகள், சினேகிதிகளோடு வெளியே சுற்றப் போயிருந்தாய். அல்லது, வீட்டுக்காவது கூட்டி வந்திருப்பேன். ஊகூம்! அதுவும் சரிப்படாது. இது போல முக்கால் பாண்டையெல்லாம் பார்த்தால், அவன் பயந்தே போய் விடுவான்!'' என்று கவலைக் குரலிலேயே மேலும் தொடர்ந்து சொன்னார் அவர்.

அதற்குள் மகள்கள் தாயாருக்கும் சேர்த்து, ஆளுக்கு ஓர் அழகான கண்ணாடித் தம்ளர்களில், பழச்சாறை எடுத்து வரவே, ஒன்றை வாங்கி வாகீசனிடம் கொடுத்துவிட்டு, அடுத்ததைத் தனக்கு எடுத்துக் கொண்டாள் சுமதி.



''பாருங்கள், என்ன அழகாகக் கொண்டு வந்திருக்கிறார்கள்!'' என்று சிலாகித்துவிட்டு,

“முதலில் அவர் என்ன மாதிரி உடையில் இருந்தார்? அதைச் சொல்லுங்கள்!'' என்று பேசிக் கொண்டிருந்த விஷயத்தில், மேற்கொண்டு விவரம் கேட்டாள்.

''எட்டு முழ வேஷ்டி! மயில் கண் பார்டர் என்பார்களே, அதுபோல! ம்ம்ம்... அதேதான் என்று நினைக்கிறேன். இங்கே பழகுகிற விதத்தில், அதெல்லாம் எனக்கே பாதி மறந்துவிட்டது! லைட் கலரில், முழுக்கைச் சட்டை! நெற்றியில் திருநீறு! குங்குமப் பொட்டு! எங்கள் தாத்தா, அப்பாவுக்கும், பெரியப்பாவுக்கும் போட்டுவிட்ட அதே சதுரக் கைக்கடிகாரம்! எல்லாம், அப்படியே என் பெரியப்பாவைப் பார்த்த மாதிரி இருந்தது! அண்ணன் அங்கே ஊரிலேயே, இருக்கிறானா? கொஞ்சமும் மாறவில்லை. மாறுவதற்கு அவசியமும் இல்லைதானே?'' என்று முடித்தார்!

''ஓகோ! அப்படியா விஷயம்?'' என்று கணவரின் பேச்சை ஜீரணித்தாள் சுமதி.

ரொம்பவும் முந்திய சொந்தம்! இந்த அவசர யுகத்தின் அளவுகோலின்படி பார்த்தால், ரொம்பவே முந்திய பந்தம் தான்.

வாகீசனுக்கும், அவர் சொல்லும் இந்த அண்ணன் பரந்தாமனுக்கும் பொதுவான உறவு தாத்தா, பாட்டிதான். அவர்களுக்குப் பிறந்தவர்கள், வாகீசன். பரந்தாமன் இருவருடைய தந்தையரும், அந்த அண்ணனும் தம்பியும் பலகாலம் சேர்ந்தே இருந்ததால், இருவருடைய பிள்ளைகளுமான வாகீசனும், பரந்தாமனும் ஒரு தாய் வயிற்றுப் பிள்ளைகளைப் போலச் சேர்ந்தே வளர்ந்தார்கள்!

ஒருவருக்கொருவர்தான் எல்லாம்!

அப்படி இணைந்திருந்த குடும்பம், ஏதோ தகராறில், ஒரேயடியாக வெட்டிக் கொண்டு பிரிந்து விட்டது!

ஊர் நிலங்கள், பண்ணையைப் பெரியவர் வைத்துக் கொள்ளத் தன் பங்குக்கான பணத்தைப் பெற்றுக் கொண்டு, வாகீசனுடைய தந்தை புலம் பெயர்ந்து போய் விட்டார்.

கிட்டத்தட்ட, இருவருடைய மக்களுக்கு இப்போது இருக்கும் வயது, வாகீசனுக்கும் பரந்தாமனுக்கும்! இருப துக்குள்தான்.

இங்கே தொழில் தொடங்கி, மகனைப் படிக்க வைத்து, மருமகளைத் தேர்ந்தெடுத்து மணமுடித்து வைத்து, பிள்ளையைத் தொழிலில் பழக்கி, அவனிடமே ஒப் படைத்து, மகன் குடும்பத்தோடு நல்லபடியாக இருப் பதைப் பார்த்துவிட்ட நிம்மதியோடு, பெரியவர்கள் போய்ச் சேர்ந்து ஐந்தாறு ஆண்டுகள் ஆயின!

கிட்டத்தட்ட இதே நிலைதான், அண்ணன் பரந் தாமனின் வீட்டிலும் இருக்க வேண்டும்!

தொழிலில் புதிதாக ஒரு கிளை தொடங்கலாம் என்ற எண்ணம் வாகீசனுக்கு. கூடவே, மூத்த பெண்ணுக்குத் திருமண வயதாவதால், அதைப் பார்க்கலாமோ என்ற கருத்தும், கணவன் மனைவி இருவருக்கும் இருந்தது!

அவை பற்றிய பல்வேறு சிந்தனைகளோடு, ஒரு தெளிவு வேண்டி, வாகீசன் அன்று கோயிலுக்குப் போனார்.

அவ்வப்போது, குழப்பம் தெளிய அப்படிச் செல்வது அவருக்கு வழக்கம்தான்.

கடவுளாகப் பார்த்து அவருக்கு வழி காட்டுகிறாரா என்னவோ, கோயில் வெளிப்பிரகாரத்தில் காற்றாட உட் கார்ந்து சிந்திக்கும்போது பல பிரச்சனைகளுக்கு, அவர் விடை கண்டுவிடுவார்!

அன்றும், அப்படி இருந்துவிட்டுத் திரும்பி வரும் வழியில்தான் அவர் அண்ணன் பரந்தாமனைச் சந்தித்தது!



சுமார் முப்பதாண்டுப் பிரிவுக்குப் பின் சந்தித்த ஒன்று விட்ட சகோதரர்கள் இருவருக்குமே, இடைப்பட்ட காலம், கனவாக மறந்து போயிற்று! அண்ணன் தம்பிக்கு விட்டுப் பிரிய மனமில்லை!

ஊர்ப்புறத்தில் இருவரும் சேர்ந்து அடித்த லூட்டிகள் எல்லாம் வெள்ளமாய் நினைவு வர, பரந்தாமன் தம்பியைக் குடும்பத்தோடு ஊருக்கு அழைத்தார்.

கடைக் குட்டிகளுக்கு விடுமுறை! பெரியவளுக்கும் ஒரு பத்துப் பதினைந்து நாட்கள் விடுமுறை எடுப்பது பிரச்சனையில்லை என்ற எண்ணத்தில், கட்டாயம் வருவ தாகத் தம்பி உறுதியளித்து விட்டார்!

அன்பான மனைவி, அழகும் புத்திசாலித்தனமும் உடைய மக்கள் என்று, தன் சந்தோஷமான குடும்பத்தை காட்டும் ஆசை அவருக்கு! எப்போதுமே, தன் குடும்பம் பற்றி, அவருக்கு ரொம்பப் பெருமை உண்டு!

கூடவே, தானும் அண்ணனும்போல, இரு குடும்பங் களுமே ஒட்டிக் கொள்ளும் என்ற நம்பிக்கை!

பெரியவருக்கும் அதே கருத்துதான். "எங்களுக்குப் பெண் குழந்தைகளே இல்லைப்பா! அது ஒன்று மட்டும் வயிற்றிலேயே என்னமோ ஆகிவிட்டது! அந்த ஓர் ஏக்கம் அவளுக்கு எப்போதும் உண்டு! உன் பெண்களைப் பார்த்தால் விடவே மாட்டாள், பாரேன்!" என்றார்.

எனவே, ஊர்ப் பயணத்தை ஆண்கள் இருவருமாக முடிவு செய்துவிட்டுப் பரந்தாமன் கிளம்பிப் போய் விட்டார்.

வாகீசனுடைய மனைவி மக்களும் அப்படி ஒன்றும் மறுக்கவில்லை!

சொந்த ஊர் என்று வாகீசன் சொன்னது, ஒரேயடியாகக் கிராமப்புறம் அல்ல..

கொடைக்கானல் மலையில் சற்றே கீழ்ப்புறமாகப் பரந்து விரிந்து கிடந்த ஒரு பண்ணை!

மலைப் பிரதேசம், அழகான இயற்கைக் காட்சிகள் என்று எல்லோரும் உற்சாகமாகத்தான் கிளம்பினார்கள்!

உற்சாகத்தில் கொட்டமடித்த மகள்களை, முதலில் சந்தோஷமாகப் பார்த்த வாகீசன் திடுமென உறைந்து போனார்.

வேஷ்டி கட்டி, அமைதியாகப் பேசிய அண்ணன் வீடு எப்படி இருக்கும் என்று அவரால் எளிதாகக் கற்பனை செய்ய முடிந்தது!

கோயில் மாதிரி அமைதியாக!

அந்த வீட்டில், இந்தப் பெண்கள் எப்படிப் பொருந்து வார்கள்?

பெரியவள் சுகேசியாவது பரவாயில்லை!

வேலைக்குப் போய் வருவதாலோ, என்னவோ, இப்போதெல்லாம் ரொம்பவே அமைதியாகி விட்டாள். வீட்டில் இருக்கும் நாட்களில் சில சமயம் ஜீன்சும் டாப்புமாக இலகுவாக அணிந்தாலும், அப்போதும் அடக்கமாகவே தெரிவாள்.

மற்றபடி, சேலையும், சல்வார் செட்டும்தான்.

ஆனாலும் அவளிடமும், ''மறந்தும் ஜீன்சைப் பெட்டியில் எடுத்து வைத்து விடாதேம்மா! உன்னைப் பற்றியாவது நான் நிம்மதியாக இருக்க விடு!'' என்று பெற்றவர் கூற, அவள் வியந்து நோக்கினாலும், கோபப்படாமலே தலையாட்டி விட்டாள்.

வேலையில் சேர்ந்ததில் இருந்தே, சுகேசி துள்ளாட்டம் போடுவது குறைந்து, நின்றே போயிருந்தது! கோபம், ஆத்திரம், அழுகை போன்ற ஆர்ப்பாட்டங்களும் அடங்கி, அவளுக்கு ஓர் அமைதி வந்திருந்தது!



சத்தமும் அதிகம் கிடையாது!

ஆனால், மற்ற இரண்டும்? அரைப் பாவாடை, முக்கால் பேண்ட் என்று அணிவதும், அதற்குச் சரியாக ஏதேனும் வாசகங்களோடு டீ ஷர்ட் டாப் என்று தூள் கிளப்புவதும்!

''இரண்டு வருஷம் முன்னாலே தைத்ததா?'' என்று வாகீசனும் சேர்ந்து கிண்டலடித்த ஆடைகள்தான்!

ஆனால், இவை அண்ணன் வீட்டோடு ஒத்து வராதே!

அத்தோடு, ஏதாவது ஆங்கிலப் பாட்டை அவ்வப்போது கத்திப் பாடுவதும், அதற்குச் சரியாக ஆடுவதும்... அப்பாடியோவ்! இது கொஞ்சமும் சரியே வராது!

உடனடி வேலையாக, வாகீசன் மக்களைச் சீர்திருத்துவதில் முனைந்தார்!

சோபாவில் இப்படித் தொப்பென்று விழாதே, குதிக்காதே, கத்திச் சிரிக்காதே, ஆங்கிலப் பாட்டு வேண்டாம்!

சத்தத்துக்கே இத்தனை!

''அங்கே விக்கல் எடுத்தால் என்னப்பா செய்வது? சத்தம் கேட்குமே!'' என்று கவலையோடு கேட்டார்கள் இரட்டையர்கள்!

அடுத்து, இந்த டிரஸ் கூடாது... இறுக்கமாக இருக்கக் கூடாது... முழங்கால் தெரியலாகாது! அணிகிற உடையில் வாசகங்கள் இருக்கக் கூடாது... இப்படி ஏகப்பட்ட கட்டுத் திட்டங்கள்!

''பேசாமல், நீச்சல் உடை போட்டுக் கொள்கிறோம் அப்பா! அதிலும் பிகினி என்றால் வாசகம் எழுத இடம் இராது!'' என்பார்கள் பெண்கள்.

தலையில் அடித்துக் கொள்வார் தந்தை!

சுமதிக்கும் புத்திமதிகள் தரப்பட்டன.

பட்டு அல்லது பருத்தி நூல் சேலைதான் கட்ட வேண்டும்!

முடிந்தவரை பட்டு! இல்லாவிட்டால், கொஞ்சமேனும் பழைய காலத்து டிசைனில் உள்ள நூல் புடவைகள்! இலகுவாக நைட்டியெல்லாம் கூடாது! கல், சம்கி ஒட்டிய பளபளா சேலையெல்லாம் அங்கே கூடவே கூடாது! மெல்லிசாக உள்ள எதுவும் வேண்டாம்! காதில் ஜிமிக்கி, தொங்கட்டான்கள் கூடவே கூடாது! அடக்கமாக வைரத் தோடு மட்டும் போதும்!

''அட...க்..கமாக, வை... ரத்தோடாமா? அந்தத் தோடு என்ன விலைம்மா?'' என்று மதி கேட்க, கண்ணை உருட்டி வானத்தை மது காட்ட, சிரிப்பை அடக்குவது சுமதிக்குமே சிரமமாயிற்று!

வீட்டில் எல்லோருக்குமே, சுமதிக்கும் கூட உள்ளூர எரிச்சல் வரத் தொடங்கிய சமயத்தில்தான், மதி, ''தெருவில் போகிறவர்களிடம் விசாரித்து வரட்டுமா'' என்று வேடிக் கையாகக் கேட்டு வாங்கிக் கட்டிக் கொண்டது!

கணவர் குணம் அறிந்தவள் சுமதி! வாகீசன் ரொம்பவும் குழம்பியிருப்பதை உணர்ந்து, அவரை அமைதிப் படுத்து வதில், ஈடுபட்டாள்.

''என்னிடம் சொல்லி விட்டீர்கள் அல்லவா? இனிமே எல்லாம் என் பொறுப்பு! அனைத்தும் உங்களுக்குத் திருப்தியாக இருக்கும்படியாக, நான் பார்த்துக் கொள்ளு கிறேன். நீங்கள் மட்டும், ரொம்பக் கோபம், கவலைப்படா மல் கொஞ்சம் இலகுவாக இருக்க வேண்டும்! என்ன?'' என்று அவரை சாந்தப்படுத்தி அனுப்பி வைத்தாள்.

கூடவே, மக்களிடமும், எடுத்துச் சொன்னாள்.

''பாருங்கள், அப்பாவுக்கு, அவர் அண்ணனிடம் பாராட்டு வாங்க வேண்டும் என்று ஆசை! அண்ணன் வீடு ஊர்ப் புறமே இருந்து போயிற்று! அந்தக் குடும்பத்தார் கண் ணில், நாம் குறைந்து தெரிந்துவிடக் கூடாது அல்லவா?



இந்த மாதிரி சென்னை நாகரீகம் அங்கே பரவியிராது, என்பதால்...''

''என்னம்மா, கொடைக்கானல் மலைப்புறம் என்கிறீர் கள். அப்புறம் பட்டிக்காட்டுத்தனம் எங்கிருந்து வரும்? அதுவும் டீ.வி. இல்லாத இடமே கிடையாது எனும்போது, நீங்கள் வேண்டுமானால் பாருங்கள். இந்த அப்பாவுக்குப் பயந்து கொண்டு, நாங்கள்தான் சுடிதாரும், பாவாடையு மாகப் பழங்காலங்களாக நிற்கப் போகிறோம்! அங்கே உள்ளதுகள், அல்ட்ரா மாடர்னாக இருந்து, எங்களைப் பார்த்துக் கெக்கலி கொட்டிச் சிரிக்கப் போகிறார்கள்! அப் படி மட்டும் நடந்தால், அப்புறமாக, அப்பா பேச்சை எதி லுமே கேட்க மாட்டோம்! தொடை தெரியக் குட்டைப் பாவாடை, மேலே பத்து, கீழே பத்து சென்டி மீட்டர் அகலமே யான டூ பீஸ், கண்ட வசனம் உள்ள டீ ஷர்ட் இதெல்லாம் மட்டும்தான் அணிவோம்! இது மட்டும் நன்றாக நினை விருக்கட்டும்!'' என்று போர்க்கொடி உயர்த்தி, மிரட்டி னார்கள் சின்னப் பெண்கள்.

''என்னக்கா, நீயும் அப்படித்தானே?'' என்று தங்கள் கட்சிக்கு ஆள் சேர்க்க அவர்கள் முயன்றபோது, அந்த வீட்டின் மூத்த வாரிசு சுகேசி லேசாக முறுவலித்தாள்.

''சும்மா மிரட்டுகிறார்கள், அம்மா. வீணாகப் பயப்படா தீர்கள்! அந்த மாதிரி உடையெல்லாம், இவர்களுக்கே பிடிக்காதும்மா! என்னிடம் சொல்லியிருக்கிறார்கள்!'' என்று தாயிடம் ஆறுதலாகப் பேசினாள்.

''ஏ... எட்டப்பி! சமயம் பார்த்துக் காலை வாருவதைப் பார்! அம்மாவை மிரட்டி, இந்த உடைகளுடனேயே அங்கே வருவதற்கு எப்படியாவது அனுமதி வாங்கலாம் என்று பார்த்தால், கெடுத்து விட்டாயே!'' என்று கத்தினாள் ஒருத்தி!

''இருந்திருந்து, இவளைப்போய் நம்பிச் சொன்னேமே!'' என்று வருந்தினாள், அடுத்தவள்.

''சரிதான் போங்களடி! உத்திரவு வருவது அப்பாவிடம் இருந்து! இவர்கள் அம்மாவை மிரட்டிக் காரியம் சாதிக் கிறார்களாம்! பெரிய வீராங்கனைகள்தான்! ஒரு பத்து நாட்கள், எப்படியோ பொறுமையாக இருந்து நல்லபடியாக சமாளித்துத் திரும்பி வருவதை விட்டு... ஆனால், இது போலவும் வைத்துக் கொள்ளுங்கள், எனக்கென்னவோ, அப்பா எண்ணுகிற மாதிரி எழுபது, எண்பது உடைகளில் அங்கே யாரும் இருப்பார்கள் என்று தோன்றவே இல்லை! ஆனால், ஒருவேளை அப்பா சொல்வதே சரியாக இருந் தால், அந்தப் பெரியப்பாவே மெச்சும்படி இருந்து அப் பாவைப் பெருமைப்பட வைப்பதில், ஒரு தப்பும் இல்லை!'' என்று சற்று அழுத்தமான குரலில் சுகேசி கூற, சின்ன வர்கள் இருவரும் ஒரு வழியாகத் தமக்கையின் சொல் லுக்கு அடங்கிப் போனார்கள்.

''ரொம்பத் தாங்க்ஸ்டாம்மா. சுகி இதுகளோடு கத்தி, என் தொண்டையே வறண்டு போயிற்று!'' என்றபடி தொப் பென்று சோபாவில் விழுந்தாள் சுமதி.

தாயாருக்குச் சில்லென்று பழச்சாறைக் கொண்டு வந்து கொடுத்து முறுவலித்தாள் பெண்!

ஆனால், அவளது ஆரூடம் பொய்யாகி, முழு பாண் டும், 'இன்' பண்ணிய அரைக்கைச் சட்டையுமாக சற்று குண்டான இரு பையன்களை 'பொன்னருவி' எஸ்டேட் டில் பார்த்ததும், தமக்கையை ஆத்திரத்துடன் பார்த்து முறைத்தனர் இரட்டையர்!





## 2

தழையத் தழைய வேஷ்டி, அரைக்கைக் காமராஜ் சட்டையில் பெரியப்பாவும், பொடிக் கட்டங்கள் போட்ட சிறு கரை யிட்ட பட்டுச் சேலையில் அவருடைய மனைவியும், வாகீசன் வீட்டு இரட்டையருக்கு முன்னும் பின்னுமான இரு பையன்களும், முகத்தில் அழுத்தமாகப் பூசிய புன்னகையோடு வாசலில் நின்று விருந்தினரை வரவேற்றனர்.

கையோடு எடுத்துச் சென்ற இனிப்பு டப்பாவை, வீட் டுக்காரப் பெண்மணியிடம் கொடுத்து ''.... வந்து, சின்ன வயதில் இந்தத் தடியங்காய் பர்ஃபி என்றால், அண்ணா னுக்கு ரொம்பப் பிடிக்கும் என்று, இவர்கள் அப்பா வாங்கி வந்தார்!'' என்று முறுவலித்தாள் சுமதி.

பதில் முறுவலுடன், ''தம்பிக்குப் பிடிக்கும் என்று திரட்டுப்பால் செய்யச் சொன்னார், கதிர் அப்பா! உள்ளே வாருங்கள்!'' என்று விருந்தாளியை குறை சொல்ல இட மின்றி வரவேற்றாள், வீட்டுக்கார அபிராமி!

''எல்லோரும் உள்ளே வாருங்கள். உள்ளே போய் உட் கார்ந்து கொண்டு, அப்புறமாக யார், யார் என்று பார்ப்போம்'' என்று எல்லோரையும் உள்ளே அழைத்தாள் அவள்.

பத்துப் படி ஏறி, வராந்தாவை அடைந்து, அங்கிருந்து வீட்டுக்குள் செல்ல வேண்டும்!

மேல் படியிலிருந்து வந்த மலைப்பாதையை ஒரு தரம் பார்க்க விரும்பித் திரும்பிய போதுதான், மதிக்கு ஓரளவு அங்கத்திய விவரம் புரிந்தது!

விருந்தினரோடு உள்ளே செல்லாமல் சற்றுத் தயங்கிய வீட்டுப் பையன்கள் கதிரும் சுதிரும் அவரவர் அபிப் பிராயம் பரிமாறிக் கொண்டிருந்தனர்!

அபிப்பிராயம், விருந்தினரைப் பற்றியது என்று நன்றாகவே தெரிந்தது!

தலையில் அடித்த கையை, வீட்டுப் பக்கமாக உதறிக் காட்டிக் கொண்டிருந்தான் ஒருவன். அடுத்தவன் ஒத்து ஊதிக் கொண்டிருந்தான்.

ஒரு கணம், மதுமதிக்கு உடம்பெல்லாம் உதறி விட்டது!

இந்தப் பையன்களுக்கு, அவர்களது வரவு பிடிக்க வில்லை!

வேண்டாத விருந்தாளிகளாக, அவளுடைய குடும்பம் இந்த வீட்டுக்கு வந்திருக்கிறது!

இந்தப் பதினாலு நாட்களும் எப்படிக் கழியப் போகின்றன?

மெல்லத் தன் இரட்டையைக் கையைப் பிடித்து நிறுத்தியவள் அவசரமாக அவள் காதைக் கடித்தாள்!

அவளும் நின்று பையன்களை ஒரு பார்வை பார்த்து விட்டு, "வீட்டாரைத்தானே அறிமுகப்படுத்தப் போவதாகச் சொன்னார்கள்! அவர்கள் வேலைக்காரப் பையன்களாக இருக்கும், மது! நீ வா உள்ளே!" என்று உடன் பிறந்தவளைக் கையைப் பிடித்து அழைத்துச் சென்றாள் அவள்.

பையன்களுக்குக் கேட்க வேண்டும் என்றே, நன்கு வெளிப்புறமாகத் திரும்பி நின்று, தெளிவாகச் சொல்லப் பட்ட வார்த்தைகள்!

அதற்குள் உள்ளே சென்றுவிட்ட அபிராமி, எல்லோரையும் உட்காருமாறு உபசரித்துவிட்டு, "இவள் தான் உங்கள் மூத்த பெண் சுகேசியா? ஆள் வெகு அழகாக இருக்கிறாள். கூடவே, பெயருக்கேற்றபடி, வெகு அழகான, அடர்த்தியான கூந்தல்! பொருத்தமாகப் பெயர் வைத்திருக்கிற மாதிரி இருக்கிறது!" என்று பாராட்டினாள்.



சுகேசி ஒரு சிறு புன்னகையோடு பேசாதிருக்க, "ஆமாம்! பிறந்ததுமே ரொம்பவும் அடர்த்தியாகப் பட்டுப் போல இருந்ததா, இந்தப் பெயர்தான் எங்கள் இருவருக்கும் சரியான பெயராகத் தோன்றிவிட்டது!" என்று சுமதி மகிழ்ச்சியோடு மொழிந்தாள்.

"நிஜமாகவே, மிகவும் சரியான பெயர்தான்! மற்ற இரண்டு பேரும்... ஐயோ, அவர்களை வாசலிலேயே விட்டு விட்டோமே!" என்று பயந்தவாறு அபிராமி எழுந்து விட்டாள்.

அவளைத் தடுத்து "ஐயோ, நீங்கள் உட்காருங்கள். அவர்கள் தானாக வருவார்கள்! வரும் வழியிலேயே, இங்கே இயற்கைக் காட்சிகள் அழகாக இருப்பதாகச் சொன்னார்கள். உங்கள் முன்புறத் தோட்டத்தைப் பார்த்துக் கொண்டு இருப்பார்கள் என்று நினைக்கிறேன்" என்றாள் சுமதி.

சின்னப் பெண்கள் இப்போது என்ன செய்து கொண்டு இருக்கிறார்களோ என்று, அவளுக்கு உள்ளூரக் கலக்கம் தான்!

ஆனால், அவர்களது எரிச்சலை, இந்த மூத்தார் மனைவியிடம் காட்டிவிடக் கூடாதே என்ற பயத்திலேயே, அபிராமி அவர்களைத் தேடிச் செல்வதைத் தடுத்தாள் எனலாம்!

ஆனால் மூத்த மகளிடம் கண்ணால் ஜாடை காட்டி, "குட்டிக் குட்டிக் 'குஷன்'களை அடுக்கி வைத்த மாதிரி இருந்ததே, அந்தக் கற்றாழைத் தொட்டியைப் பார்த்துக் கொண்டு இருப்பார்கள் என்று நினைக்கிறேன். அதெல்லாம் பிறகு பார்த்துக் கொள்ளலாம் என்று அவர்களைக் கூட்டி வாம்மா!" என்று அனுப்பினாள்.

தங்கைகளின் மனநிலை பார்த்து, அவர்களைச் சற்று அடக்கி அழைத்து வா என்றது தாயின் பார்வை!

ஒப்புதலாகத் தலையசைத்து சுகேசி எழுந்து செல்ல, ''ரொம்பவும், அடக்கமாகவும், அமைதியாகவும் இருக்கும் படி, அருமையாக வளர்த்திருக்கிறீர்கள்!'' என்று பாராட் டினாள் அபிராமி.

தேடித் தேடிப் பாராட்டுவது போலத் தோன்றினாலும், முறுவலித்து ''வேலைக்குப் போகிறாள் அல்லவா? அமைதி தானாக வந்துவிட்டது! மற்றபடி...'' என்று இயல்பாக ஏதோ சொல்லத் தொடங்கிவிட்டு, சிறு இருமலின் மறை வில் பேச்சை நிறுத்திக் கொண்டாள் சுமதி.

மற்றபடி, ஒன்றிரண்டு ஆண்டுகளுக்கு முன் வரை, மூன்று பெண்களும் சேர்ந்து கொட்டமடித்ததைச் சொன் னால், வாகீசன் கிழிகிழியென்று மனைவியைக் கிழித்துப் போட்டு விட மாட்டாரா?

சின்னவர்கள் இருவரும் வேண்டும் என்றே வாசல் வழியில் நின்று ஏதோ கிசுகிசுத்துக் கொண்டிருந்தார்கள். அந்தப் பையன்கள் வருவதானால், 'ப்ளீஸ்' என்று அவர் களிடம் கேட்டு, அவர்கள் வழி விலகித்தான் வரவேண்டும்!

ஆனால், சீரியசாக ஏதோ பேசுகிற பாவனையில் நின்று விட்டு, ஓரக் கண்ணால் பார்த்தால், சகோதரர்கள் இரு வரும் காணாமல் போயிருந்தார்கள்.

அதற்குள் தேடி வந்த தமக்கையிடம் தங்கைகள் புகார் கூற, அவர்களைச் சமாதானப்படுத்தி அழைத்து வந்தாள் சுகேசி.

வராந்தா தாண்டி உள்ளே வந்தால், வேறு வழியில் உள்ளே வந்திருந்த பையன்கள், இவர்களிடம் ஓர் ஏளனப் பார்வையுடன் திரும்பிக் கொண்டனர்.



அறிமுகங்கள் முடிந்து பானங்கள் பரிமாறிய பிறகு, சிறு அமைதி நிலவியது.

திடுமென, ''அண்ணா, இது பெரியப்பா சென்னையி லிருந்து வாங்கி வந்த கடிகாரம்தானே?'' என்று மீண்டும் உரையாடலைத் தொடங்க ஒரு வழி கிடைத்த திருப்தி யோடு வாகீசன் கேட்டார்!

''ஆமாம், ஆமாம்!'' என்று கடிகாரம் வாங்கி வந்த கதை மகிழ்ச்சியோடு அளக்கப்பட்டது!

''என்ன பெரிய கடிகாரம்?! பழங்காலம்!'' என்று முணு முணுத்தான் பையன்களில் ஒருவன்.

''டேய் கதிர், என்னடா வாய்க்குள்ளேயே முணு முணுப்பு?'' அதட்டினார் பெற்றவர் பரந்தாமன். ''எதைச் சொன்னாலும் தெளிவாகப் பேச வேண்டும் என்று நான் சொல்லவில்லை?''

புதிய விருந்தாளிகளின் முன்னிலையில் கண்டிப்பது போலத் தந்தை பேசியது எரிச்சலூட்ட, ''ஒன்றுமில்லை! கடிகாரம் பத்து நிமிஷம் தாமதமாகப் போகிறது என்றேன்!'' என்று தந்தையின் பெருமைக்குரிய பழைய காலப் பொருட்களில் ஒன்றான சுவர்க் கடிகாரத்தைக் குறை கூறித் தன் ஆத்திரத்தைத் தணித்துக் கொள்ள முயன்றான் அவன்.

''பத்து நிமிஷமா?'' என்று தன் கைக்கடிகாரத்தோடு ஒத்துப் பார்த்தார், பரந்தாமன். ''எட்டு நிமிஷம் தாமதம் தான். முதலில் அதைச் சரி பண்ணிவிடு!'' என்று மகனுக்கு உத்திரவிட்டு விட்டு, தம்பியின் பக்கம் திரும்பினார்.

''கைக்கடிகாரம் தப்பாக ஓடினாலும் பரவாயில்லை! அது, அவரவர் மட்டும் பார்ப்பது! சுவர்க் கடிகாரம்! பலரும் பார்ப்பது என்பதால், அது தப்பாகக் காட்டவே கூடாது!

அதனால்தன் அதை உடனே சரி செய்யச் சொன்னேன்!'' என்று விளக்கினார்.

புதிய, அதிலும் அவர்களது வயதை ஒத்த விருந்தாளிகள் முன்னிலையில் தந்தை ஏவியது பிடிக்காவிட்டாலும், மறுக்க மாட்டாமல் கடிகாரத்தைச் சரி செய்ய எழுந்த கதிருக்கு, இன்னுமொரு குன்றல் பாக்கி இருந்தது!

அந்தப் பழங்காலக் கடிகாரத்தின் முன்புறக் கதவைத் திறப்பதற்குரிய கொக்கி வெறும் ஐந்து சென்டி மீட்டர் அதிக உயரத்தில் இருந்து, அவனுக்கு எட்ட மறுத்தது!

எப்போதும் போட்டியும் சண்டையுமாக இருப்பவர்கள் தான்! ஆனால் புதிய விருந்தாளிகளின் முன்னிலையில் அண்ணனின் நிலைமையைக் கண்ட சுதிர், உள்ளே ஓடிப்போய் ஒரு சிறு ஸ்டூலை எடுத்து வந்தான்.

ஆனால், முழு பேண்ட் அணிந்திருந்த காலை மடக்கி, ஸ்டூலில் ஏறுவது இன்னமும் கடினம் என்று உணர்ந்து, தயக்கத்துடன் தாயைப் பார்த்தான் கதிர்.

விஷயம் புரிந்து, ''நாளைக்கு மாதனை விட்டுக் கடிகாரத்தைச் சரி பண்ணலாம்! இப்போது என்ன அவசரம்? அந்த ஸ்டூல் கால் வேறு ஆடுகிறது! அதிலே ஏறாதே, கதிர்'' என்று தாய் தடுக்கவும், அவளை நன்றியுடன் நோக்கித் திரும்பினான், கதிர்.

மகனிடம் முறுவலித்துவிட்டு, வீட்டைச் சுற்றிக் காட்டுவதாக, சுமதியை அபிராமி அழைக்க, மூத்த மகள் சுகேசியும் கூட எழுந்து சென்றாள்.

''ஏதாவது நல்ல ஸ்டூலைக் கொண்டு வந்து போட்டு, வேலையை முடிக்காமல் என்னடா செய்கிறாய்?'' என்று மீண்டும் பரந்தாமன் மகனை விரட்டினார்.

ஆனால், அதற்குள் அருகில் வந்து பார்த்த மதுமிதா, சுவர்க் கடிகாரத்தைச் சற்றுக் கூர்ந்து பார்த்துவிட்டு, கால்



கட்டை விரலில் எம்பி நின்று, கை நுனி விரலால் கடிகாரத்தின் வெளிக் கதவைத் திறந்து, கடிகாரத்தின் நிமிஷ முள்ளை முன்னே நகர்த்தி, நேரத்தைச் சரி செய்தாள்.

''வெரிகுட்!'' என்று பாராட்டினார் வீட்டுக்குரியவர்! கூடவே, ''உன் பெண்கள் மூவருமே நல்ல வளர்த்தி, ஈசா! கொடி மாதிரி அழகாக இருக்கிறார்கள்! மாடிக்கு வாயேன்! அங்கே பாட்டியின் பொருட்களைப் பத்திர...'' என்றவரோடு தம்பியும் கூட நடந்தார்.

பெரியப்பாவின் பாராட்டோடு திருப்தியடைந்து, மதுமதி சும்மா இருந்திருக்கலாம்!

ஆனால், அவன் தலையில் அடித்துக் கையை உதறிக் காட்டியது நினைவில் இருக்கவே, கதிருக்கு மட்டும் தெளிவாகக் கேட்கும்படி, ''குள்ள வாத்து!'' என்று சன்னக் குரலில் முணுமுணுத்துவிட்டுப் போய், சோபாவில் தன் இரட்டையுடன் அமர்ந்து, அவனை ஏளனமாகப் பார்த்தாள்.

அவளைப் பாராட்டுவது போல, மதுரிமா கையைப் பிடித்துக் குலுக்கவும், கதிர் ஆத்திரத்தில் தன்னை மறந்தான்!

தந்தைக்காகவென்று, தாயார் பல முறை உருவேற்றி வைத்திருந்த பொறுமை, கானலில் தெளித்த நீராய் இருந்த இடம் தெரியாமல் மறைந்து போய் விட, ''அட, இதென்ன டாது வேடிக்கை? இரண்டு ஒட்டடைக் குச்சிகளை, நம் வீட்டு சோபாவில் உட்கார வைத்திருக்கிறதே!'' என்று அதிசயம் போல, வியந்து பேசினான்!

சற்று உரக்கத்தான்! வந்திருப்போர் காதில் விழ வேண்டுமே!

வீட்டைச் சுற்றிக் காட்டச் சென்ற அபிராமி பின்னறையைக் காட்டிவிட்டுப் பக்கவாட்டில், இந்த அறை ஜன்னலுக்கு நேரே அப்போது வந்திருந்தாள்.

மகனின் இந்தப் பேச்சு நேராக அவள் காதில் விழவும், பதறியடித்துக் கொண்டு, வேகமாக முன்புறமாக ஓடி ஹாலுக்குள் வந்து சேர்ந்தாள்.

இரட்டையரும், பேச்சில் பின் வாங்குகிறவர்கள் அல்லவே!

''இங்கே ரொம்பவும் ஆச்சரியமாக இல்லை? பாத்ரூமில் தரை தேய்க்கிற பிரஷ்ஷை எல்லாம், ஹாலில் போட்டு வைத்திருக்கிறார்களே! கீழே கிடப்பது தெரியாமல், யாராவது மிதித்துவிட மாட்டார்களா?'' என்று சந்தேகம் கேட்டாள் மதுரிமா!

இப்போது ஜன்னலுக்கு நேரே வந்திருந்த சுமதி இதைக் கேட்டுவிட்டுப் பதைத்து, வந்த வழியே திரும்பி ஓடி, பின்புறமாக ஹாலுக்குள் வந்து நின்றாள்.

வந்த வேகத்தில் ''என்ன இது? அப்பா காதில் விழுந்திருந்தால் உன்னை...'' என்று அதட்டிப் பேசத் தொடங்கிய இரு தாய்மாரும், ஒருவரை ஒருவர் பார்த்துத் திகைத்துப் பேச்சை நிறுத்தினர்.

பிறகு அசடு வழிய, ''பெண் குழந்தைகளே இல்லாமல், வெறும் பையன்களாக வளர்ந்து விட்டார்களா? பெண் குழந்தைகள் என்றால், ஓ... ஓ... ஓர் ஒதுக்கம் வந்து விட்டது!'' என்று அபிராமி தட்டுத் தடுமாறி சமாளிக்க முயன்றாள்.

அதேபோல, ''பெண்கள் மட்டுமாக வளர்ந்ததில், பையன்களோடு பழகத் தெரியாமல்... எ... எரிச்சல் படுகிறார்கள்!'' என்று சுமதியும் திக்கித் திணறினாள்.

சுமதியின் பின்னோடு வந்து, இருவரையும் ஒரு தரம் கூர்ந்து பார்த்த சுகேசி, சட்டென நகைத்தாள்.

வெள்ளிச் சலங்கை குலுங்குவது போல இனிய மென்னகைதான்.



ஆனால், அதை ரசிக்கும் மனநிலைதான் அங்கே யாருக்கும் இருக்கவில்லை! அத்தோடு அந்தச் சூழ்நிலையில் பொருத்தமாகவும் இருக்கவில்லை!

ஆனால், ''இங்கேயும், இப்படிச் செய்யாதே, அப்படிப் பண்ணாதே என்று இங்கேயும் பிள்ளைகளை விரட்டியடிப்பீர்கள் போலத் தெரிகிறதே, பெரியம்மா?'' என்று புன்னகையோடு அவள் தொடர்ந்து கேட்க, அபிராமியின் முகத்தில் அசடு வழிந்தது!

''அது... இங்கே பெண் குழந்தைகளே இல்லாமல் வளர்ந்தார்களா? ஒரு போட்டி மனப்பான்மை வந்து விட்டது!'' என்று மேலும் விளக்கம் சொல்வதில் முனைந்தாள் அவள்.

''அங்கேயும் அப்படித்தான். பையன்களே இல்லையா...'' என்று இழுத்தாள் சுமதி.

சுகேசி குறுக்கிட்டு, ''அம்மா, பெரியம்மா, போதும், இரண்டு பேரும், சொன்னதையே சொல்லி ரொம்பவும் சிரமப்படாதீர்கள்! இரண்டு இடங்களிலும், இந்த அப்பா மார் அடித்த கூத்துதான் இது. எல்லோரையும் நன்றாக 'டிரில்' வாங்கி விட்டார்கள்! அதில், இந்தச் சின்னவர்களுக்கு எரிச்சல் வந்துவிட்டது! அதை அவர்களுக்குள் காட்டிக் கொள்கிறார்கள்! ஏறத்தாழ ஒரே வயதுதானே? சீக்கிரமே நட்பாகி விடுவார்கள். பாருங்களேன். இவர்களைப் பற்றி, நீங்கள் இருவருமே, கொஞ்சமும் கவலைப் பட வேண்டாம்!'' என்று தேறுதலாகக் கூறினாள்!

நட்பாவது, மண்ணாங்கட்டியாவது? அதுவும், இதுகளோடா என்று எண்ணி, முகத்தை வெட்டித் திருப்பியவர்களுக்கு, இது அப்பாவிடம் போகுமா? இல்லையா என்ற யோசனை வந்தது.

கலக்கத்தோடு அமர்ந்திருந்த சின்னவர்களை ஒரு தரம் நோட்டமிட்டவள், ''இன்னொரு விஷயம், பெரியம்மா! பழக்கமற்ற உடைகூட, இவர்களது எரிச்சலைத் தூண்டி விட்டிருக்கும்! மதி, மதுவின் சுடி செட் போலத்தானே, இவர்களின் இந்த முழுக் கால் பாண்ட்டும்? மாற்றி விட்டு இயல்பு போல இருக்கச் சொல்லுங்கள், பெரியம்மா!'' என்று மென்குரலில் அமைதியாகக் கூறவும், பையன்கள் இருவரும் ஆச்சரியமும் நன்றியுமாக அவளைப் பார்த் தார்கள்.

கூடவே, இவள் மாட்டி வைக்கப் பார்க்கிறாளோ என்று சிறு சந்தேகத்துடனும்.

ஆனால் தமக்கையைப் பற்றி அறிந்திருந்ததால், ''அப்படிச் சொல்லுக்கா!'' என்று குதித்தனர் தங்கைகள்.

''ஏய், ஏய், நீ சும்மா உன் விருப்பம் போலச் சொல்லா தேடி! அதைக் கேட்டு, இவர்கள் ஆடி, அப்புறம் அப்பா வந்து ஏதாவது திட்டப் போகிறார்!'' என்று மகளை அடக்க முயன்றாள் சுமதி.

பையன்களுக்கும் அது போல ஒரு சந்தேகம் இருந்த தால் கூர்ந்து கவனிக்க, சுகேசி தாயிடம் முறுவலித்தாள்.

''ஒன்றும் சொல்ல மாட்டாள்! அப்பாவும் பெரியப்பா வுமே, சங்கடத்துடன் வேஷ்டியை அவ்வப்போது தூக்கிப் பிடித்துக் கொள்வதைப் பார்த்தேனே! என்ன பெரியம்மா, நீங்கள் சொல்லுங்கள், பெரியப்பாவுக்கும் வேஷ்டி கட்டிப் பழக்கம் இல்லை தானே? லுங்கியா? பெர்முடாவா?''

தாயிடம் காட்டிய அதே புன்னகையுடன் அவள் அபிராமி யிடம் கேட்க, ''இரண்டும் தான்!'' என்று பெரியவளும் முறுவலுடனேயே மொழிந்தாள்.

தொடர்ந்து, ''ஆனால், கூர்ந்து கவனித்திருக்கிறாயே!'' என்று பாராட்டினாள்.



''அங்கே அப்பா எங்களை விரட்டும்போதே, இதை நான் எதிர்பார்த்திருந்தேன் பெரியம்மா!'' என்றாள் பெண்.

''அங்கேயே சொல்லவும் செய்தாள். எதற்கும் வழக்க மான உடைகளும் எடுத்து வைத்துக் கொள்ளும்படி, எங்களிடமும் சொன்னாள். அவள் அப்பாவுக்கும் சேர்த்து!'' என்று சுமதியும் ஒத்து ஊத, மெல்ல மெல்ல, அங்கே நகையொலி பரவலாயிற்று!

திடுமெனத் துள்ளிக் குதித்து, ''நாங்கள் உடையை மாற்றப் போகிறோம்!'' என்று கதிர் ஓட ''நானும்!'' என்று, சுதிர் அவனைப் பின் தொடர்ந்தான்.

''நாங்களும் கேப்ரிக்கு மாற வேண்டும்! எங்கள் பெட்டி கள் எங்கே? நாங்கள் எங்கே உடை மாற்றுவது, பெரி யம்மா?'' என்று வினவினர் மதுவும் மதியும்!

அவர்கள் தங்கும் அறையைப் பற்றிச் சொன்னாலும், அன்னையர் இருவரும் சற்றுத் திகைப்பும் தயக்கமுமாக விழித்தனர்.

கணவன்மாருக்குக் கோபம் வந்தால், முதல் பாய்ச்சல் அவர்களிடம் தானே நடக்கும்?!

''அவர்கள் விருப்பம் போல விட்டு விடுங்கம்மா! பெரி யம்மாவும் நீங்களும் கூட, இந்தப் பட்டிலிருந்து இலகு வாக எதற்காவது மாறுங்கள்!'' என்றாள் மகள்.

சிறு அசட்டுச் சிரிப்புடன், ''நீம்மா?'' என்று அபிராமி கேட்க, ''ஒன்றரை ஆண்டுகளாக, எனக்கு, வேலைக்கு இப்படி அணிந்து சென்று பழக்கம்தான்! அதனால் சின்ன வர்களைப் போல எனக்குப் பிரச்சினையில்லை!'' என்று லேசாக முடித்த பெண்ணின் கண்களில் தோன்றிய சிறு கலக்கத்தைக் கவனியாமலே தங்களுக்குள் ஏதோ பேசிய வாறு இரு அன்னையரும் உள்ளே செல்லலாயினர்.

அவளது முக்கால் பாண்ட்டும், குட்டைக் கை டாப்பும் அவளை ரொம்பச் சின்னப் பெண்ணாகக் காட்டியிருக் குமோ?

வேறென்னவாயிருக்கும்?



## 3

முழங்கால் அளவில் தொளதொள வென கால் சட்டையும், கையில்லாத சட்டையும் அணிந்து பையன்கள் இரு வரும் வந்தபோது, ஒரு மாதப் பத்திரிகையைப் புரட்டிய படி, சுகேசி மட்டுமே ஹாலில் உட்கார்ந்திருந்தாள்.

மாடிப் படிகளிலிருந்து பேச்சுக் குரல் கேட்கவும், சுற்று முற்றும் ஒரு தரம் பார்த்துவிட்டு, ''ரொம்ப தாங்க்ஸ்... அக்கா!'' என்றுவிட்டு அவர்கள் வெளியே ஓடினர்!

என்னதான் சுகேசியின் பேச்சு சரியானதாகவே தோன் றியபோதும், தந்தை கோபப்பட்டாலும், அவளைக் கைகாட்டி விடலாம் என்ற சாக்கு இருந்தாலும், பெற்றவர் கீழே வந்து சேரும் சமயம், அவரது சொல்லுக்கு மாறாக தினப்படியான உடையுடன் அவர் முன் நிற்கப் பையன் களுக்குத் தைரியம் இல்லை என்று சுகேசி ஊகித்தாள்!

பெரியப்பா கோபக்காரராக இருப்பாரோ என்ற துணுக்கம் அப்போது அவளுக்கு உண்டாயிற்று! அவர் முன் அப்பா வும் கௌரவப் பிரச்சினையாக எடுத்துக் கொள்ளக் கூடும்!

ஆளாளுக்கு ஏதேதோ சொல்லித் தெம்பூட்டி அனுப்பி விட்டிருந்த சுகேசிக்கு இப்போது வயிற்றுக்குள் பட்டாம் பூச்சி பறக்கிற மாதிரி என்பார்களே, அது போன்ற நிலைமை தான்.

ஆனால், செய்ததில் தப்பில்லை என்ற எண்ணமும் இருந்தது.



முக்கியமாக அவளுடைய தாயால் பட்டுச் சேலையைக் கட்டிக் கொண்டு அதிக நேரம் இருக்க முடியாது!

திருமணம் போன்ற வைபவங்களுக்கு வேறு வழி யின்றிப் பட்டுச் சேலையைக் கட்டிக் கொண்டு போனாலும், வீடு திரும்பியதுமே, முதல் வேலையாக அதை அவிழ்த்து வீசிவிட்டு, நைட்டியில் புகுந்து, 'அப்பாடா' என்று சற்று நேரம் சோபாவில் விழுந்து கிடந்த பிறகுதான் சுமதிக்கு வேறு எதுவானாலும்!

அவளைப் போய், நாள் முழுவதும் பட்டுச் சேலையைக் கட்டிக் கொண்டு இருக்கச் சொன்னால் எப்படி?

திருமணங்களுக்குக் கட்டுகிற சேலை அளவுக்கு இதில் ஜரிகை இல்லை என்றாலும், பட்டின் கனம் அப் படியேதானே இருக்கும்?

உடம்பை அசௌகரியமாக வைத்துக் கொண்டு எவ் வளவு நேரம் சிரித்துப் பேச முடியும்?

அதுவும் பதினாலு நாட்கள்!

இங்கே கொஞ்சம் மாறுதல் இருக்குமோ என்று எதிர் பார்த்து வந்தால், இந்த ஒரு விஷயத்தில் அண்ணனும் தம்பியும் ஜெராக்ஸ் காப்பிகளாக இருந்தனர்!

எனவே, வேறு யாராவதுதான் மாற்றியாக வேண்டும்!

தொடங்கி விட்டாள்... என்ன வருகிறதோ பார்க்கலாம்!

வந்தது, அவளுக்கு வசதியாகத்தான் வந்தது!

மாடிப்படியில் வீட்டுத் தலைவர்களின் பேச்சுக் குரல் கேட்டு, கதிரும் சுதிரும் காணாமல் போய்ச் சற்று நேரம் கழித்துத்தான் பெரியவர்கள் அங்கே வந்து சேர்ந்தனர்.

தந்தையின் நடையில் வேறுபாட்டைக் கண்டதும் ''என்னப்பா?'' என்று வினவினாள் பெண்.

லேசாக முகம் கன்ற, ''ஒன்றுமில்லையே!'' என்று சமாளித்தார் தந்தை!

அவரைக் கூர்ந்து பார்த்துவிட்டு, ''நீங்கள் சொல்லுங்கள் பெரியப்பா! வேஷ்டி தட்டி விட்டு விட்டதா?'' என்று பரந்தாமனிடம் விசாரித்தாள்.

வியந்து நோக்கி, ''எப்படிச் சரியாகச் சொல்லுகிறாய்?'' என்று கேட்டார் அவர்!

''ஐயோ, விழுந்து விட்டாரா?'' என்று கவலையுடன் தந்தையின் அருகில் ஓடி வந்து, கலக்கத்துடன் பார்வையால் ஆராய்ந்தாள் பெண். ''சொல்லுங்கப்பா, எங்கேனும் அடி பட்டு விட்டதா?'' என்று பரபரத்தாள்.

''ஐயோ, அதெல்லாம் இல்லையம்மா! படி இறங்கும் போது வேஷ்டியில் கால் மாட்டி, இழுத்துக் கொண்டு விட்டது! கொஞ்சம் அவிழ்ந்து தொங்கியதை, எப்படியோ ஒரு மாதிரிச் சொருகி வைத்தேன். மீண்டும் மாட்டி விடக் கூடாதே என்று எச்சரிக்கையோடு நடக்கிறேன். அவ்வளவுதான்!'' என்றார் வாகீசன்.

அலுப்பை முகத்தில் காட்டினாள் சுகேசி. ''எதற்காக அப்பா, இந்தப் பாடு? பேசாமல் உங்கள் வழக்கம் போல, லுங்கியை மடித்துக் கட்டிக் கொண்டோ, பெர்முடாவை அணிந்து கொண்டோ, இயல்பாக அலையலாமில்லையா? பழக்கம் இல்லாத வேஷ்டியைக் கட்டிக் கொண்டு, பெரியப்பா வீட்டுப் புதையல்களை நீங்கள் எடுக்க நினைப்பது பேராசை, அப்பா!'' என்றாள்.

மேலே பேசாதே என்பது போலத் தந்தை அவசரமாகவும், அவருடைய அண்ணன் காணாமலும் செய்த ஜாடைகளைக் காணாதவள் போன்று சுகேசி பேசி முடித்த போது, பரந்தாமனின் முகம் சந்தோஷமாக மலர்ந்திருந்தது!



''அடடே! அப்படியானால் நீயும் வீட்டில் என்னைப் போலத்தானா? நான் என்னவோ பெரிதாக, நம் பெரியவர்களின் நல்ல நல்ல பழக்கங்களை அலட்சியப்படுத்தி, வசதி... என்று... வேஷ்டியைக் கட்டிக் கொண்டு பண்ணை வேலை செய்ய முடியாது, தெரியுமா? வசதி பார்த்து, நாகரீகம் நாடிக் கண்டபடி உடுத்தத் தொடங்கி விட்டோம். தம்பி அப்படியில்லாமல் அழகாகப் பெரியவர்களைப் பின்பற்றுகிறான்... குறைந்தது அவன் குடும்பத்தின் முன்னிலையிலாவது மதிப்பு மரியாதைகளைக் காப்பாற்றிக் கொள்ள வேண்டும் என்று நினைத்து இப்படி.... பிள்ளைகளையும் வாட்டி, நானும் இப்படி வேஷம் போட்டேன்... ஆனால் நீ அன்று வேஷ்டிதானே கட்டியிருந்தாய்?'' என்று சந்தேகம் கேட்டார் அண்ணனார்!

''ம். ஆமாம்! கோயிலுக்கு மட்டும் நான் எப்போதும் வேஷ்டிதான். ஆனால் அண்ணா, நீயும், கடைக்குச் சென்றிருந்தபோதுகூட வேஷ்டிதானே அணிந்திருந்தாய்?! அதனால்தான் நானும்... உன்னைப் போலவே...''

''ஏய், போடா! நானும் உன்னைப் போலத்தான்! கோயிலுக்குப் போய் விட்டுத்தான், அந்தக் கடைக்குள் சென்றிருந்தேன்! உன்னைக் கடையில் வேஷ்டியில் பார்த்தேனா? உன்னைப் போலவே, நானும் எண்ணி விட்டேன்!'' என்று, தம்பியைப் போலவே, அவரும் அசடு வழிந்தார்.

''ஆஹா அண்ணனுக்கும் தம்பிக்கும் எண்ணத்தில் கூட, என்ன ஒற்றுமை! பெருமைப்படுங்கள் அப்பா, பெருமைப் படுங்கள்! முகம் கூடக் காணாமல் பிரிந்து போய் முப்பது ஆண்டுகளுக்கு மேலாக ஆகிவிட்ட போதும், இருவரின் எண்ணப் போக்கும் ஒரே மாதிரி இருப்பதை நினைத்து, ரொம்பவே பெருமைப் படுங்கள்!''

என்றாள் பெண் குரலிலும் முகத்திலும் உற்சாகத்தைக் காட்டி!

''அதானே!?'' என்று ஆண்கள் இருவரும் ஒருவரை ஒருவர் பார்க்கையிலேயே இருவர் முகங்களிலும் புன் னகை விரிந்தது!

''போதும், போதும்! போய் உடை மாற்றிக் கொண்டு வாருங்கள்! வீட்டில் உங்களை இப்படிப் பார்க்க, யாரோ போல இருக்கிறது! அப்பா அப்படி விழிக்காதீர்கள். உங்களுக்கு வழக்கமான லுங்கி, பெர்முடாவும் அம்மாவை எடுத்து வைக்கச் சொன்னேன்'' என்ற மகளைப் பெருமை யுடன் பார்த்தார் தந்தை.

''மூன்றிலும் நீ சாது என்று பார்த்தால், அதுகளை விட வாலாக இருக்கிறாயே!'' என்று திட்டுவது போலப் பாராட் டினார்!

குரலைத் தணித்து ''அம்மா, தங்கைகளையும் கூட வேறு வழக்கமானதை மாற்றிக் கொள்ளச் சொல்லு!'' என்றார் அவர்.

சன்னச் சிரிப்புடன் அவள், ''அவர்களை ஏற்கெனவே உடை மாற்றிக் கொள்ளச் சொல்லிவிட்டேன்! பெரியம்மா, தம்பிகளையும் கூட!'' என்று மகள் கூற, ''இது ரொம்பப் பெரிய வால்!'' என்று பெருமையாக உரைத்து, மகளுடன் சேர்ந்து நகைத்தார் அவர்!

வசதியில்லாத ஆடைகள்தான் எல்லோரின் மன நிலையையும் கெடுத்து ஆத்திரப்பட வைத்தது. அது மாறியதோடு, மனநிலையும் சமனப்பட்டு விடும் என்று சுகேசி நினைத்திருந்தால், அவளுக்கு ஏமாற்றம்தான்!

சின்னவர்களுக்கு இடையே இருந்த போட்டா போட்டி சற்றும் குறைவதாகவே இல்லை!



பையன்களின் ஒட்டடைக் குச்சியையும், பெண்கள் சொன்ன தரை தேய்க்கும் பிரஷ்ஷையும் இரு சாராருமே மறப்பதாக இல்லை!

இந்தப் பையன்களுக்கு நாங்கள் குறைவா என்பது மது, மதியருக்கு! என்ன இந்தப் பெண்கள் என்று, கதிரும் சுதிரும் விறைத்துக் கொண்டு நின்றார்கள்!

எனவே, இரு பிரிவுக்கும் நடுவே துரும்பைக் கிள்ளிப் போட்டால் பற்றி எரிந்துவிடும் போலப் பனிப்போர் ஒன்றும் நடந்து கொண்டே இருந்தது!

சிறு வாய்ப்புக் கிடைத்தாலும், அதைப் பற்றிக் கொண்டு, அடுத்தவரைக் குட்டுவது, இரு பாலாருக்கும் மூச்சு விடுவது போல அத்தியாவசியம் ஆகிப் போயிற்று!

வீட்டு ஆண்கள் வரை போய்விடக் கூடாது என்று, அன்னையர் இருவரும் எவ்வளவு முயன்றும் பலன் இருக்கவில்லை!

ஒரு நாள், ''எங்கள் வீட்டிலிருந்து, அவ்வப்போது பச்சை முந்திரி வரும்! அது போட்டுக் குழம்பு வைத்தேன். பிடித்திருக்கிறதா?'' என்று பிள்ளைகள் உணவருந்தும் போது, அபிராமி வினவினாள்.

''இன்னும் கொஞ்சம் சாதமும் குழம்பும் வையுங்கள். சாப்பிட்டுப் பார்த்துச் சொல்லுகிறோம்!'' என்று காலியாகி யிருந்த தட்டை நீட்டினாள் மது!

''வையுங்கள் அம்மா! அப்படியாவது, இந்த எலும்புக் கூடுகளின் மேல் சதை மூடட்டும்! ஒட்டடைக் குச்சி களைப் போலப் பார்க்க சகிக்கவில்லை!'' என்றான் கதிர் அவசரமாக!

வெட்டுவது போலப் பார்த்துவிட்டு, ''ஓகோ! இந்தப் பம்ப்ளிமாஸ்கள், எப்படி, இப்படி ஆயின என்று மண

டையை உடைத்து யோசித்தேன்! இப்போதுதான் தெரிகிறது!'' என்றாள் மதி பதிலுக்கு!

''கரெக்ட்!'' என்றாள் மது.. ''சரியாகச் சொன்னாய்!''

''ஷ்! பெரியம்மா உங்களுக்கு ஆசையாக ஒன்று செய்து தந்தால், இப்படியா பேசுவது?'' என்று தன் பெண்களைக் கண்டித்தாள் சுமதி.

''அம்மா, ஆன்ட்டி சமையல் ஐந்து நட்சத்திர ஹோட்டல் விருந்து! ஆனால், அதற்காகச் சாப்பாட்டைத் தினமும் பெரும்பிடியாகப் பிடித்தால் எப்படி?''

''பெரும்பிடியாம்டா...! ஒல்லியாக இருக்க வேணும் என்று சிறு பிடிகூடச் சாப்பிடாமல், வத்தலும் தொத்தலுமாக இருக்கிறதுகளின் பேச்சைப் பாருடா!'' என்று சுதிர் சொல்ல, ''பார்த்தேன்! நம் வாட்ச்மேன் வீட்டுக்குக் கூட்டிப் போனால், அடுப்புப் பற்ற வைக்கிற சுள்ளியாக்கும் என்று கைகாலை ஒடித்து அடுப்பில் வைத்து விடுவாள் அவன் மனைவி!'' என்று சுதிர் அண்ணனுக்கு ஒத்துப் பாடினான்.

''நாங்கள் ஒன்றும், அவ்வளவு ஒல்லியில்லை!'' என்று மது, மதி ஆத்திரத்தோடு கத்த, ''ஒல்லிதான்! ஒல்லிதான்! சுள்ளிக் குச்சி மாதிரி ஒல்லிதான்!'' என்று பையன்கள் கத்தினார்கள்!

வீட்டுத் தலைவர்கள் இருவரும் பண்ணைக்குப் போயிருந்ததால், இரு அன்னையருக்கும் சிரிப்புதான் வந்தது!

''பாருங்களேன் சுமதி! இங்க அண்ணனுக்கும் தம்பிக்கும் எந்நேரமும் குடுமிப்பிடிச் சண்டையாக இருக்கும்! தாவாவைத் தீர்த்து வைப்பதற்குள், எனக்குப் போதும், போதும் என்று ஆகிவிடும்! இப்போது என்னவோ,



ராமலட்சுமணன் போல, பசை போட்ட மாதிரி ஒட்டிக் கொள்கிறார்களே!'' என்று அதிசயித்தாள் அபிராமி!

''நானும் அதையேதான் நினைத்தேன்!'' என்றாள் சுமதியும், ''பொதுவாகப் பெரியவள் கொஞ்சம் ஒதுங்கிப் போவாள். அதுவும் வேலை பார்க்கத் தொடங்கிய பிறகு, பெரிய மனுஷி மாதிரி, போட்டியே போடுதில்லை! ஆனால், சின்னது இரண்டும், ஒரே வயிற்றுக்குள் இருந்தும், ஒருவர் கழுத்தை ஒருவர் நெறிக்காமல், எப்படித்தான் உருப்படியாகப் பிறந்தார்களோ என்று எனக்கு அதிசயமாக இருக்கும்!''

''போங்கம்மா! சமயம் பார்த்து மானத்தை வாங்குவதைப் பாரேன்!'' என்று இரட்டையர் குறைப்பட்ட போதும், எல்லோருக்குமே சிரிப்புதான் வந்தது.

''ஆமாம். ஆமாம்! இப்போது நன்றாகச் சொல்லுவீர்களே! என்னவோ பெரிதாக பாண்டவர்களும் கௌரவர்களும் எதிரிகளாகச் சண்டையிட்டாலும், பொது எதிரி வரும்போது, ஒன்றாகச் சேர்ந்துகொள்ள வேண்டும் என்று தருமர் தம்பிகளுக்குப் புத்தி சொன்னதாக, அழகாகக் கதை சொல்வீர்களே! நாங்களும் சேர்ந்திருந்தால், அதற்கும் குறைப்படுகிறீர்களே?'' என்று கேட்டார்கள் பையன்கள்!

''அதேதான்! எங்களுக்கும் இந்தக் கதை சொல்லியிருக்கிறீர்கள்தானே? தேவைக்கு நாங்கள் சேர்ந்து கொண்டால், அப்புறம், அதற்கும் இப்படியொரு குறை சொல்வதா?'' என்று ஒருத்தியும், ''அதானே?'' என்று அடுத்தவளும் சேர்ந்து, தங்கள் தாயைக் கேட்டார்கள்!

''அதானே?''

''அதானே?''

இப்படி இரண்டு மூன்று தரம் இப்படியே சொல்லிக் கொண்டிருந்தவர்கள், பெரிய மூன்று பெண்களும் நகைப்

பதைப் பார்த்ததும், சட்டென நிறுத்திக் கொண்டு, அடுத்த வரைப் பார்த்தார்கள்!

இரு பாலாரும் ஒத்துப் போய் விட்டார்களே!

''இதில், நானும் சுதிரும் பாண்டவர்கள்!'' என்றான் கதிர்.

''இல்லையில்லை! நானும் மதுவும்தான் பாண்டவர்கள்!'' என்றாள் மதி!

இல்லையில்லை, இல்லையில்லை என்று இருதரம் பாடிய பிறகு, ''பெயரைப் பார்! மதியாம்! இங்கெல்லாம், மதி பிடித்தவர்கள் என்றால் பைத்தியம் பிடித்தவர்கள் என்று அர்த்தம்!'' என்றான் பையன், ஏதோ பெரிதாக மட்டம் தட்டுவதுபோல!

''ஆமாம்! மதியைக் கையில் பிடித்தவனை அப்படித்தான் சொல்ல வேண்டும்! மதியை மண்டைக்குள் வைத்து, அதைச் செயல்படுத்தி ஜெயிக்கிறவர்கள் ரொம்பவும் புத்திசாலிகள்! எங்களைப் போல!'' என்று திருப்பினாள் மதி!

வெளியே ஜீப் வருகிற சத்தம் கேட்டதும், ''போதும் சண்டை! அப்பாக்கள் வரும்போது, எல்லோரும் சிரித்த முகமாக இருங்கள்!'' என்று எச்சரித்தாள் அபிராமி!

அப்போதைக்குச் சச்சரவின்றி இருந்தாலும், அப்பாக்கள் தலை மறைந்ததுமே, போட்டா போட்டிகள் தொடங்கி விடும்!

மறுநாளில், இந்த 'புத்தி'யை வைத்தே ஒரு சண்டை உருவாயிற்று!

''எங்களை ஒரு நாளும் உங்களால் மட்டம் தட்ட முடியாது! ஏனென்றால், அதற்கு, மண்டைக்குள் நிரம்பப் புத்தியிருக்க வேணும்! அதுதான் அங்கே அடியோடு கிடையாதே!'' என்று கெக்கலித்தார்கள் பையன்கள்!



''ஒரு பொருள் ஓர் இடத்தில் இருக்கிறதா, இல்லையா என்று தெரிந்துகொள்ள, அந்தப் பொருள் அவர்களிடம் இருக்க வேண்டும்! அல்லது, அது பற்றிக் குறைந்த பட்ச அறிவாவது வேண்டும்! இரண்டுமே இல்லாதபோது...'' என்று கிண்டலாக இழுத்தாள் மதுமதி!

அதே கிண்டலாகவே திருப்பிக் கொடுப்பதாக எண்ணி, ''சரியான பேச்சு! விஷயம் புரியக் குறைந்த பட்ச அறிவேனும் வேண்டும்தான்!'' என்றான் சுதிர்.

அவ்வளவுதான்! ''காப்பிக் கேட்! காப்பி கேட்!'' என்று பெண்கள் இருவரும் குதிக்கத் தொடங்கி விட்டார்கள்!

''ஏய், ரொம்பத்தான் குதிக்காதீர்கள்!'' என்று சுமதி கண்டித்ததைக் காதிலேயே வாங்கிக் கொள்ளாமல், குதித்தபடியே, ''காப்பிக் கேட்! சுயமாய் ஒன்றுமே கிடையாது'' என்று கத்தினார்கள் பெண்கள்!

பெண் குழந்தைகள் மீது உள்ள ஆசையில், அபிராமியும் முறுவலிக்க,

''சுயமாகத்தானே? இதோ இருக்கிறதே!'' என்று கையை நீட்டிக்கொண்டு, கதிர் முன் வந்தான்!

''ஆஹாங், கை நீட்டுகிற வேலைதானே வைத்துக் கொள்ளக் கூடாது!'' என்று குறுக்கே வந்தாள் அபிராமி!

''இதுங்களும்தான், என்ன குதி குதிக்கிறார்கள்! அவர்களுக்குக் கோபம் வராதா?'' என்று சுமதி அவர்களுக்கு வக்காலத்து வாங்கினாள்!

''சும்மாவே குள்ளம்! நாம் குதித்தால் இடுப்புக்குத்தான் வருவார்கள் போல!'' என்று கிளுக்கிச் சிரித்தாள் மதுமதி.

''மக்கு!'' என்றாள் அங்கே அமர்ந்து, ஏதோ பக்கத்தைப் படித்துக் கொண்டிருந்த சுகேசி, ''மிஞ்சி மிஞ்சி இன்னமும் ஓர் ஆண்டு காலம் தான் நீங்கள் இருவரும் வளருவீர்கள்.

கதிருக்கும் சுதிருக்கும் இன்னும் ஐந்தாறு ஆண்டு கால வளர்ச்சி இருக்கிறது. தெரியுமா? ஆண் பிள்ளை வளர்த்தி வேறு! அதனால், குறைந்த பட்சமாக இந்த விஷயத்தில் அலட்ட வேண்டாம்! பின்னால் அசடு வழிய நேரும்!'' என்றாள் சற்றே புத்தி கூறும் குரலில்!

பையன்கள் சட்டைக் காலரைத் தூக்கிவிட்டுக் கொண்டு போக, ''நீ எங்களுக்கு அக்காவா? இல்லை அவர்களுக்கா?'' என்று ஆத்திரப்பட்டார்கள் தங்கைகள்!

ஒரு நாள் தான் அணிய எண்ணியிருந்த கிரிஸ்டல் தொங்கட்டான்களை, முந்திக்கொண்டு எடுத்து அணிந்து விட்டதாகத் தன் இரட்டையிடம் வாக்குவாதம் பண்ணிக் கொண்டிருந்தாள் மதுரிமா!

''என் டாப்புக்கு அது பொருத்தமாக இருந்தது. அணிந்து கொண்டேன்! அதை, நீ என்ன கேட்பது?'' என்று முகத்தைத் திருப்பிக் கொண்டாள் மற்றவள்.

''இல்லை! அதில் இடையிடையே சிவப்பு மணிகள் இருப்பதால், என்னுடைய பாவாடைக்குத்தான் ரொம்பப் பொருத்தம்! கழற்றிக் கொடு!'' என்று நின்றாள் முன்னவள்!

இருவருக்கும் இடையே சத்தம் உயர, பந்தயம் போல, வேகமாக சைக்கிளை ஓட்டி வந்து நிறுத்திய பையன்கள் காதில் இந்தச் சண்டை விழுந்தது!

தங்களுக்குள் நடந்த சைக்கிள் போட்டி மறந்துவிட, அல்வா தின்ற உணர்வோடு இருவரும் உள்ளே ஓடிச் சென்றனர்.

சற்று நேரம் வேடிக்கை பார்த்த சகோதரிச் சண்டை இன்னமும் முடிவுக்கு வராததைக் கண்டு, ''ஒரு சின்ன போலி நகைக்கு அடித்துக் கொள்வதைப் பார்! இந்தப்



பெண்களே இப்படித்தான்... சரியான லூசுகள்!'' என்று ஏளனமாக விமர்சித்தான் கதிர்!

''செம லூசுகள்!'' என்று சுதிரும் சேர்ந்து சிரிக்க, ஆத்திரத்துடன் அவர்கள் பக்கம் திரும்பினர் இரட்டையர்.

''பெண்களைப் பற்றிக் குறைவாகப் பேசாதே!'' என்று கத்தினாள் மதுமதி கோபமாக. ''இத்தனூண்டு தொங்கட்டானுக்கு இதுவும் தங்கமோ பிளாட்டினமோ இல்லாத வெறும் போலி, அதற்காக இப்படி அடித்துக் கொள்கிறீர்கள்! நீங்கள் மகா புத்திசாலிகளாக்கும்! பெண்களே அசடுகள்! பேக்குகள்! செமி கிராக்குகள்!'' என்று உற்சாகத்துடன் கூவினான் கதிர்!

''நன்றி கெட்டதுகள்! பெரிதாகப் பேசுகிறாயே, எங்கள் அக்கா சுகேசியும் பெண்தானே! அவள் மட்டும் ஏற்பாடு பண்ணாவிட்டால், துரைகள் இப்படித் தொள தொளா பொம்முடாவிலா அலைவீர்கள்? நல்ல நீளமான முழுக்கால் பாண்ட்டும், அரைக்கை சட்டையுடன் நடக்க முடியாமல் நடந்து, சின்ன ஸ்டூலில் கூட ஏற முடியாமல் அசடு வழிய வேண்டியதுதான்!'' என்ற முதல் நாள் சம்பவத்தை நினைவூட்டிக் குத்தினாள் மதுரிமா!

அவமான உணர்வை அடக்கும் முயற்சியும் கோபமுமாக முகம் சிவக்க ''ஒன்றும் மாட்டோம்!'' என்று கதிரும், சுதிரும் ஒன்றாகச் சேர்ந்து கத்திப் பதில் சொன்னார்கள்! ''உன் அக்கா முந்திக் கொண்டாள். மற்றபடி, எங்கள் அண்ணன் வந்து சேர்ந்ததுமே, எப்படியும் உடை மாறியிருக்கும், தெரியுமா?''

''கிழித்தான்! அவனும் சேர்ந்து, உங்களை மாதிரி, முட்டி மடக்க முடியாமல் திணறித் திண்டாடிக் கொண்டு கிடந்திருப்பான்! பெரிதாக அளப்பதைப் பார்!''

சின மிகுதியில் பேச்சு வராமல் சற்று நேரம் திணறி விட்டு, ''இரு, இரு! எங்கள் சிவாண்ணன் வந்த பிறகு, இப்படிப் பேச முடிகிறதா என்று பார்ப்போம்! அப்போது, வாயைப் பிளந்து கொண்டு 'ஙே' என்று விழிப்பீர்கள்!'' என்று முடித்தார்கள் பையன்கள்!

அலட்சியமாக உச்சுக் கொட்டிவிட்டு, ''இவர்கள் அண்ணன் 'ஙே' என்று விழிக்கப் போகிறான்! அதைப் பார்த்து, இதுகள் அவனுக்கு மேல் விழிக்கப் போகிறார்கள்! இந்த அழகில், நம்மை மிரட்டுகிறார்கள்! பூ!'' என்றவாறே, பையன்களைத் தொடர்ந்து உள்ளே சென்றார்கள் பெண்கள்!

உள்ளே மக்கள் இருவரும் தாயிடம் ஏதோ பொருமிக் கொண்டிருந்தார்கள்.

அதைக் கேட்டுவிட்டு, அபிராமி முறுவலித்து, ''டேய், உங்களுக்கு அக்கா தங்கை இல்லாததால், அந்த அருமை உங்களுக்குப் புரியவில்லை! மது, மதியின் வேடிக்கைப் பேச்சே பெரிதாகத் தெரிகிறது! எல்லாம், கிட்டி முட்டி ஒரே வயதுதானே? அதுதான், எதையும் போட்டியாக நினைப்பதை ஒதுக்கிவிட்டு, வேறு மாதிரி எண்ணிப் பாருங்கள்! சுகியிடம் உங்களுக்கு அன்புதானே?'' என்று கேட்டாள்.

''அன்பு என்றெல்லாம் கிடையாது! ஆனால், தங்கைகள் மாதிரி பேய், பிசாசுத்தனம், அந்த சுகியக்காவுக்குக் கொஞ்சமும் இல்லவே இல்லை! அந்த மட்டும் பரவாயில்லை என்கிற அளவில் பிடிக்கும்! அதைப் போய், அன்பு, கின்பு எனாதீர்கள்! கேட்டு என் காது சகிக்காது!''

கேட்டுக் கொண்டு நின்ற இரு பெண்களும் ஒருவரை ஒருவர் பார்த்த பார்வையில் வஞ்சினம் இருந்தது!

உடன் பிறந்தவளிடம் உதட்டின் மேல் விரல் வைத்துக் காட்டி, வெளிப்புறம் அழைத்துச் சென்ற மதுமதி, அங்கே



பையன்கள் விட்டுச் சென்றிருந்த சைக்கிள்களைச் சுட்டிக் காட்டினாள்!

''யாஹூ!''

கூச்சலைக் கேட்டு ஓடி வந்த பையன்கள் பார்த்தது, சைக்கிள்களின் பின்புறத்து சிவப்புக் கண்ணாடிகளை மட்டும்தான்! அவையும் விரைவிலேயே கண்ணுக்கு மறைந்து போயின!

ஆத்திரத்துடன் தாயை முறைத்தனர், சைக்கிளுக்கு உரியவர்கள்!

''என்னமோ, அப்பாவுடைய பிரியமா...ன உறவினருடைய பெண்கள், நல்....லவர்கள் என்பீர்களே! ரொம்...ப நல்லவர்கள்தான்! அடுத்தவரின் சைக்கிள்களை, அவர்களிடம் கண் பார்வையிலேனும், ஒரு சின்ன அனுமதி கூடப் பெறாமல் எடுத்துக் கொண்டு சுற்றப் போயிருக்கிறதுகள்! அவர்கள், ரொம்பவும் நல்லவர்களாக்கும்! முட்டாள்கள்! மட்டிகள்!'' என்று சினத்தில் கத்தினர்.

''அந்த மட்டிகளுக்கு, சைக்கிள்களை ஓட்டவேனும் தெரியுமோ, என்னவோ?''

''மது மதிக்குத்தானே? அருமையாக ஓட்டுவார்களே!'' என்றாள், சுகேசி. ''ஆனால் உங்களிடம் அனுமதி கேளாமல் உங்கள் சைக்கிள்களை, அவர்கள் இருவரும் எப்படி எடுத்துச் சென்றார்கள் என்பது எனக்கும் புரியவில்லை என்றாலும், பள்ளி சைக்கிள் ஓட்டும் போட்டியில், முதல், இரண்டாவது பரிசு எப்போதும் இவர்களுக்குத்தான்! அதனால், ஓட்டத் தெரியுமோ, இல்லையோ என்று வீணே கவலைப்பட வேண்டாம்!'' என்று முறுவலித்தாள் அவள்.

எதிர்பாராமல் அவளது குரலைக் கேட்டு சிவந்திருந்த இருவர் முகங்களிலும் இப்போது எரிச்சல் தென்பட்டது!

சின மிகுதியில் பேச்சு வராமல் சற்று நேரம் திணறி விட்டு, ''இரு, இரு! எங்கள் சிவாண்ணன் வந்த பிறகு, இப்படிப் பேச முடிகிறதா என்று பார்ப்போம்! அப்போது, வாயைப் பிளந்து கொண்டு 'ங்ே' என்று விழிப்பீர்கள்!'' என்று முடித்தார்கள் பையன்கள்!

அலட்சியமாக உச்சுக் கொட்டிவிட்டு, ''இவர்கள் அண்ணன் 'ங்ே' என்று விழிக்கப் போகிறான்! அதைப் பார்த்து, இதுகள் அவனுக்கு மேல் விழிக்கப் போகிறார்கள்! இந்த அழகில், நம்மை மிரட்டுகிறார்கள்! பூ!'' என்றவாறே, பையன்களைத் தொடர்ந்து உள்ளே சென்றார்கள் பெண்கள்!

உள்ளே மக்கள் இருவரும் தாயிடம் ஏதோ பொருமிக் கொண்டிருந்தார்கள்.

அதைக் கேட்டுவிட்டு, அபிராமி முறுவலித்து, ''டேய், உங்களுக்கு அக்கா தங்கை இல்லாததால், அந்த அருமை உங்களுக்குப் புரியவில்லை! மது, மதியின் வேடிக்கைப் பேச்சே பெரிதாகத் தெரிகிறது! எல்லாம், கிட்டி முட்டி ஒரே வயதுதானே? அதுதான், எதையும் போட்டியாக நினைப்பதை ஒதுக்கிவிட்டு, வேறு மாதிரி எண்ணிப் பாருங்கள்! சுகியிடம் உங்களுக்கு அன்புதானே?'' என்று கேட்டாள்.

''அன்பு என்றெல்லாம் கிடையாது! ஆனால், தங்கைகள் மாதிரி பேய், பிசாசுத்தனம், அந்த சுகியக்காவுக்குக் கொஞ்சமும் இல்லவே இல்லை! அந்த மட்டும் பரவாயில்லை என்கிற அளவில் பிடிக்கும்! அதைப் போய், அன்பு, கின்பு எனாதீர்கள்! கேட்டு என் காது சகிக்காது!''

கேட்டுக் கொண்டு நின்ற இரு பெண்களும் ஒருவரை ஒருவர் பார்த்த பார்வையில் வஞ்சினம் இருந்தது!

உடன் பிறந்தவளிடம் உதட்டின் மேல் விரல் வைத்துக் காட்டி, வெளிப்புறம் அழைத்துச் சென்ற மதுமதி, அங்கே



பையன்கள் விட்டுச் சென்றிருந்த சைக்கிள்களைச் சுட்டிக் காட்டினாள்!

''யாஹூ!''

கூச்சலைக் கேட்டு ஓடி வந்த பையன்கள் பார்த்தது, சைக்கிள்களின் பின்புறத்து சிவப்புக் கண்ணாடிகளை மட்டும்தான்! அவையும் விரைவிலேயே கண்ணுக்கு மறைந்து போயின!

ஆத்திரத்துடன் தாயை முறைத்தனர், சைக்கிளுக்கு உரியவர்கள்!

''என்னாமோ, அப்பாவுடைய பிரியமா...ன உறவினருடைய பெண்கள், நல்....லவர்கள் என்பீர்களே! ரொம்...ப நல்லவர்கள்தான்! அடுத்தவரின் சைக்கிள்களை, அவர்களிடம் கண் பார்வையிலேனும், ஒரு சின்ன அனுமதி கூடப் பெறாமல் எடுத்துக் கொண்டு சுற்றப் போயிருக்கிறதுகள்! அவர்கள், ரொம்பவும் நல்லவர்களாக்கும்! முட்டாள்கள்! மட்டிகள்!'' என்று சினத்தில் கத்தினர்.

''அந்த மட்டிகளுக்கு, சைக்கிள்களை ஓட்டவேனும் தெரியுமோ, என்னவோ?''

''மது மதிக்குத்தானே? அருமையாக ஓட்டுவார்களே!'' என்றாள், சுகேசி. ''ஆனால் உங்களிடம் அனுமதி கேளாமல் உங்கள் சைக்கிள்களை, அவர்கள் இருவரும் எப்படி எடுத்துச் சென்றார்கள் என்பது எனக்கும் புரியவில்லை என்றாலும், பள்ளி சைக்கிள் ஓட்டும் போட்டியில், முதல், இரண்டாவது பரிசு எப்போதும் இவர்களுக்குத்தான்! அதனால், ஓட்டத் தெரியுமோ, இல்லையோ என்று வீணே கவலைப்பட வேண்டாம்!'' என்று முறுவலித்தாள் அவள்.

எதிர்பாராமல் அவளது குரலைக் கேட்டு சிவந்திருந்த இருவர் முகங்களிலும் இப்போது எரிச்சல் தென்பட்டது!

ஓரக் கண்ணால் பார்த்துவிட்டுத் தலையில் லேசாக அடித்துக் கொண்டான், கதிர்! ''வெறும் தரையில் ஓடுவது வேறு! ஏற்றமும் இறக்கமுமாக இருக்கும், இந்த மலைத் தரையில் சைக்கிளை ஓட்டுவது, வேறு! இறங்கும்போது எளிதாக இருந்தாலும், ஏறும்போது, தாவு தீர்ந்து விடும்!''

''அதைவிடு! 'பாலன்ஸ்' தவறி, கீழே விழுந்தால், எந்தப் பள்ளத்தில் போய், எப்படி விழுவார்களோ! பெரிய சரிவு என்றால், எலும்பு நொறுங்கிப் போகுமே!'' என்றான், அடுத்தவன்.

''ஐயையோ! இப்போது என்ன செய்வது? பெண் பிள்ளைகளடா!'' என்று கவலையோடு கூறினாள் அபிராமி!

சட்டென முகம் சுளித்து, ''ஏன், பெண்களுக்கு மட்டும் தான் அடிபட்டால் வலிக்குமா? அல்லது, அவர்களுக்கு மட்டும் அடிபட்டுவிடக் கூடாது என்று ஏதாவது சட்டம், கிட்டம் இருக்கிறதா?'' மீண்டும் எரிச்சல்பட்டான் பெரியவன்.

''எங்கள் சைக்கிள்கள் என்ன கதி ஆகுமோ என்று, ஒரு சிறு கவலை கூட உங்களுக்கு இல்லையே!'' என்ற பொருமல் தொடர்ந்தது!

''அதுவும் சரிதான். அத்தோடு, பெண்களுக்காகத் தனியாகப் பார்க்க வேண்டியது என்றும் இல்லைதான்!'' என்று பையன்களிடம் சமாதானமாகப் பேசினாள் சுகேசி.

''ஆனால், இப்போது அவர்களை எப்படி எச்சரிப்பது?'' என்று தமக்கையாகக் கவலையுடன் கேட்டாள்.

''ஆமாம், எப்படியாவது எச்சரிக்க வேண்டும்! அவர்கள் இருவரில் யாராவது, செல்போன் வைத்திருக்கிறார்களா, சுகிம்மா?'' என்று வினவினாள் அபிராமி.

''எங்காவது வெளியே போவதானால், அம்மாவினதை வாங்கிப் போவார்கள்! இப்போதுதான் துணிகளை மடித்துக்



கொண்டிருந்த அம்மா பக்கத்தில் செல்லைப் பார்த்து விட்டு வந்தேன். அத்தோடு இரண்டு அசடுகளுமே, சொல்லாமல் கொள்ளாமல் அல்லவா, சைக்கிளை எடுத்துப் போயிருக்கிறார்கள்!'' என்று கவலையோடு கையைப் பிசைந்தாள் சுகேசி.

நாலு பேருமே கலக்கத்துடன் ஒருவரை ஒருவர் பார்த்து விழித்தார்களே தவிர, அப்போது என்ன செய்வது, என்று யாருக்குமே புரியவில்லை!



# 4

பழக்கமற்ற மலைப் பாதையில், வெறும் வீம்புக்காகக் கதிர், சுதிரின் சைக்கிள்களை வேகமாக ஓட்டிச் சென்றவர்களைப் பற்றி, அங்கிருந்த நாலு பேருக்குமே, கவலையாகி விட்டது!

கதிரும், சுதிரும் இருட்டில்கூட ஓட்டுவார்கள்தான்! அந்த அளவுக்கு, அவர்களுக்குப் பழக்கமான பாதை, சுற்று வட்டாரம் அது!

ஆனாலும், மழை, மூடுபனி நேரத்தில், அவர்களையே அபிராமி சைக்கிளை வெளியே எடுத்துச் செல்ல விட மாட்டாள்!

''உங்களுக்குப் பாதை தெரியும்! கண்ணை மூடிக் கொண்டு ஓட்டுவீர்கள்! ஆனால், இந்தப் பகுதியில் வரக் கூடிய மற்றவர்கள் எப்படி என்று, என்ன தெரியும்? அதனால் வேண்டாம்!'' என்று ஒரேயடியாக மறுத்து விடுவாள்!

வெகு அபூர்வமாக மறுக்கிறவள் என்பதால், அவளது சொல்லுக்கு, அங்கு மதிப்பும் இருந்தது!

ஆனால், முதல் முறையாக வந்திருக்கும் இந்தப் புது விருந்தாளிகளுக்கு, இந்த இடமும் தெரியாது! இங்குள்ள விதிகளும் தெரியாது!

எந்தப் பக்கமாக, ஆபத்தான செங்குத்துச் சரிவுகள் இருக்கின்றன என்றுகூடத் தெரியாதே!

ஆட்களை அனுப்பித் தேடச் சொல்வதற்கும், என்ன வென்று விவரம் சொல்லி, எதில் அனுப்புவது?

தொழில் தொடர்பாக. ஒரு காரில் வீட்டு ஆண்கள் மதுரைக்குச் சென்றிருக்க, வாகீசன் வந்த காரை, அந்த மலைப் பாதையில் ஓட்ட, சுகேசிக்கும் தைரியம் இருக்க வில்லை!

ஆனாலும் வேறு வழியில்லை என்று, அவள் கார் அருகில் செல்லத் தொடங்கியபோது, ''ஹேய்!'' என்று துள்ளிக் குதித்தான் கதிர்!

"என்ன?" என்று எல்லோரும் அவனைப் பார்க்கையில், சின்னவனும் துள்ளி, ''சிவாண்ணன் அம்மா!'' என்றான்.

''அம்மா, அண்ணன் கார் ஹார்ன் கேட்கவில்லை? உங்களில் யார் செல்போன் வைத்திருக்கிறீர்கள்? சீக்கிரம் கொடுங்கள்! அண்ணனுக்குச் சொல்லி, வரும் வழியில் நம் அ...ரு...மை விருந்தாளிகளைப் பார்த்துப் பத்திரமாகக் கூட்டிவரச் சொல்வோம்! அதாவது, அதுவரை அவர்கள் உருப்படியாக இருந்தால்!'' என்ற ஒரு நக்கலுடன், சுகேசி நீட்டிய செல்போனை வாங்கி, கதிர், தன் அண்ணனிடம் விவரம் சொன்னான்!

அந்த முனையில் என்ன சொல்லப்பட்டதோ, ''சரிண்ணா!'' என்று திரும்பி, ''இரண்டில் ஏதோ ஒன்று, ஒரு பேரி மரத்தில் முட்டிக் கொண்டு நிற்கிறதாம். திடீரென்று அன்னியராக அண்ணன் சொன்னால் காரில் ஏறுவார்களோ, மாட்டார்களோ என்று, பொறுப்புள்ள



யாரையாவது உங்கள் தங்கைகளிடம் பேசச் சொன்னான் அண்ணன்! பேசுங்கள்!'' என்று செல்போனை சுகேசி யிடம் நீட்டினான் கதிர்.

கெட்டிக்காரத்தனமான யோசனை என்று மனதுள் பாராட்டியவாறே, காரில் ஏறி வருமாறு தங்கைகளிடம் சொன்னாள் சுகேசி.

கவலையுடன் பார்த்த அபிராமியிடம், ''காயம், அடி என்று யாருக்கும், எதுவும் இல்லையாம், பெரியம்மா! வேகத்தைக் கட்டுப்படுத்த முடியவில்லை என்று கண்ட துமே, மதி குதித்து விட்டாளாம்!'' என்று அவள் மேலும் உரைக்கவும், பெரியவளின் முகம் தெளிந்தது.

''சரியான சுயநலம்! தன்னைக் காப்பாற்றிக் கொண் டாளில்லையா? ஆனால் பாவம், அந்த சைக்கிள்தான் என்ன கதியில் இருக்கிறதோ?'' என்று புலம்பினான் பெரியவன்!

''யார் சைக்கிள் என்ன நிலையில் இருந்தாலும், முழுச் செலவும் உங்களதுதான், அம்மா! ஏனென்றால், இதில் எங்கள் மேல் தப்பு கிடையாது!'' என்று தாயிடம் செலவைத் தள்ளி விட்டான் சின்னவன் கதிர்!

''ஆஹா, உங்களிடம் தப்பே இராதே! சைக்கிளைப் பூட்டி நிறுத்திவிட்டு உள்ளே வந்தால், யாரால் அதை எடுத்துப் போக முடியும் என்று, அது ஒரு கேள்விதான் மனதை உறுத்துகிறது! உனக்கு அப்படி உறுத்தல் எதுவும் தோன்றுகிறதாப்பா? அல்லது, இல்லவே இல்லையா?'' என்று, கிண்டல் போலவே தாயார் கேட்டுவிட, அதற்கு மேல், பேச முடியாமல் விழித்தான் மகன்!

நல்ல வேளையாக மீண்டும் காரின் ஹாரன் ஒலி கேட்க, ''அண்ணன் பக்கத்தில் வந்து விட்டாரே!'' என்று, இருவரும் ஓட்டம் பிடித்தனர்.

''ஆன்ட்டி, நானும் அம்மாவிடம் விஷயத்தைச் சொல்லி ஒரு விதமாகத் தயார்ப் படுத்தி வைக்கிறேன்! அடியே படவில்லை என்று மது சொன்னாலும், அதில் எனக்கு முழு நம்பிக்கை கிடையாது! அத்தோடு, சொல்லாமல் சைக்கிளை எடுத்துப் போனதற்காவது, இருவரும் டோஸ் வாங்கித்தான் ஆக வேண்டும்!'' என்றுரைத்து, உள்ளே சென்றாள் சுகேசி.

கூடவே, புதிதாக வருகிற ஓர் அன்னிய இளைஞனுக்கு வரவேற்புத் தருவது போல் வாசலில் நிற்கப் பிரியம் இல்லாமலும் உள்ளே போகிறாள் என்று உணர்ந்த அபிராமி, பெண்ணை உள்ளூர மெச்சிக் கொண்டாள்.

அறிவோடு, அடக்கமும் இருக்கும் அருமையான பெண்! யாருக்குக் கொடுத்து வைத்திருக்கிறதோ?!

அதற்குள்ளாகக் கார் வந்து நின்றுவிட, ''அத்தை!'' என்று ஆவலாக இறங்கி வந்த பிள்ளையைத் தவிர்த்து உலகம் மறந்தது அவளுக்கு!

''என்னடா, துரை ரொம்பவும் பந்தா பரமசிவம் ஆகி விட்டாய் போல? ஒரு மாதமாக அழைத்து, மூன்று நாட்களுக்கு முன்னதாக வருவதாகச் சொல்லி, இன்றைக்கு வந்து சேர்ந்திருக்கிறாய்!'' என்று உரிமையோடு அண்ணன் மகனை கோபித்தாள் அவள்.

''வேலை, அத்தை, வேலை! பண்ணைப் பழத் தோட்டங்களில், பழங்களுக்குப் பதிலாப் பணமாகவே காய்த்துத் தொங்கினால், எவ்வளவோ வேலை மிச்சம் என்று, இந்தக் கடவுளுக்குத் தெரிகிறதா பாருங்கள்! வெறும் பழங்களைத்தான் பழுக்க வைக்கிறார்! அதுவும், பலதரப்பட்ட மரம், செடிகளில், பலவிதமான பழங்களை! சரியான பருவத்தில் பறித்து, தரம் வாரியாகப் பிரித்து, பக்குவமாய் 'பாக்' செய்து...''



''அப்பப்பா... நீதான் உங்கள் பண்ணையின் ஆணி வேராய் இருந்து, எப்படியெல்லாம் வெட்டி முறித்துக் கொண்டிருக்கிறாய் என்று எனக்கு நன்றாகத் தெரியும், பையா! ஆனால், இங்கே உன் மாமாவும் அதைத்தான் செய்கிறார் என்பதை அடியோடு மறந்து அதிகமாக அளக்காதே! ஆனால் ஒன்று! நல்ல சமயத்தில் மிகவும் தேவைப்பட்ட உதவியாக வந்து சேர்ந்தாய்! நீ ரொம்ப ஆசைப்பட்டால், அதை மட்டும், ஐய்யோ பாவம் என்று பாராட்ட முயற்சிக்கிறேன்!'' என்றாள் அவனுடைய அன்பான அத்தை!

''என்ன அத்தை, உங்களுக்கு உதவி செய்ய வேண்டும் என்பதற்காகவே, தேவையான தருணம் பார்த்து வந்திருக்கிறேன், அதற்காக மேடை போட்டுப் பாராட்டுப் பத்திரம் வாசித்து அளிப்பீர்கள் என்று பார்த்தால், காய்ந்த தொண்டைக்கு ஒரு வாய் பழச்சாறு கூடத் தராமல், இப்படி வாசலில் நிறுத்தி வைத்துக் குற்றப்பத்திரிகை அல்லவா வாசிக்கிறீர்கள்!'' என்று பெரிதாகக் குறைப்பட்டான் சிவா என்று அழைக்கப்படுகிற சிவநந்தன்.

''காய்ந்த தொண்டையா? இப்படி வரட்டு வரட்டென்று, தவளை மாதிரிக் கத்திக் கொண்டிருந்தால், இதைவிடக் குளிர்ந்த பிரதேசத்தில் கூடத் தொண்டை காய்ந்துதான் போகும்! வா, உள்ளே வா! பஞ்சினால் தொட்டுத் தொண்டையை நனைத்துக் கொள்கிற அளவுக்காவது, ஏதாவது தருகிறேன்! அதற்கு மேல், எங்கள் பொருளாதாரம் தாங்காதுப்பா!''

''அது சரிதான்! இரண்டே இரண்டு பண்ணைகள் தானே, என் செல்ல அத்தைக்கு இருக்கின்றன...! அது போக, மதுரை என்கிற குக்கிராமம் பக்கத்திலே ஒரு சின்ன மில்! பா...வம்! சாப்பாட்டுக்கே சிரமமாகத்தான் இருக்கும்!

எதற்கும், கூடுதலாக ஒரு கால் தம்ளர் பழச்சாறு கிடைக்குமா என்று பாருங்கள்! ஆனால், அதற்காகப் போன தரம் மாதிரி, முங்கி முக்குளிக்கிற அளவுக்குத் தண்ணீர் சேர்த்து விடாதீர்கள்!'' என்று சீரியஸாக எச்சரித்தான் சிவநந்தன்.

வியப்புடன் நோக்கி, ''என்ன தண்ணீர்? ஆன்ட்டி தருகிற பழச்சாறு எப்போதும் கெட்டியாகத்தானே இருக்கும்?'' என்று, சிறு சிராய்ப்புகளுடன் சோபாவில் சாய்ந்து கிடந்த மதி கேட்டாள்.

''அது ஒன்றும் இல்லை, மதிம்மா, சென்ற முறை இவன் வந்தபோது, மாதுளம் பழச்சாறு தயார் பண்ணிக் கொடுத்தேன்! குடிக்கப் போகிற நேரத்தில் இன்னும் ஓர் விருந்தாளியோடு, உன் அங்கிள் வந்து நின்றார். மாதுளம் சாறு தயாரிக்க நேரம் ஆகும்! இருப்பதைக் கொண்டு சமாளித்துக் கொள்ளலாம் என்று. கூடுதல் தம்ளர்களில் நிரவி ஊற்றியபோது, ஒன்றில் கொஞ்சம் அதிகமாகக் குறைந்து போயிற்று! பார்வைக்குக் குறைவாகத் தெரிய வேண்டாம் என்று, அதில் கொஞ்சம் தண்ணீரை ஊற்றிக் கொண்டு போய், இவனிடம் கொடுத்து சமாளித்தேன்! அப்போது முகம் மாறாமல் குடித்து, உதவியவன், இப்போது சொல்லிக் காட்டுகிறான்!'' என்று அபிராமி விளக்க, ''ஓஹோ!'' என்று வியப்புடனும், புது மரியாதையுடனும் சிவநந்தனைப் பார்த்தாள் மதி!

சைக்கிள் விஷயமாக வாங்கிக் கட்ட நேரும் என்று ஊகித்து, தாயிடம் செல்லாமல், இரட்டையர் இருவரும் ஹாலிலேயே சுற்றிக் கொண்டு இருந்தனர்.

'எங்கள் சிவாண்ணன்' என்று கதிரும் சுதிரும் பெருமை பேசியது ஏன் என்று புரிந்தாற்போல, அந்த சிவாவிடம் அவர்களுக்குமே, ஈர்ப்பு உண்டாயிற்று.



அதன் பலனாக, தோட்டத்துப் பக்கமாக தமக்கையின் தலை தெரியவும், அவளிடம் ஓடிப்போய், அவளை முன்புறமாக இழுத்துச் சென்றனர்!

''அக்கா, இதுதான் அந்தப் பசங்களுடைய சிவாண்ணனின் கார்! சூப்பர் கார்! உள்ளே என்னென்ன வசதி செய்து வைத்திருக்கிறார் தெரியுமா? பெரிய பணக்காரர் என்று நிச்சயமாகத் தெரிகிறது. அக்கா! பேசாமல், அவரை வளைத்துப்போட்டு விடுக்கா! இந்த சூப்பர் காரில் ஊர் சுற்ற, எங்களுக்கும் வசதியாக இருக்கும்!''

''விடுவேனா, பின்னே? நான் பிறவி எடுத்ததே. இப்படி ஒரு பணக்காரனை வளைத்துப் போட்டுப் பெரிய்ய பணக்காரி ஆவதற்காகத்தானே?'' இணக்கமாகவே உரைத்தாள் அவளும்.

அப்படியே, இரு தங்கைகளையும் கையைப் பற்றி நடத்தியவாறு ''எவ்வளவு நேரம் இப்படி அம்மாவுக்கு ஒளிந்து ஓடிக்கொண்டே இருப்பீர்கள்? போய், அம்மாவிடம் வாங்க வேண்டியதை வாங்கிக் கட்டி, விஷயத்தை முடித்து விடுங்கள்! நீங்கள் இப்படி ஓட ஓட, அம்மாவுக்குக் கோபம் கூடும் என்று தெரியும்தானே? போங்கள்! வீட்டுப் பின்புறத்துக் கீரைப் பாத்தி பக்கத்தில், உங்களுக்காகக் காத்திருக்கிறார்கள், போங்கள்! என்ன சொன்னாலும் எதிர்த்துப் பேசாமல் பணிந்து போவதோடு, கடைசியாக ஒரு சாரியும் சொல்லி விடுங்கள்!'' என்று தணிந்த குரலில் கூறி அனுப்பி வைத்தாள்!

தங்கைகள் சென்ற பிறகு, தான் எங்கே போவது என்று சுகேசி சற்றுக் குழம்பினாள்.

தங்கைகளின் பின்னோடு சென்று, சைக்கிள் விஷயமாக அவர்கள் தாயிடம் திட்டு வாங்குவதைப் பார்க்கவோ, கேட்கவோ, அவளுக்கு மனமில்லை!

முன்புறமாகச் செல்லலாம் என்றால், அந்தக் காரக்காரனை எதிர்கொள்ள நேரலாம்! அவன் இளிக்க, பதிலுக்கு இவள் ஏதாவது நல்லபடியாகச் சொல்லியாக வேண்டிய நிலை என்று நடக்கக்கூடிய தொடர்கதை, நினைக்கக் கூடப் பிடிக்கவில்லை!

வீட்டுக்குள் சென்றாலும், இதே கதைதான்!

பெரியப்பா வீட்டினரில் எல்லோரையும், சுகேசிக்குப் பிடித்திருந்தது! தங்கைகளோடு போட்டி போட்டுக் கொண்டு நின்றாலும், அந்தப் பையன்களையும் புரிந்து கொள்ள முடிந்ததால், அவர்களிடமும் அவளுக்கு இயல்பான பிரியமே!

இடையிலே பானகத் துரும்பாக, இந்தப் புதிய ஆள் வராமலே இருந்திருக்கக் கூடாதா?

ஆனால், இந்த வீட்டுக்கு அவளை விடவும் அதிகப் பழக்கமும், உறவின் உரிமையும், உள்ளவன் அவன் தான்! எனவே அவனது வரவைப் பற்றி எதிர் மறை அபிப்பிராயம் கொள்ளும் உரிமை அவளுக்குத்தான் கிடையாது!

யோசனையோடு, மலைப் பிரதேசத்துப் பண்ணை வீட்டு சுகங்களில் ஒன்றான விசாலமான தோட்டத்தில் நடந்தவளை ஜன்னல் வழியே பார்த்துவிட்டு, அபிராமி கூப்பிட்டாள்!

''உள்ளே வா, சுகி, வந்து காபி பலகாரம் எடுப்பதில் எனக்கு உதவி பண்ணு!'' என்று உரிமையோடு அழைத்தாள்.

காரிலிருந்து ஒரு நெடிய உருவம், கையில் ஏதோ பையோடு பையன்களுடன் முன்புறமாக வீட்டுக்குள் செல்வது, சுகேசியின் பார்வை வட்டத்துக்குள் பட்டது.



இனியும் தள்ளிப் போட முடியாத அறிமுகம்!

காபி, பலகாரம் கொண்டு வைக்கும்போது, நிச்சயம் அறிமுகம் நடக்கும்!

ஆன்ட்டியின் அண்ணன் மகன் வழிகிற தினுசாக இல்லாமல் இருந்தால் நல்லது!

படிக்கிற காலத்தில் ஒரு வழிசல் பார்ட்டியிடம் மாட்டிக் கொண்டு பட்டது போதும்!

வேறு வழியின்றி, அபிராமியுடன் சேர்ந்து பானம், பலகாரத் தட்டுக்களைக் கொண்டு செல்கையில், ஹாலில் சளசளவென்று பேச்சுக்குரல் கேட்டது!

''என்னடா, உன்னைப் பத்துக்குத் தூக்கிப் போட்டு விட்டார்களாமே! என்ன. பெஞ்சில் நீ உட்கார்ந்திருந்த இடம், ரொம்பவும் தேய்ந்து உடைகிற நிலைக்கு வந்து விட்டதா? இனி, இந்த பெஞ்ச் தாங்காது என்று மேல் வகுப்புக்கு விரட்டினார்கள் போல!'' என்று சீண்டிக் கொண்டிருந்தது, ஓர் ஆண் குரல்!

சிரிப்பினூடே சுகேசிக்கு ஏதோ உறுத்தும்போதே, ''என்னண்ணா, உங்கள் பழக்கத்தையெல்லாம், எங்கள் மேலே ஏற்றிச் சொல்லுகிறீர்களே! நாங்கள் எல்லாம், அம்மா கும்பிடுகிற ராமர் வகை! அவரது ஒரே அம்பு போல, நாங்களும் ஒரே முயற்சிதான்! நேரே அடுத்த வகுப்புதான்! வேண்டுமானால், அம்மாவிடம் கேளுங்கள்!'' என்று ரோஷமாகப் பதில் கொடுத்தான் கதிர்!

''சரியா...ன சாட்சி! வேலிக்கு ஓணான் சாட்சி என் பார்களே, அதுபோல, அத்தையும் ரொம்பவும் சரியாகச் சொல்வார்கள்! என்ன அத்தை, அப்படித்தானே?'' என்று கையில் பலகாரத் தட்டுடன் ஹாலினுள் வந்து கொண்டிருந்த அபிராமியைப் பார்த்துக் கிண்டலாகக் கேட்டான் அன்று வந்த விருந்தாளி!

அவன்...!

இவனோ, இந்த வீட்டுக்கு ஒரு மூத்த பிள்ளை போல, எல்லோராலும் விரும்பப்படும் சிவா!

சிவா என்பது, சிவநந்தனின் சுருக்கமாக இருக்கக் கூடும் என்று, அவள் எதிர்பார்க்கவே இல்லையே...!

அப்போது கொஞ்ச நாட்கள் ரொம்பவும் எதிர்பார்த்து விட்டு, எதிர்பார்ப்பிற்கு என்ன இருக்கிறது என்று ரொம்ப வும் யோசித்து, எதிர்பார்க்கும் அளவுக்கு எதுவுமே இல்லை என்ற முடிவுக்கு வந்து, கொஞ்சம் மனது கஷ்டப்பட்ட போதும், கிட்டத்தட்ட மறந்தே போன முகம்!

கூட வந்தவன், இவனை 'சிவு' என்று அழைத்த ஞாபகம்!

இப்போது உள்ளே வந்தபோது உறுத்தியது கூட, இவனது குரலாக இருக்குமோ? எப்போதோ கேட்டது என்று...

ஆனால், அவனுக்கு, அவளை நினைவிருக்குமா?

ஆவலினால் விழி மலர, சிவநந்தனைக் கடைக்கண் ணால் நோக்கினாள் சுகேசி!

ஆனால், அவன், அவளைக் கண்டு கொண்ட மாதி ரியே இல்லை!

அவனுடைய அத்தை பிள்ளைகளிடமே, அவனது முழுக் கவனமும் இருந்தது போலும்!

"சாட்சிக்கெல்லாம் ஆள் தேடுவானேன்? உன் அத்தை மகன்களைப் பற்றி உனக்குத் தெரியாததா, எனக்குத் தெரிந்து விடப் போகிறது? நீ சொன்னால் சரியாகத்தான் இருக்கும்! இப்போது..." என்று ஏதோ சொல்லத் தொடங் கிய தாயின் பேச்சில் குறுக்கிட்டு, கதிர் அவசரமாகப் பேசினான்.



"பொய்! பொய்! உங்கள் கூடச் சேர்ந்து, வேண்டும் என்றே அம்மா கிண்டலடிக்கிறார்கள்! நான் நன்றாகப் படிக்கிற பையன்தான்!" என்று கத்தினான் அவன்.

"சரிதான்ப்பா! என்னவோ, நீ சொன்னால், ஒத்துக் கொள்ளுகிறேன்!" என்று விட்டுக் கொடுப்பது போல அந்த சிவநந்தன் கூற, "நான் சொல்வதற்காக அல்ல! அது நிஜம் என்பதற்காக மட்டுமே நம்புங்கள், நாராயணரே!" என்று கதிர் விடாமல் விளம்பிய விதத்தில் எல்லார் முகத்திலும் முறுவல் மலர்ந்தது!

"சரி, மீண்டும் யாரேனும் எதையேனும் வளவளக்கத் தொடங்கி விடாதீர்கள்! முதலில் நான் ஒன்று..." என்று, சுகேசியின் கையைப் பற்றித் தொடங்கினாள் அபிராமி.

ஆனால் அவன் மேலே தொடரு முன்பாக, "பாருங் களடா, நாம் மூவரும் மகா புத்திசாலித்தனமாக எதாவது பேசினால், அது வெறும் பயனற்ற வளவளப்பாம்! அப்படியானால், அத்தை, அம்மா எல்லோரும் சேர்ந்தால், அவர்கள் அப்படி, இவர்கள் இப்படி என்று மணிக் கணக் காக ஊர்க் கதை பேசுவார்களே... அதற்குப் பெயர் என்ன வாக இருக்கும்? ம்ம்ம்... உங்களுக்கு ஏதேனும் தெரியுமா?" என்று, முகத்தையும் குரலையும் சீரியசாக வைத்துக் கொண்டு, சிவநந்தன் வினவினான்.

"எனக்குத் தெரியும், எனக்குத் தெரியும்!" என்று பள்ளியில் போலக் கையைத் தூக்கிக் குதித்து, "அதுதான் ஊர் வம்பு, சிவாண்ணா! அதற்கு அர்த்தம், அந்த இடத் தில் இல்லாத மனிதர்களைப் பற்றி, இல்லாததையும், பொல்லாததையும் பேசுவது!" என்று சுதிர் விளக்கவும், அங்கே கிளுகிளுவென்று சிரிப்பு பரவியது!

சிரிக்கும்போதே, சுகேசிக்கு மீண்டும் உறுத்தியது!

மெய்யாகவே சிவநந்தன், மற்றவர்களைச் சிரிக்க வைக்கப் பேசினானா?

அல்லது, அந்தப் போர்வையில், சுகேசியின் அறி முகத்தைத் தள்ளிப் போட்டானா?

ஏனெனில், அவளது கையைப் பிடித்துக் கொண்டு, ஒன்று சொல்ல வேண்டும் என்று அபிராமி தொடங்கியது அவளை அறிமுகம் செய்வதற்காகவே என்பது, தெரியாம லிராதுதானே?

ஒரு கணம் மனது துணுக்குற்ற போதும், இப்படி எண் ணுவது பைத்தியக்காரத்தனமாகவும் அவளுக்குத் தோன் றியது!

முதலாவதாக, அதற்கு அவசியம் என்ன?

சிவநந்தன் அவளை விரும்புவதற்கோ, வெறுப்பதற்கோ என்ன காரணம் இருக்கிறது? சுமார் ஒன்றரை ஆண்டு காலத்துக்கு முன்பாக, படிப்போடு சேர்ந்த பயிற்சியாக ஒரு பாங்க்கில் அவள் தற்காலிகமாகப் பணி புரிந்தபோது, நண்பர்கள் சேர்ந்து தொடங்க இருந்த ஏதோ தொழிலுக் கான கடன் தொடர்பாக, சில முறை அவன் அந்த பாங்கிற்கு வந்து போனான்.

அப்போது ஓரிரு தரம் இருவரும் பேச நேர்ந்தது! அவ்வளவே!

பல லட்சம் பாங்க் கடன் பற்றிய கவனத்தில் இருந்த அவ னுக்கு, அவள் முகம் கூட, மனதில் பட்டதோ, என்னவோ?

இப்போது அவன் முகத்தைப் பார்த்தால் அடையாளம் புரிந்த பாவனையோ இல்லையே!

அப்படி இருக்க, அவளைப் பிடிக்காததால், அறிமுகம் செய்துகொள்ள மனமின்றி, வேறு பேசினான் என்று எப்படிச் சொல்ல முடியும்?



பொதுவாக, அவள் ஆண்களைத் தவிர்ப்பதில்லையா? அதைப் போல, சிவநந்தன் பெண்களைத் தவிர்ப்பான் போலும்!

அதுவும் நல்லதுதான்!

கண்டபடி வழிந்து எரிச்சலூட்டுவதற்கு, இப்படி ஒதுங் கிப் போய் விடுவது, எவ்வளவோ மேல்!

அவளும், இவன் எங்கே நின்று வெறிப்பானோ என்பது இல்லாமல், இப்போது போலவே, இந்த மலைப் பிர தேசத்தை அவளது விருப்பம்போல அலைந்து திரிந்து ரசிக்கலாம்!

சற்று முன் இருந்த துணுக்கம் மறைந்துவிட, பிடிவாத மாக அபிராமி, அவளை அந்த சிவநந்தனுக்கு அறிமுகம் செய்து வைத்தபோது, புன்னகையுடன் அவனோடு பேச, சுகியால் முடிந்தது!

ஆனால் ஒன்று!

எப்போது சிவநந்தன் அவளை ஒரு காலத்தில் பார்த் ததையே மறந்து போயிருந்தானோ, அதன் பின் அவனை நினைவிருப்பதாகக் காட்டிக் கொள்ள அவளுக்கும் விருப்பமில்லை!

என்னவோ, அவன் பெரிய மன்மதன் போலவும், அவன் போகிற போக்கில் போய்க் கொண்டிருக்க, அவள் மயங்கி, அவனை மறக்க முடியாமல் தவித்துக் கொண டிருப்பது போலவும் தோன்றி விடாதா? மகாக் கேவலம்!

என்ன ஆனாலும், அந்த மாதிரி நினைப்பு மட்டும் தோன்றும்படியாக விட்டு விடவே கூடாது என்பதில், சுகேசி உறுதியாக இருந்தாள்!

ஆனால், ஒரு சின்னக் குன்றல் மட்டும்! அவ்வளவு எளிதாக மறக்கும்படியான முகமா, அவளுடையது?

எல்லோரும் அழகி, அழகி என்றதெல்லாம், அவளுக்கு இதமாக இருக்கும் என்று மட்டும்தான் போலும்!

பிறர் அறியாமல் போய்க் கண்ணாடியைப் பார்த்த போது, முகம் அழகாக இல்லாதது போலவே தோன்றி விட, அவளுக்கு வருத்தமாகிப் போயிற்று!

பாங்க்கில் இருந்த அத்தனை பெண்களிடையே, இந்த முகம் சிவநந்தனின் மனதில் நிற்காமல் போனதில், ஆச்சரியம் என்ன இருக்கிறது?

முகத்தை இன்னும் கொஞ்சம் அதிகமான ஒப்பனை செய்யலாமா என்று யோசித்துவிட்டு, வேண்டாம் என்று முடிவு செய்தாள். அவள் அப்படி அலங்காரம் செய்தேனும், அந்த சிவாவை, அவள் கவர்ந்திழுக்கத் தேவையில்லை!

அவள் அலங்காரமே செய்திருந்தாலும், அவன் அதைக் கவனித்திருப்பானா என்பதும், சந்தேகமே!

சிவநந்தனைப் பொறுத்த வரையில், அந்த வீட்டுக்கு வந்தால், அவனுடைய அத்தை பையன்களுடன் சுற்றுவதே, அவனுக்குப் பிடித்தமான பொழுதுபோக்கு போலும்!

பையன்களுக்குச் சரியாக ஆட்டம் போட்ட, மதுவும் மதியும், அந்தக் குழுவில் தானாகச் சேர்ந்து கொண்ட போது, அதற்கும் அவன் தடையேதும் சொல்லவில்லை!

ஆனால், அப்படித் தானாகப் போய் அவர்களோடு சேர்ந்து கொள்ள, சுகேசிக்குப் பிடிக்கவில்லை!

அறிமுகப் படலத்தை அவன் வேண்டும் என்று தவிர்க்க முயன்றானா இல்லையா என்பதில், இன்னமும் அவளுக்குச் சந்தேகம் தீரவில்லையே! அப்படி இருக்க, அவனைத் தலைவனாகக் கொண்ட கூட்டத்தில் அவள் எப்படிச் சேருவாள்?

எனவே, பரந்தாமன் பாதுகாத்துப் பத்திரப்படுத்தி வைத்திருந்த பழைய புத்தகங்களை ஒவ்வொன்றாக எடுத்துப் படிக்கலானாள்.



ஆனால், அவளுடைய தங்கைகள் இருவருக்கும் சிவநந்தன் சீக்கிரமே ஹீரோ ஆகிப் போனான்.

அதுவும், வீட்டில் ஏதோ உணவைச் செய்யச் சொல்லி, எடுத்துக் கொண்டு, ஒரு நாள் 'ட்ரெக்கிங்' என்று மலை மேல கொஞ்சம் ஏறிவிட்டு வந்தார்கள். அன்றிலிருந்து வாயைத் திறந்தாலே, அவன் புகழ் என்றாகி விட்டது, அவர்களுக்கு!

"பெரீய்ய மரம், அக்கா! அதில், முக்கால்வாசி உயரத்தில், சுற்றிக் கிடந்த கொடிகளில், அழகான பூக்கள்! புது தினுசான பூக்களில், ஒரே ஓர் இதழ் மட்டும் வேறே மாதிரி டிசைன்..."

"ஆர்க்கிட்" என்றாள் தமக்கை மரத்த குரலில்.

"ஆங், அதுதான்! ஆர்க்கிடேதான். சிவாண்ணன் கூடச் சொன்னாரே! 'வைல்ட் ஆர்க்கிட்டு' என்றார். பூவைக் கையில் வைத்துப் பார்க்க வேண்டும் போல ஆசையாக இருந்தது! கேட்டேனா, உடனே பறித்துத் தந்து விட்டார்! கிடுகிடு என்று மரத்தில் எப்படி ஏறினார் தெரியுமா? 'கிரேட்!'' என்று இருவருமாக, வெகுவாக வியந்து பாராட்டினார்கள்!

பெரியவளுக்கு, அது அப்படி ஒன்றும் பெரிதாகத் தோன்றவில்லை போலும்!

"குரங்கு கூடத்தான் கிடுகிடுவென்று மரத்தில் ஏறுகிறது! இனிமேல், அதையும் 'ஆ'வென்று பார்த்து 'கிரேட்' என்பீர்கள் போல இருக்கிறதே!" என்று தோளைக் குலுக்கினாள் அவள்.

இது எப்படிச் சுற்றி, சிவநந்தனிடம் போயிற்றோ?

"உன் அக்காவுக்கு ஆர்க்கிட் பறித்துக் கொடுக்கிற பிறவி, கட்டாயமாகக் குரங்காகத்தான் இருக்கும்! ஏனென்றால், இனம், இனத்தோடே!" என்றானாம்!

அவன் சொன்னதாகச் சொல்லி, இருவரும் விழுந்து விழுந்து சிரிக்க, அவளுக்குப் பற்றிக் கொண்டு வந்தது!

இனம், இனத்தோடே என்றால், அவள் என்ன குரங்கு மாதிரியா இருக்கிறாள்?

அப்படி ஒன்றும் இல்லை என்று பலமுறை சொல்லிக் கொண்ட போதும், அவளுக்கு ஏனோ வேதனையாகத் தான் இருந்தது!

அவன் எப்படியாவது, அவளை மட்டம் தட்ட முயற்சித்துக் கொண்டே இருப்பது போலவே அவளுக்குத் தோன்றியது!

ஆனால், ஏன்?

எந்தக் காரணமும் இல்லாததாலேயே, அது, நிஜம் இல்லையோ, எல்லாமே அவளது அசட்டு மனதின் மூடக் கற்பனையோ என்றும் யோசித்து, உள்ளூர அலை பாய்ந்தாள் சுகேசி!

## 5

**சு**கேசியின் கலக்கம் வெறும் மூடக் கற்பனை இல்லை. உண்மையாகவே சிவா அவளிடம் ஏதோ ஆத்திரத்துடன்தான் இருக்கிறான் என்பது, விரைவிலேயே அவளுக்குத் தெரிந்து போயிற்று!

அவனுடைய அத்தை, மாமாவுக்கு மிகவும் பிரியமான குடும்பம் என்பதால், நாகரீகம் கருதி, அவன் தன் வெறுப்பு கோபத்தை, வெளிப்படையாகக் காட்டாமல் இருக்கிறான் என்றும் ஊகித்து உணர்ந்தாள் அவள்!

அதிலும், அவளுடைய குடும்பத்தின் மற்ற நாலு பேரிடமும், அவன் நன்றாகத்தான் பழகினான். பிரியமாக என்று கூடச் சொல்லலாம்! மதி எங்கிருந்தோ குதித்ததில் கால் மடங்கிப் போய்விட, அங்கிருந்து அவளைத் தூக்கிக் கொண்டே, வீட்டுக்குக் கூட்டி வந்து சேர்த்தான்.

அரைக் கிலோ மீட்டர் தூரம்!



''இந்த எலும்புக் குச்சியின் எடை எண்பது கிலோ என்று தெரியாமல் போயிற்றே!'' என்று மேல் மூச்சு கீழ் மூச்சு வாங்குவது போல நடித்துக் கிண்டல் செய்தபோதும், அவளிடம், அவன் பரிவாக நடந்தது நிச்சயமே!

''இப்போது கூட இப்படி இருக்கிறார்களே, ரொம்பச் சின்ன வயதில் எவ்வளவு வால்த்தனம் செய்திருப்பார்கள்! அதிலும் இரட்டை! இந்த இரண்டு பயங்கரங்களையும் எப்படி சமாளித்தீர்கள் ஆன்ட்டி? நீங்கள் மகாப் பொறுமைசாலியாக இருந்திருக்க வேண்டும்!'' என்று வியந்து பாராட்டிய விதத்தில், சுமதிக்கு உச்சி குளிர்ந்து போயிற்று!

மது, அம்மா, அப்பா எல்லாரிடமும், அவனுக்கு அதே நல்லுறவுதான்!

அவளிடம் மட்டும்தான் தகராறு என்பது, குறைந்தபட்சமாக அவளுக்குத் தெளிவாயிற்று!

எல்லாரையும் இழுத்து வைத்துக் கேலி செய்கிறவன், அவளைக் கண்டுகொண்டதே கிடையாது!

பெரியவர்கள், சின்னப் பிள்ளைகள் என்ற இரண்டிலும் சேர்க்க முடியாத இளம்பெண் என்பதால் ஒதுங்கிப் போகிறான் என்று வைத்துக் கொண்டாலும், அவள் ஹாலில் நிற்கிறாள் என்பதற்காகவே, சமையலறையில் நின்ற அபிராமியிடம் பேசுவதற்காக, வீட்டைச் சுற்றிக்கொண்டு செல்ல வேண்டியது இல்லைதானே?

பலமுறை கவனித்துவிட்டு, அவனைப்போலவே, அவளும் ஒதுங்கிப் போனபோது, அவளை, அவன் தடுக்கவுமில்லை!

ஒருநாள் உணவருந்தும்போது, சின்னவர்களுக்குள் ஒரு தகராறு வந்தது.

எதற்கோ, கதிரை 'டா'ப்போட்டுப் பேசினாள் மதி!

உடனே, ''கதிர் உனக்குப் பெரியவன்! அவனை அண்ணன் என்று மரியாதை கொடுத்துப் பேச வேண்டும்'' என்று மகளை அதட்டினார் வாகீசன்!

''அதெல்லாம் முடியாதுப்பா! நாங்கள் அக்காவையே 'வா போ' என்றுதானே பேசுகிறோம்? அத்தோடு...'' என்றவளின் பேச்சில், தன் உயரத்தைப் பற்றிச் சொல்லப் போகிறாள் என்று உணர்ந்து, அவசரமாகக் குறுக்கிட்டான் கதிர்.

''எனக்கு ஒன்றும் இல்லை, சித்தப்பா!'' என்றான் முந்திக்கொண்டு!

உடனே, ''மண்டைக்குள்தானே? உண்மையை ஒத்துக்கொண்டதற்காக, இதோ இரண்டு பொற் கழஞ்சுகள்!'' என்றுரைத்து, இரண்டு நேந்திரங்காய் சிப்சை எடுத்து அவன் தட்டில் வைத்துக் கிளுக்கினாள் மது!

அவள் சொன்ன விதத்தில் எல்லோருக்கும் சிரிப்புதான்!

ஆனால், அவன் வேகமாக எடுத்ததில், இரண்டுக்குப் பதிலாக மூன்று நேந்திரந் துண்டுகள் விழுந்துவிட, ''இரண்டு என்றால் எத்தனை என்று எண்ணத் தெரியாதவர்கள், மூளையைப் பற்றிப் பேசுகிறார்கள்ப்பா!'' என்று அண்ணனுக்காக சுதிர் கொடுக்க, அங்கே மீண்டும் ஒரு சிறு சிரிப்புப் பரவியது!

இந்தச் சண்டையிலிருந்து மனதை மாற்ற எண்ணி, ''ஒரு கழஞ்சு என்றால், பன்னிரண்டு காசுக் கணக்கு வரும்! அவனுக்கு இன்னும் இருபத்தியோரு சிப்ஸ் துண்டு எடுத்து வைத்தால்தான் கணக்கு சரியாகும்!'' என்றாள் சுகேசி.

அப்படியா, அது வேறா என்று மற்றவர்கள் ஏதோ சொல்லுகையில் ''காசு பணம் என்றால், எவ்வளவு கணக்காக இருக்கிறார்கள்ப்பா! புல்லரிக்கிறது'' என்று சிவா கிண்டல் போலக் கூறி, எல்லோரையும் சிரிக்க வைத்தான்.



ஆனால், கிண்டலடிப்பது போல, காசுக்காகப் பார்க்கிறவள் என்று சிவநந்தன் தன்னை மட்டம் தட்டியதாகவே, சுகேசிக்குத் தோன்றியது!

அது மட்டுமின்றி, ஒரு சமயம், அறையின் வழவழப்பான கண்ணாடி ஜன்னலில் தெரிந்த அவனது பிம்பம், அவளைச் சிறு வெறுப்பும் ஆராய்ச்சியுமாகப் பார்ப்பதைப் பக்கவாட்டில் இருந்த அவளால் கண்டுகொள்ள முடிந்தது!

இதற்கு மேலும், அவளது அசட்டு மனதின் மூடக் கற்பனையாக இருக்கக் கூடும் என்பது எண்ணுவதற்கு, அவள் பைத்தியக்காரி அல்ல!

ஆனால் ஏன்?

என்ன யோசித்தும், அவளது பயிற்சிப் பணியின் போதோ, பிறகோ சிவநந்தன் தவறாக எண்ணும்படியாக, அவர்களுக்கிடையில் எதுவுமே நேரவில்லை என்பது, அவளுக்கு நிச்சயம்!

சிலபேரைப் பார்த்தாலே பிடிக்காமல் போய்விடுமே, அதுபோல, அவளைப் பார்த்ததுமே, சிவநந்தனுக்குப் பிடிக்காமல் போய்விட்டது போல!

ஆனால், அப்போது சிரித்துதானே பேசினான்?

ஒரு வேளை, பாங்க்கில் காரியம் ஆக வேண்டும் என்பதற்காகச் சிரித்துப் பேசிவிட்டு, அத்தோடு மறந்திருப்பானோ?

எப்படியும், இப்போது அவளை, அவனுக்குப் பிடிக்கவில்லை என்பது நிச்சயம்!

ஆனால், அதற்காக அவள் என்ன செய்ய முடியும்?

இங்கே இன்னும் சில நாட்கள்! அதுவரை, பேசாமல் விலகிப் போய்விட வேண்டியதுதான் என்று முடிவு செய்து, அது போலவே, நடந்து கொள்ளவும் தொடங்கினாள் சுகேசி!

அவனைப் போலவே, அடுத்தவர் முன் காட்டிக் கொள்ளாமல், அதே சமயம், உள்ளூர ஒதுங்கிக் கொண்டாள் அவள்!

இந்நிலையில் ஒருநாள், கேலி போல, அவளைத் தாக்கினான் சிவநந்தன்.

அன்று, பிற்காலத்தில் என்னவாகப் போகிறார்கள் என்று சின்னவர்களைக் கேட்டுக் கொண்டிருந்தான், சிவநந்தன்.

வக்கீலாகப் போவதாக மதியும், ஃபேஷன் டிசைனர் ஆகப் போவதாக மதுவும் கூறினார்கள்! கதிருக்கு 'பயோடெக்'கில் விருப்பம் இருந்தது!

அவன் முறை வந்ததும், ''நான் சிஏ பண்ணி, ஆடிட்டராகப் போகிறேன்!'' என்று சுதிர் கூறி முடிக்கையில், வெளியே இருந்து, ''ஏலே, ஒழுங்கா எண்ணுடா!'' என்று குரல் அதட்டவும், அவன் 'விலுக்'கென்று நிமிர்ந்து அமர, குபுக்கென்று பொங்கிய சிரிப்பை அடக்குவதில், அங்கிருந்த அத்தனை பேரும் ஈடுபட்டனர்.

அத்தோடு நில்லாமல் ''சுத்த தண்டம்! நாலு செட் கூடைகளைச் சேர்த்து எண்ணிக் கூட்டிப் போடத் தெரியலை, ஒண்ணு, ரெண்டு எண்ணத் தெரியாதவனுக்கு இந்த வேலை எதுக்கு? பெரிசாகப் பணக் கணக்கு போட வந்திட்டான்!'' என்று தொடர்ந்து திட்டினார், வீட்டுக் காரியக்காரர்!

சிரித்துக்கொண்டே மற்ற சின்னவர்கள் அங்கிருந்து ஓட்டம் பிடிக்க, முகம் வாடி அமர்ந்திருந்த சுதிரிடம் சென்று, சற்று குனிந்து, ''வேறு யாரோ, எதற்காகவோ சொல்வதை, நம் விஷயத்தில் இணைத்து யோசிக்கக் கூடாது, சுதிர்! நீ பெரிய ஆடிட்டராக ஆகத்தான் போகி



றாய்!'' என்று, ஒரு கையால் அவனது சிகையைப் பிரியமாக அளைந்து விட்டுவிட்டு நகர்ந்தாள் சுகேசி.

முகம் மலர, ''அதானே! தாங்க்ஸ்க்கா! நான் எல்லோரிடமும் சொல்லுகிறேன்'' என்று எழுந்து ஓடிப்போனான் சுதிர்.

அவனைப் புன்னகையோடு பார்த்துவிட்டு திரும்பினால், வழக்கம் இல்லாத வழக்கமாக, சிவநந்தன் அவள் அருகில் வந்து நின்றிருந்தான்.

திகைப்புடன் நோக்கியவளிடம், ''பாவம், ரொம்பச் சின்னப் பையன்! அவன் தலையைத் தடவாதே. விட்டுவிடு!'' என்று ஒரு மாதிரிக் குரலில்.

திகைப்பு இரட்டிப்பாக, புரியாது விழித்து, ''எ.. என்னது?'' என்று கேட்டாள் அவள்.

''தோற்றம், பார்வை எல்லாமே பிரமாதம்தான்! ஆனால், உன் வெற்றிப் பிரதாபங்களை ஏற்கனவே அறிந்தவன் என்பதால், அருவருப்புதான் அதிகமாகிறது! இருக்கப் போகிற இன்னும் ஐந்தாறு நாட்களும் வாலைச் சுருட்டியே வைத்திரு! உன் வேலையை இங்கே காட்டினால், நான் சும்மா இருக்க மாட்டேன்!'' என்று அதிகாரக் குரலில் மிரட்டியவன், அதற்கு மேல் அங்கே நில்லாமல் விரைந்து சென்றுவிட்டான்!

அவளை வெகு கேவலமாகக் குற்றம் சாட்டினான் என்பது தவிர, அவனது பேச்சில் தலை, கால் ஒன்றும் புரியாமல் திகைத்து நின்றாள் சுகேசி.

எப்போது என்ன நடந்தது?

அது என்ன வெற்றிப் பிரதாபங்கள்?

ஒரு வேளை.. ஏதோ நினைவு வர, பிரமித்து நின்றாள் அவள்!

ஆனால், அதற்கும், இவனுக்கும் என்ன சம்பந்தம்?

அவளுக்குமே அதில் சம்பந்தம் கிடையாது...

''என்னம்மா சுகி? என்ன விஷயம்? ஏன் முகம் ஒரு மாதிரி இருக்கிறது?'' என்று அங்கு வந்த அபிராமியின் குரல் கவலையுடன் கேட்க, "ஏண்டா, உடம்பு சரியில்லையா?'' என்று மகளின் நெற்றியைத் தொட்டுப் பார்த்தாள், அபிராமியோடு வந்த சுமதி. ''சூடு இல்லையே!''

உடம்பு என்ற தாயின் வார்த்தையைப் பிடித்து ''காய்ச்சல் இல்லைம்மா! ஆனால் தலை வலிக்கிறது! பயப்பட வேண்டாம், லேசாகத்தான் வலிக்கிறது! கண்ணை மூடிக்கொண்டு கொஞ்ச நேரம் படுத்திருந்தால் சரியாகிப் போகும்! செய்யட்டுமா? நேற்று இரவெல்லாம் விழித்து, அந்தத் 'திகம்பர சாமியாரை'ப் படித்தேனா? அதனால் இருக்கும்!'' என்று காரண காரியங்களோடு சுகேசி கூறவும், சரிதான் என்று அன்னையர் இருவரும் அவளை அனுப்பி வைத்தனர்!

''உன் மைத்துனர் சொல்கிறார்...'' என்றபடி, தாய்மார் இருவரும் தங்கள் பேச்சை மேற்கொண்டு தொடரலானார்!

தனிமையில் அமர்ந்து யோசித்த சுகேசிக்கு, அவளது பயிற்சிப் பணிக் காலத்து விஷயம் மட்டும்தான் சிவநந்தனின் சீற்றத்துக்குக் காரணமாக இருக்க வேண்டும் என்று நிச்சயமாகத் தோன்றியது!

மற்றபடி, அவளது வாழ்வில் நிழலான எதுவும் நடந்ததே கிடையாது! அதிலும்கூட, அவளது பங்கு எதுவும் கிடையாது!

ஒரு தோழிக்கு உதவ நினைத்தது தவிர!

ஒன்றரை ஆண்டுகளுக்கு முன்பாக, அடியோடு முடிந்து போனதாக எண்ணி, சிறு அருவருப்புடன் மனதில் இருந்துகூட அவள் விலக்கி ஒதுக்கியது!



அது, இவ்வளவு காலத்துக்குப் பிறகு, புற்றிலிருந்து கிளம்பும் பாம்பு போலத் திடுமெனத் தலை தூக்கும் என்று அவள் எதிர்பார்க்கவே இல்லையே!

ஆனால், இந்த விஷயம் சிவாவுக்கு எப்படித் தெரியும்?

ஒரு வேளை, அந்த ஆள்... இவனேதானா?

சேச்சே! இவனுக்கும் அந்த அசிங்கத்துக்கும் எப்படிப் பொருந்தும்?

எப்படிப் பொருந்தும் என்று, அவனுக்குக் கௌரவம் கொடுத்து அவள் நினைக்கிறாள்... ஆனால், நேர்மாறாக, அவன் சுகியை ஏதோ மிகவும் கேவலமாகத்தானே நினைப்பதாகத் தெரிகிறது?

எப்படியோ போகட்டும்.. அவனே சொன்னது போல இன்னும் இங்கே இருக்கிற ஐந்தாறு நாட்களும் இப்படியே ஒதுங்கி இருந்துவிட்டுப் போய்விடலாமா என்ற ஒரு தரம் எண்ணிய சுகேசி ஆத்திரத்துடன் நிமிர்ந்தாள்!

அதென்ன, அவளை ஒருவன் கண்டபடி குற்றம் சாட்டுவது? அவள் அதைக் கேட்டுக் கொண்டு சும்மா இருப்பது?

எப்போது குற்றம் சாட்டினானோ, அப்புறம் அவன் அதை நிரூபித்தாக வேண்டாமா?

நிரூபிக்க முடியாமல் திணறி, அவளது உண்மை விளக்கம் தெரிந்ததும் அவனது தவறான கருத்துக்காக மனம் குன்றிக் குறைந்த பட்சமாக, அவளிடம் ஒரு 'சாரி'யாவது அவன் சொல்லியே தீர வேண்டும்!

என்ன இளக்காரம்!

மறுநாள் காலையில், தந்தையர் இருவரும் வெளியே கிளம்பிக் கொண்டிருக்கையில், சுகேசி பரந்தாமனிடம் போய் நின்றாள்.

''இந்தத் 'திகம்பர சாமியார்' புத்தகத்தை முடித்து விட்டேன், பெரியப்பா! வேறு ஏதாவது... தாருங்கள்!''

பழைய பொருட்கள் என்றாலே ஒரு பாசம் அவருக்கு. அதிலும், பழைய புத்தகங்களைப் பத்திரமாகப் பூட்டி வைத்துப் பராமரிக்கிறவர் அவர்.

எனவே அவள் எதிர்பார்த்தது போலவே, ''ஈசா, நீ காருக்குப் போ. நான் சுகிக்குட்டிக்குப் புத்தகம் எடுத்துக் கொடுத்து விட்டு வருகிறேன்!'' என்று வாகீசனை அனுப்பி விட்டுப் புத்தக அறையைத் திறந்தார்.

'''திகம்பரசாமியார்' ரொம்ப அருமையான கதை. பெரியப்பா, இடையில் வைக்க முடியாமல், இரவெல்லாம் உட்கார்ந்து படித்தேனா? எனக்குத் தலைவலியே வந்து விட்டது! பெரியம்மா கூட, இன்று எதையும் படிக்காதே என்றார்கள்...''

மேலே இருந்த 'ராஜாம்பாள் சரித்திர'த்தை எடுக்க நீட்டிய கையைப் பின்னே இழுத்துக் கொண்டு, ''பின்னே ஏனம்மா புத்தகம் கேட்கிறாய்? இன்று வேண்டாம்'' என்றார் பரந்தாமன்.

''சும்மா இருந்தால் போரடிக்குமே! ஒருவேளை, வெளியே சுற்றினால், சரியாகிப் போகுமோ...? ஏன் பெரியப்பா, மலைப் பிரதேசத்தில் சைக்கிள் ஓட்டுவது போலக் கார் ஓட்டவும் தனிக் கவனம் வேண்டுமா? அப்படி ஏதும் இல்லையென்றால், அப்பா காரை எடுத்துக் கொண்டு ஒரு சுற்றுப் போய் வருவேன்'' என்று ஓரக் கண்ணால் அவர் முகத்தைப் பார்த்தாள் சுகேசி.

அவளது திட்டம் பலித்தது!

புத்தகம் எடுக்காமலேயே அவளைத் திரும்ப அழைத்து வந்த பரந்தாமன், தன் மைத்துனர் மகனை அழைத்தார்.

''சுகிம்மாவுக்குக் கார் ஓட்டத் தெரியுமாம், சிவா. இங்கே நம் மலைப் பகுதி வழிகளில் எப்படி ஓட்டுவது என்று கற்றுக் கொடு! அவள் கெட்டிக்காரி! கற்பூர புத்தி! அத



னால், சீக்கிரமாகக் கற்றுக் கொள்வாள்!'' என்று பணித்து விட்டுத் தன் வழியே போனார் அவர்!

கணக்கிடுவது போல ஒரு தரம் அவளைப் பார்த்த சிவநந்தன் மறுப்பேதும் சொல்லவில்லை!

மாறாக, ''நீ கிளம்பத் தயாரானதும் சொல்லு, போகலாம்!'' என்று அவளிடம் சொன்னவன், சின்னவர்களைப் பார்த்து, ''இன்று கொஞ்ச நேரம் நீங்கள் நால்வருமாக விளையாடுங்கள். நான் உங்கள் அக்காவுக்கு ஒரு பாடம் கற்றுக் கொடுத்துவிட்டு வருகிறேன்!'' என்று அவளைப் பார்த்தான்.

பாடம் கற்றுக் கொடுக்கிறானாம்! என்ன மாதிரி வார்த்தைகள்!

இதை மிரட்டலாக எடுத்து, அவள் தொடை நடுங்கப் பயப்பட வேண்டுமாக்கும்?

அவனே பாடம் படிக்க வேண்டியவனாக இருந்து கொண்டு, அவளை மிரட்டப் பார்க்கிறானே என்று எண்ணினாள் சுகேசி!

காரைச் சற்று வேகமாகத்தான் ஓட்டினான் சிவநந்தன். கொஞ்சம் முரட்டுத்தனமாகவும்!

முதல் மிரட்டல் போலும்! ஆனால், காரை அவன் கட்டுப்பாட்டில் வைத்திருப்பதை விரைவிலேயே கண்டு விட்ட சுகேசி, சற்றும் அசையாமல், பொம்மை போல உட்கார்ந்திருந்தாள்.

இந்த வழியில் அவளை அச்சுறுத்த முடியாது என்று உடனே கண்டுகொண்ட சிவா, கிளைப்பாதை ஒன்றில் காரைச் செலுத்தினான்.

வேறு போக்குவரத்தே இல்லாத இடம் அது! மரங்கள் அடர்ந்த பகுதி!

அதில் சற்றுத் தொலைவு சென்று, காரை ஒரு தனியிடத்தில் நிறுத்தி, சில நிமிஷங்கள் சற்றும் அசையாமல் இருந்துவிட்டு, சுகேசியின் புறம் திரும்பினான் சிவநந்தன்.

''இப்போது தொடங்கு, உன் மயக்கு வேலையை! ஆனால் ஒன்று, நீ என்ன முயன்றாலும், நான் உன்னிடம் மயங்க மாட்டேன் என்பதை முதலில் உன் கிரிமினல் மூளைக்குப் புரிய வைத்துவிட்டு, அப்புறமாகத் தொடங்கு!'' என்றான் ஏளனக் குரலில்.

''என்ன உளறுகிறீர்கள்?'' என்று கோபமாகக் கேட்டாள் அவள்!

''உளறல் என்ன உளறல்? என்னை மயக்குவதற்காகத்தானே, மாமா மூலம் காரோட்டும் பயிற்சிக்கு ஏற்பாடு செய்தாய்? அப்பாவி மனிதர்! நிஜமாகவே நீ இங்கே கார் ஓட்ட ஆசைப்படுவதாக எண்ணி, உனக்குக் கற்றுக் கொடுக்கும்படி என்னிடம் சொல்லுகிறார்! உன் உள் கருத்து, திறமை எதுவும் தெரியாத மனிதர், பாவம்!''என்று போலியாக இரங்கினான் சிவநந்தன்.

என்ன நக்கல்!

கொதித்துப்போய், ''அவர் அப்பாவி என்றால், நீங்கள் கெட்டிக்காரர் என்று எண்ணமா? முழுக்க முழுக்கத் தப்பாக யோசித்த மகா புத்திசாலி, நீங்கள்தான்!'' என்று பதில் கொடுத்தாள் சுகேசி.

''என்ன தப்பு? இந்தக் கார் ஓட்டக் கற்றல், உன் திட்டமில்லை என்றா சொல்லுகிறாய்?'' என்று நம்பாத குரலில் கேட்டான் சிவா.

லேசாக முகம் கன்றி, ''அப்படிச் சொல்லவில்லை! ஆனால், ஏதோ மயக்கு வேலை, அது இதென்று உளறினீர்களே! அதுதான் தப்பான ஊகம்!'' என்றாள் சுகேசி, தளராமல்!

''தப்பான ஊகமா? அப்படியானால், உங்கள் உண்மையான திட்டம்தான் என்னம்மா? நாம் இருவரும் மட்டுமாக



இருக்கும் தனிமையில், என்னிடம் உனக்கு வேறு என்ன வேலையாம்?'' என்றவனின் குரலில் ஏளனம், எகத்தாளமாக மாறியிருந்தது!

இவ்வளவு பேசியவனை, அவளும் சும்மா விடுவதாக இல்லை!

''என்ன கர்வம்! உங்களை மயக்குவது தவிர, வேறு எண்ணமே, யாருக்கும் இருக்காது என்பதற்கு, நீங்கள் அப்படி என்ன, உலக மகா மன்மதன், சார்? நன்றாகத்தான் உளறுகிறீர்கள்! இந்த உலகத்தில் உளறுவாய்களுக்கு ஒரு போட்டி வைப்பதானால், முதல் பரிசு, உங்களுக்குத்தான் தர வேண்டும்!'' என்றாள் அவள்.

லேசாக முகம் கன்றியபோதும், ''என்னிடம் உனக்கு வேறு என்ன வேலை என்று நீ இன்னமும் சொல்லவில்லை!'' என்றான் அவன்!

''சொல்லத்தான் வந்தேன்! ஆனால், இவ்வளவு கண் மூடித்தனமான தற்பெருமையை அடைத்து வைத்திருக்கும் மூளையில், மற்ற எதுவும் ஏறுமா என்பதுதான் சந்தேகமாக இருக்கிறது!'' என்றாள் அவளும் விடாமல்!

''சொல்லிப் பார்த்தால், சந்தேகம் தெளிந்து விடுகிறது'' என்றான் அவன் இலகுவாக. ''ஒருவேளை, அப்படிச் சொல்லுவதற்கு விஷயம் எதையும், இன்னமும் கண்டு பிடிக்க முடியவில்லையா?''

ஒரு பொறுமையிழந்த மூச்சை உள்ளிழுத்த சுகேசி, அவனை ஆத்திரத்துடன் முறைத்தாள்.

ஆனால் உடனேயே, இந்தச் சில்லரைச் சச்சரவுகளால் என்ன பயனேதும் கிடையாது என்றும் தோன்றிவிட, மேலும் சில ஆழ்ந்த மூச்சுகள் எடுத்து, தன்னைச் சமனப்படுத்திக்கொண்டு, அதன் பிறகே, அவள் தன் மனதில் உள்ளதை, வெளிப்படையாகச் சொல்லி விவரம் கேட்டாள்.

அவன் வந்த நாளில் இருந்தே சுகேசி கவனித்துக் கொண்டுதான் இருக்கிறாள். அவளை எதற்காக, அவன் அவ்வளவு கேவலமாக மதிப்பிட வேண்டும்?

உதட்டைப் பிதுக்கி, ''தூங்குகிறவர்களை எழுப்ப லாம்! தூங்குகிற மாதிரி பாசாங்கு செய்கிறவர்களை எப்படி எழுப்ப முடியும்?'' என்றான் சிவநந்தன் அலட்சியமாக.

''எழுப்ப முயற்சியேனும் பண்ணலாமில்லையா? அதுகூட இல்லாமல், முயலுக்கு மூன்றே கால் என்கிற தினுசில் பிடிவாதம் பிடிப்பதைப் பார்த்தால், உங்களிடம் தான் அடிப்படை விஷயம் ஒன்றுமே இல்லையோ என்று எனக்குத் தோன்றுகிறது!'' என்றாள் சுகேசியும் அவனது அதே அலட்சியத்தைப் பேச்சிலும் குரலிலும் காட்டி.

சட்டெனச் சீற்றத்தில் கண் சிவந்தது அவனுக்கு! ''அங்கே ஒருவன், உன்னால் போதை மருந்துக்கு அடிமை யாகி, மறு வாழ்வு மையத்தில் தவித்துக் கொண்டிருக் கிறான்! அந்தக் குடும்பம் முழுவதும் கண்ணீரில் கரைந்து கொண்டிருக்கிறது! நீயானால், அடிப்படையாக எந்த விஷயமும் இல்லை என்று அலட்சியமாகச் சொல்கிறாயா?'' என்று கொதித்தான் அவன்.

''என்னது?! என்னாலா? நான் என்ன செய்தேன்?'' என்று அவள் உண்மையாக ஆச்சரியப்பட்டு, எதுவும் புரி யாமல் கேட்டது, அவனது ஆத்திரத்தை மேலும் அதிகப் படுத்த, ''ஆஹா! ஒன்றுமே தெரியாதவள் போல, என்ன நடிப்பு!'' என்று வார்த்தைகளைக் கடித்துத் துப்பினான் சிவநந்தன்!

இவ்வளவு ஆத்திரம் பொய்யாக, அவளைப் பிடிக் காமல் போனதற்காக மட்டுமே சொன்னதாக இருக்க முடியாது!



அப்படியானால், அந்தப் பணிப் பயிற்சிக் காலத்தில்... அந்த வனிதாவின் காதலன், இவன் சொல்லும் போதை ஆளாக இருக்குமோ?

அவ்வளவா பாதிக்கப் பட்டிருப்பான்?

அவள் முகத்தையே பார்த்துக் கொண்டிருந்தான் போலும்!

''என்ன? ஏதோ முந்திய ஜென்மத்து ஞாபகம் வருகிற மாதிரித் தெரிகிறதே!'' என்றான் ஏளனமாக!

''முந்தின ஜன்மம் அல்ல! இந்தப் பிறவியிலேயே என்ன நடந்திருக்கும் என்று என்னால் ஊகிக்க முடிகிறது! நடந்ததைச் சொல்லும்போது, உங்களுக்கும் உண்மை புரியும்! என்மேல் எந்தவிதத் தப்பும் இல்லை என்பதும் தெரிய வரும்!'' என்றாள் அவள் உற்சாகத்தோடு!

உண்மை தெரிந்ததும், ஐயோ, இவளைப் போய் அநியாயமாகச் சந்தேகப்பட்டோமே என்று சிவா கூசிக் குறுகப் போகிறான் என்பது அவளுக்கு நிச்சயம்!

இந்தக் கம்பீர முகத்தில் அசடு வழிவதா?

உள்ளூர வருத்தத்துடன்தான் அவள் தன் உண்மையை எடுத்து உரைத்தது!

ஆனால், சிவநந்தனின் முகத்தில் கொஞ்சமும் அசடு வழியவே இல்லை... ஏனெனில், அவன், அவளைக் கொஞ்சமும் நம்பவில்லை!

## 6

**சு**மார் ஒன்றரை ஆண்டுகளுக்கு முன்ன தாக, சுகேசி பாங்க் மானேஜ்மெண்ட் கோர்ஸ் படித்துக் கொண்டிருந்தாள். டிப்ளமோ கோர்ஸ்.

படிப்பு முடிகிற சமயம் அது. அந்த கோர்சில் படிப்பவர்களுக்கு, படிப்பின் கடைசிப் பகுதியில், நடைமுறை பற்றி, ஓர் இரண்டுமாத பாங்க் நேரடிப் பயிற்சி தருவார்கள். தமிழ்நாட்டில் பல கிளைகளை உடைய ஒரு பிரபல பாங்க்தான் அந்தக் கோர்சைக் கற்றுக் கொடுத்ததுமே! அவர்களது ஏதாவது கிளைகளில் ஒன்றில்தான் நேரடிப் பயிற்சி தரப்படும்.

இந்தப் படிப்பை முடித்தவர்களுக்கு நல்ல வேலை கிடைப்பதாகக் கேள்விப்பட்டு, சுகேசியும், அவளுடைய தோழிகள் சிலரும், அதை எடுத்துப் படித்தார்கள்.

மதுரையில் உள்ள பெரிய கிளையிலேயே பயிற்சி பெறும் வாய்ப்பு, சுகேசிக்கும், அவளுடன் பயின்ற வனிதாவுக்கும் கிடைத்தது.

வனிதா அவளுக்கு நெருங்கிய தோழி அல்ல என்றாலும், ஒரே கல்லூரியிலிருந்து சென்று ஒரே கோர்ஸ் படித்ததால், நல்ல பழக்கம் இருந்தது! இங்கே, பயிற்சியளிக்கும் ஒரே பாங்க் அமைந்தது, இருவரையும் கூடக் கொஞ்சம் நெருங்க வைத்திருந்தது!

தன்னுடைய பொல்லாத அண்ணனைப் பற்றியும், ஆண் வாரிசு என்று அவனது விருப்பம்போல ஆடும் பெற்றோரைப் பற்றியும், வனிதா அடிக்கடி புலம்புவாள்.

அப்போதெல்லாம், 'எங்களுக்கு மூன்று பெண்கள்' என்று பெருமையாக அறிவிக்கும் பெற்றோரை நினைத்து, சுகேசிக்குப் பெருமையாக இருக்கும்! கூடவே, வனிதாவிடம் பரிதாபமும் பெருகும்!

பணிப்பயிற்சி முடிந்த பிறகு, சென்னையை விட்டு வெகுதூரத்தில் உள்ள கிளையில் வேலை கேட்கப் போவதாக வனிதா சொல்லுவாள்.



சென்னையில் தவிர, வேறு எங்கேயாவது போட்டால், இவர்களை விட்டு விலகி, வேறு எந்த சென்னை நிறுவனத்திலாவது, வேலைக்குத் தேட வேண்டியதுதான் என்று, சுகேசி எண்ணிக் கொள்வாள்!

எண்ணுவதோடு சரி சொல்ல மாட்டாள்! சொன்னால், நம் குடும்பம் இப்படி இல்லையே என்று, வனிதா வருத்தப்படக் கூடும் அல்லவா?

வேலை நேரம் போக, அவளும் வனிதாவும், அவ்வப்போது பொதுவான எதையாவது பற்றிப் பேசிக் கொண்டிருப்பார்கள்!

சிவநந்தனை, அங்கேதான், அந்த பாங்க்கில்தான், சுகேசி முதல் முதலாகப் பார்த்தாள்.

அவனும், அவனுடைய நண்பர்கள் இருவரும் சேர்ந்து, ஏதோ தொழில் செய்வதற்காக பாங்கிடம் கடன் கேட்டு வந்திருந்தான்.

அவர்களை அறிமுகப்படுத்த, அந்த பாங்க்கிலேயே கணக்கு வைத்திருந்த இன்னொரு நண்பன்.

கடன்களை எப்படிக் கையாள்வது என்று தெரிவதற்காக, இந்தக் கடன் விவகாரம் முழுவதையும் கவனித்துப் புரிந்து கொள்ளும்படி, பயிற்சிக்கு வந்திருந்த இருவருக்கும் சொல்லப்பட்டது!

''இங்கே கணக்கு வைத்திருக்கும் ஆள் கணக்கில் எவ்வளவு பணம் போட்டு எடுக்கிறார்கள், பார்த்தாயா?'' என்று விழி விரியக் கேட்டாள் வனிதா. ''இந்தச் சிறு வயதிலேயே, பயங்கர 'பிசினஸ் மேன்' போல!'' என்று அதிசயப்பட்டாள்.

''இல்லாவிட்டால், அந்த ஆளின் அறிமுகத்தை ஏற்று, லட்சக் கணக்கில் கடன் கொடுப்பார்களா?'' என்றபடி, எதிரே இருந்த கம்ப்யூட்டர் மானிட்டர் காட்டிய கணக்கில் மூழ்கினாள் சுகேசி!

"அதுவும் சரிதான்!" என்றாள் மற்றவள்!

அடிக்கடி அந்த நண்பர் குழு, பாங்கிற்கு வந்தது! சேர்ந்து நின்று, ஏதாவது விட்டடித்துப் பேசுவார்கள். கூடவே வேலையையும் பார்ப்பார்கள்.

ஆண்கள் நாலு பேருமாகச் சேர்ந்து, கேலியும் கிண்டலுமாகப் பேசும்போது, சிரிப்பை அடக்கிக்கொண்டு, காது கேளாதது போல நிற்பது, சுகேசிக்குச் சிரமமாக இருக்கும்!

அவர்கள் பேச்சைக் கேட்டுச் சிரித்தால், அவர்களுக்கு உரிமை எடுக்கத் தோன்றும். அதற்கு இடம் கொடுக்கக் கூடாது என்பது, அவளது எண்ணம்!

தன்னை மீறிச் சிரிப்பு வரும்போது, ஏதாவது பொருளைக் கீழே போட்டுவிட்டது போலக் குனிந்து சமாளிப்பாள். அல்லது, சமீபத்தில் பார்த்த திரைப்படத்தில்... படித்த புத்தகத்தில்... என்று எதையாவது அருகில் இருப்பவளிடம் கூறிச் சமாளிப்பாள்!

ஆனால் அந்த மாதிரி கட்டுப்பாடுகளே இல்லாமல், வனிதா அவர்களோடு கூடச் சேர்ந்து சிரிப்பாள்!

அப்போதுதான் ஒருநாள் வனிதா, சுகேசியிடம் ஓர் உதவி கேட்டாள்.

"நீங்கள் இருவரும் ஒன்றாகப் பணிப் பயிற்சிக்கு வந்தவர்கள். மற்றது போல இல்லாமல், பயிற்சி காலத்துக்கும் அந்த பாங்க் நன்றாகவே ஊதியம் கொடுக்கும் என்று எனக்குத் தெரியும்! அப்படியிருக்க, அந்தப் பெண், உன்னிடம், அப்படி என்னம்மா உதவி கேட்க முடியும்?" என்று. சுகேசியின் பேச்சில், ஏதோ பெரிதாக விசாரிக்கும் பாவனையில் குறுக்கிட்டு, சற்று ஏளனமான குரலில் சிவநந்தன் வினவினான்.



அவளது பேச்சு எதையும் அவன் ஒத்துக்கொள்ளவில்லை என்று சொல்லாமல் சொல்லுகிறானாம்!

அவனது நம்பாத தன்மை எரிச்சலூட்டியபோதும், அதைக் காட்டாமல் அடக்கிக் கொண்டு, "நீங்கள் மழைக் காலக் காளான் பறிக்க மட்டும்தான் லாயக்கோ என்று, எனக்குத் தோன்றுகிறது! அதுதானே உழுது பயிர் செய்து பொறுமையோடு காத்திராமல், மழை பெய்த மறுநாளே பறிக்கக் கூடியது? என் பேச்சில் அனாவசியமாகக் குறுக்கிடாமல், இன்னும் சற்று நேரம் பொறுமையாகக் கேட்டிருந்தால், உங்களது இந்தக் கேள்விக்கான பதிலை, நீங்கள் சும்மாவே அறிந்திருக்கலாமே!" என்று கேலி போல ஒரு குட்டு வைத்து விட்டு, சுகேசி மேலே தொடர்ந்தாள்.

இப்போது சிவா நம்பாதிருக்கலாம்! ஆனால், முழு விவரமும் தெரிகிறபோது, நம்பித்தானே ஆக வேண்டும்? அப்போது, இந்த அவநம்பிக்கைக்கும் சேர்த்து மன்னிப்புக் கேட்கட்டும்!

இப்படி எண்ணியே, சுகேசி தன் விளக்கத்தைத் தொடர்ந்தாள்!

வனிதா கேட்ட உதவி பணம் தொடர்பானது அல்ல!

அவளுடைய உறவினர் குணம், அவள் ஏற்கனவே சொல்லிப் பலமுறை வருத்தப்பட்டதுதான்!

வனிதாவிடம் அவர்களுக்கு நம்பிக்கை கிடையாது என்பதோடு, அவள் அறியாமல், அவளது பொருட்களை அலசி ஆராய்வார்கள்! அண்ணனோ, நாகரீகமே இல்லாமல் வெளிப்படையாகவே தங்கையின் கடிதங்களைப் பிரித்துப் படிப்பான்... செல்போனைப் பிடுங்கி, யார் யாரிடமிருந்து, என்னென்ன 'மெஸேஜ்' வந்திருக்கிறது என்று பார்ப்பான்.

''என்ன பெரிய விஷயம்? மறைப்பதற்குத் தப்பாக எதுவும் இல்லை என்றால், அதைப் பற்றி, உன் தோழி பெரிதாக ஆட்சேபிப்பானேன்?'' என்று அலட்சியமாகக் கேட்டான் சிவா. ''தங்கை சின்னப் பெண்! அறியாத்தன மாக எதிலும் மாட்டிக் கொள்ளாமல் காப்பாற்றுவதாக் கூட எண்ணியிருக்கலாம்!''

''அதெப்படிச் சொல்லலாம்? இருபத்தியொரு வயது தாண்டிய பிறகு, அவளுக்காகப் புரியும் என்று மதிப்புக் கொடுக்காமல்...'' என்று வாதிடத் தொடங்கியவள் சட்டெனப் பேச்சை நிறுத்திக் கொண்டாள்.

வனிதாவுக்காக வாதாடுவது, இப்போது எந்த அளவுக்கு அவளுக்கு உதவும்? பின் நடந்ததை நினைக்கையில், அவளுக்காகப் பேசுவதே மடத்தனம்!

சிவாவை எதிர்ப்பதே லட்சியமாக, வனிதாவுக்குப் பரிவது சரியே ஆகாது!

எனவோ, அந்தப் பேச்சை விடுத்து, ''சரிசரி, அது எப்ப டியோ போகட்டும்! ஆனால், வனிதாவுக்கு, அவள் அண் ணன் செய்தது, ரொம்பவும் பிடிக்காமல் போயிற்று! ஆனால், அதற்கு ஒரு முக்கியமான காரணம் இருந்தது. அது.... அப் போது அவள் ஒருவனைக் காதலிக்கத் தொடங்கியிருந் தாள்...'' என்று சிறு தயக்கத்துடன் நிறுத்தினாள் சுகேசி.

சும்மாவே, அவளிடம் அவ்வளவு நம்பிக்கை இல்லா தவன், சிவநந்தன். அவனுடைய தோழிக்குக் காதல் எனும்போது, அதை எப்படி ஏற்பானோ என்றிருந்தது அவளுக்கு!

அதற்கு ஏற்றாற்போல, ''அதுதான் உடனே வந்து விடுமே! வந்த வேகத்தில் காணாமலும் போய்விடும்!'' என்று அவன் தொடர்ந்து கூறவும் அவளுக்கு ஒரே ஆச்சரியமாகிப் போயிற்று!



''அது, உங்களுக்கு எப்படி தெரியும்?'' என்று வியப் புடன் வினவினான்!

''எது?''

''வனிதாவின் காதல், அற்பாயுளில் முடிந்தது?''

''உன் தோழிதானா? வேறு எப்படி இருப்பாள்?''

''நான் எப்போது..'' என்று ஆத்திரமாகத் தொடங்கி யவள் மீண்டும் இடையில் நிறுத்தினாள்!

சிவநந்தனுக்கு இன்னமும் நடந்தது முழுவதும் தெரி யாது! அவன் அவளைத் தவறாக எண்ணுவதானால், இந்த ஒரு விஷயத்தில் மட்டுமாகத்தான் இருக்க வேண்டும்!

இதில் நடந்த ஆள் மாறாட்டம்! சரியாகச் சொல்லப் போனால், செல்போன் மாறாட்டம்!

நடந்ததைத் தெளிவாகச் சொன்னால், அவனுக்குப் புரிந்துவிட்டுப் போகிறது!

அதை விட்டு, அவன் 'இம்'மெனுமுன் எகிறுவதால், எந்தப் பயனும் இல்லை!

ஒரு நீண்ட மூச்சை இழுத்து, மனதைக் கொஞ்சம் அமைதிப்படுத்திக் கொண்டு, ''நான் விஷயத்தை முழு தும் சொல்லி முடிக்கிற வரை, இனி குறுக்கிடல், விளக்கம் என்று வேறு பேச்சு எதுவுமே வேண்டாம், சிவா! அனா வசியமாக ஒருவரை ஒருவர் காயப்படுத்திக் கொள்வதில், யாருக்கு என்ன லாபம்? தயவு பண்ணி, நான் சொல்லி முடிக்கும்வரை இடையே எதுவும் கேளாதீர்கள்!'' என்று தொடங்கி,அந்தப் பயிற்சிப் பணிக் காலத்தில் நடந்ததை, அவனிடம் தெளிவுற விவரித்துச் சொல்லலானாள்!

காதல் வயப்பட்டிருந்த வனிதாவுக்குக் காதலனோடு, வீட்டார் அறியாமல், விருப்பம்போல உரையாட வேண்டி யிருந்தது!

''என் செல் என்றால், எங்கள் வீட்டில் நோண்டி, நோண்டிக் கண்டுபிடித்து விடுவார்கள். அப்புறம், வீடு ரணகளம் தான்! அதனால் ப்ளீஸ், கொஞ்சநாள், உன் செல்லைப் பயன்படுத்திக் கொள்ளட்டுமா?'' என்று சுகேசியிடம் கெஞ்சிக் கேட்டாள்.

சற்று முன் அவள் கேட்டுக் கொண்டதையும் மீறி, ஏதோ சொல்ல வந்த சிவநந்தன், உடனேயே தன்னை அடக்கிக் கொண்டு, 'சொல்லி முடி' என்பதுபோல சைகை செய்தான்.

சுகேசிக்குச் சற்று ஏமாற்றம்தான்!

இங்கே ஒரு தீர்வு இருக்கிற மாதிரித் தெரிகிறதே என்று மகிழ்ச்சி அடையாமல், முகத்தை ஏளனமாகவே வைத்துக் கொண்டிருக்கிறானே! குப்புற விழுந்தாலும், மீசையில் மண் ஒட்டவில்லையே என்று காட்ட நினைக்கிற ரகம் போலிருக்கிறது!

சரி, முழுவதையும் நன்றாகக் கேட்டு முடித்துவிட்டு, அப்புறமாகவே லிட்டர் லிட்டராக அசடு வழியட்டும் என்று எண்ணியபடி, மேலே நடந்ததைச் சொன்னாள் அவள்.

''முதலில் அவளிடம் மறுக்கத் தோன்றவில்லை எனக்கு! யோசித்த பிறகும், ஒன்றும் தப்பாகத் தெரியவில்லை! காதல் என்றால், அதை யாரும் டமாரம் அடிப்பது இல்லை! கொஞ்ச காலமேனும் தங்களுக்குள் மறைத்து வைக்க எண்ணுவது இயற்கைதானே? அதிலும் அவளது குடும்பத்தினர் போல, அநாகரீகமாக நடந்துகொள்கிறவர்கள், அதன் மேன்மை தெரியாமல் கொச்சைப்படுத்திப் பேசிவிடக் கூடும் என்று அவள் அஞ்சுவதிலும் தப்பில்லை என்றுதான் நான் எண்ணினேன்!



''பயிற்சிக் காலம் முடிவதற்கு, இன்னும் கொஞ்ச நாட்கள் தானே இருக்கின்றன. அதன் பிறகு என்ன செய்வாள், பாவம் என்று கூட நான் நினைத்தது உண்டு! ஆனால் அதற்குள்ளாகவே, காதல் முறிந்துவிட்டது என்று, வனிதா சொல்லிவிட்டாள். அதற்கு அவள் சொன்ன காரணம் தான், அருவருப்பாக இருந்தது!

''பாங்கில் இவனை விட இன்னும் அதிகப் பணம் வைத்திருக்கும் ஒருவன், அவளைப் பார்த்துப் பல்லை இளிக்கிறானாம்! அதனால், இவனை வெட்டி விட்டேன்'' என்றாள் அவள்.

''பாங்கில் பணிப் பயிற்சிக்குப் போனாளா? அல்லது யாரிடம் எவ்வளவு பணம் இருக்கிறது என்று அறிந்து, புதையல் தேடிப் போனாளா என்று ஆத்திரப்பட்டேன்!

''இப்படி ஒரு காரணத்தைச் சொல்லிக் காதலை முறிக்கிறவள் எப்படிப்பட்டவளாக இருக்க வேண்டும் என்று யோசித்தபோது, ரொம்பவும் வெறுப்பாக இருந்தது! அதனால், அவளிடம் உள்ள பழக்கத்தை நானும் விட்டு விட்டேன். நல்லவேளையாகப் பயிற்சியும் முடிந்து விடவே, வீட்டுக்குத் திரும்பியும் வந்துவிட்டேன்!

''இதற்கிடையே, 'பேசு, கண்ணே பேசு' என்று அடிக்கடி எஸ்எம்எஸ் வரும். நான் அவளில்லை என்று சொல்லிப் பார்த்தேன்! அந்தப் பக்கம் நிறுத்துவதாக இல்லை!

''என்னடா செய்வது என்று, ஏதாவது 'க்ளு' கிடைக்குமோ என்று, வனிதா அனுப்பிய பழைய மெஸேஜ்களைப் படித்துப் பார்த்தேன்! அப்படியே உடம்பு கூசிவிட்டது! அவ்வளவு மோசமாக, பச்சை பச்சையாக இருந்தது! அதுதான் அவன் விட மாட்டேன் என்கிறான் என்று தோன்றியது!

''உடம்பு சரியில்லை... சரியானதும் நேரில் வருவேன் என்று ஒரு செய்தி வரவும், எனக்குப் பயமாகி விட்டது!

இவனை எப்படித் தவிர்ப்பது என்று யோசித்து, 'ஸிம்' கார்டை இரண்டாக வெட்டித் தூரத் தூக்கிப் போட்டு விட்டு, வேறு வாங்கிக் கொண்டேன்!'' அதற்குப் பிறகாக, எனக்கு எந்தத் தொல்லையும் இல்லை!

''இதுவரை, அந்த மனிதன் யார் என்றே தெரியாமல் இருந்தேன்! அதைத் தெரிந்துகொள்ளும் ஆர்வமும் இல்லை! சரியாகச் சொல்வதானால், அந்தப் பணிப்பயிற் சியைப் பற்றிய அருவருப்பில்லாமல் நினைக்க முடியாது போன்ற உணர்ச்சிதான் எனக்கு! எனவே, நான் படித்த இன்ஸ்டிட்யூட்டிலும், என்னைப் பற்றி யாரும் கேட்டால், எந்தத் தகவலும் கொடுக்க வேண்டாம் என்று சொல்லி விட்டேன்!

''சில சமயம், நீங்கள் எல்லோரும் சேர்ந்து நகைச்சுவை யாகப் பேசியது நினைவு வரும். நினைக்கையிலேயே, சிரிப்பு கூட வரும்! உடனேயே, இந்தக் கதையும் நினைவு வந்து வெறுப்பாக இருந்ததால், முடிந்த வரை, அது பற்றி நினைப்பதே இல்லை!

''நான் அறிந்த அளவில், அங்கு நடந்தது இதுதான். அத்தோடு, உங்கள் நண்பரைப் பொறுத்தவரையில், அவரது கதையில், என் செல்போன் தவிர, எனக்கு எந்த சம்பந்தமும் கிடையாது'' என்று முடித்தாள் சுகேசி.

சற்று நேரம் காரினுள் அமைதி நிலவியது!

அவள் சொன்னதை ஆராய்ந்து பார்த்துக் கொண்டிருக் கிறான்! அவனைப் பற்றித் தவறாக நினைத்ததற்காக, இதோ, மன்னிப்புக் கேட்கப் போகிறான் என்று சுகேசி நினைக்கையில், ''பிரமாதம்!'' என்று கைதட்டினான் அவன். ''நீ செய்ததையெல்லாம், தோழி செய்ததாக மாற்றி, மிகவும் கெட்டிக்காரத்தனமாக ஜோடிக்கப்பட்ட, மிக அருமையான கதை! ஆனால், இதை நான் நம்புவேன்



என்று, நிஜமாகவே நினைத்தாயா?'' என்று கேட்டான் சிவநந்தன்.

பெரும்பாலும் அவளிடம், அவன் பயன்படுத்தும் அந்த ஏளனக் குரலில்தான்!

திகைப்புடன் திரும்பி நோக்கி, ''நடந்ததைச் சொன் னால், ஏன் நம்ப மாட்டீர்கள்?'' என்று கேட்டாள் அவள்.

''ஏன் நம்ப மாட்டேனா? முதல் காரணம், நீயேதான்!'' என்று அவளை மேலும் திகைக்க வைத்தான் அவன்.

''என்னது? நானா? நான் என்ன செய்தேன்?'' என்று, முதலில் கேட்டது போலவே, மீண்டும் திகைப்புடன் வினவினாள் சுகேசி!

உண்மையிலேயே ஒன்றும் புரியாத திகைப்பு!

ஆனால், அதைப் பார்த்து சிவநந்தன் மேலும் சினந் தானே தவிர, அந்தத் திகைப்பு மெய்யானதாக இருக்கக் கூடும் என்று சற்றும் நினைத்தானில்லை!

''இப்படி ஒன்றும் தெரியாத குழந்தை மாதிரிக் கண்ணை விரித்து, 'நான் என்ன செய்தேன் நான் என்ன செய்தேன்' என்று திருப்பித் திருப்பிச் சொன்னால் நம்பிவிடுவேன் என்று நினைத்தாயா? கண்ணால் பார்த்ததை மறந்து, வெளி அழகில் மயங்கி அப்படித் தலை சுற்றிப் போவ தற்கு, நான் ஒன்றும் ப்ரேம் மாதிரி முட்டாளில்லை!''

கண்ணால் பார்த்தானாமா? அப்படி எதையும் பார்த் திருக்க முடியாது என்பது, அவளுக்கு நிச்சயம்! ஆனால், இவன் ஒரேயடியாக அவளைக் கறுப்படித்துக் காட்டுவதி லேயே குறியாக இருக்கிறானே!

''ஓ! அந்த ஆளின் பெயர் ப்ரேமா? ரொம்ப முக்கிய மான விவரம்தான் தெரிவித்து விட்டீர்கள்! போகட்டும்! நீங்கள் அந்த ப்ரேம் மாதிரி முட்டாள் இல்லை என்றால்,

வேறே எந்த மாதிரி முட்டாள் என்று, அதையும் சொல்கிறீர் களா?'' என்று, முடிந்த அளவு நக்கலாகக் கேட்டாள் அவள்.

''திமிராடீ?'' என்றான் அவன்.

டீ!

சிவநந்தனின் கண்கள் சிவந்து, கை முஷ்டி இறுகு வதைக் கண்டவளுக்கு உள்ளே சிலீரென்றது!

இது கிட்டத்தட்ட ஒரு காடு போலப் பெரிதும், சிறியது மான பசிய தாவரங்கள் அடர்ந்த இடம்! அவளுக்குப் பழக்கமற்றது என்பதோடு, ஆள் நடமாட்டம் இல்லாத, ஏகாந்தமான பகுதியும்கூட!

ஆத்திரத்தில், இங்கே அவளைச் சிவநந்தன் அடித்துப் போட்டுவிட்டுப் போனாலோ, ஏன், சும்மா காரிலிருந்து வெளியே உருட்டித் தள்ளிவிட்டுப் போனாலுமே, மீண் டும் வீடு சேர முடியாமல் என்னென்ன ஆபத்துகளில் மாட்டிக்கொள்ள நேருமோ?

ஆபத்தான மிருகங்கள்.. கெட்ட மனிதர்கள்...

நெஞ்சு படபடக்க ஏதேதோ எண்ணத் தொடங்கியவள் பிடிவாதமாகத் தன்னைத்தானே அமைதிப்படுத்திக் கொண்டாள்.

அப்படியெல்லாம் அவளை விட்டுவிட்டுப் போனால், வீட்டில் மற்றவர்களுக்கு அவனால் என்ன பதில் சொல்ல முடியும்? அதனால், அப்படி எதுவும் நடக்காது!

ஆனால், அளவு மீறி, இவனுக்கு ஆத்திரமூட்டுவதும் சரியல்ல!

எனவே முயன்று குரலை அடக்கி, ''பின்னே கண் ணால் பார்த்தேன் என்று குற்றம் சாட்டுகிறீர்களே தவிர, என்னைத் தப்பாக எண்ணும்படி என்ன பார்த்தீர்கள் என்று



சொல்ல மாட்டேன் என்கிறீர்களே?'' என்று கேட்டாள் சுகேசி!

அவனும் கோபத்தை அடக்க முயன்றானோ, ''தாராள மாகச் சொல்லுகிறேன்! கேட்டுக்கொள்!'' என்றவனின் குரலும் சற்றே தணிந்திருந்தது!

ஆனால், குரல்தான் தணிந்திருந்ததே தவிர, குற்றம் சாட்டுவதை விடாமல், ''அந்த பாங்க்கில், நாங்கள் நால்வரும் பேசிச் சிரித்ததை, நீயும் ரசித்தாய்தானே?'' என்று கேட்டான்.

''ஆமாம்... அதிலென்ன தப்பு? நல்ல தரமான வேடிக்கைப் பேச்சு காதில் விழுந்தால், அதை ரசிக்கக் கூடாது, காதைப் பொத்திக் கொள்ள வேண்டும் என்று சட்டம் ஏதும் இருக்கிறதா, என்ன? இருக்கிறது என்றால், அது எனக்குத் தெரியாது, சாமி!'' என்றாள் எரிச்சலாக அவள்.

''அப்படி ஒரு சட்டமும் கிடையாது என்று, என்னைப் போலவே, உனக்கும் நன்றாகத் தெரியும்! ஆனால், ரசிப்பதை வெளிப்படையாகக் காட்டிவிட்டுப் போவது தானே? அதை விட்டு, குனிந்து எதையோ எடுக்கிற மாதிரி பாவனையில், அதை மறைக்கிற பாவலா எதற்கு? குனி யும்போது, ஜீன்சுடன் நீ அணிந்திருக்கும் 'டாப்' மேலே ஏறி, நிலாக்கீற்று மாதிரி இடுப்பை அழகாகக் காட்டி, அவனை மயக்குவதற்காகத்தானே?''

அவளுக்கு நிஜமாகவே அதிர்ச்சியே!

வனிதா போல வெளிப்படையாகச் சிரித்தால், உரிமை எடுத்துக் கொள்ள தோன்றுமோ என்றுதான் அவள் பால்பென் போல எதையாவது கீழே போட்டு எடுத்ததே! அப்போது முதுகுப் பக்கம் இடுப்பு தெரியக்கூடும் என்று அவள் எண்ணியதே இல்லை!

ஏனெனில், அவள் ஒன்றும் அவ்வளவு குட்டையாக 'டாப்' அணிவது கிடையாது! ஏதோ ஒரு சமயம், கோடு போல லேசாகத் தெரிந்திருக்குமோ?

ஆனால், அதற்காக இவ்வளவு கேவலமாகவா குற்றம் சாட்டுவது?

"நானாக அப்படியெல்லாம் உடம்பு காட்டுவது கிடையாது! ஆனால், தொழில் விஷயமாகக் கடன் வாங்குவதற்காக பாங்குக்கு வருவதாகச் சொல்லிக் கொண்டு, பெண்களை எப்படியெப்படிப் பார்க்கலாம் என்று வந்தீர்கள் என்று நான் நினைத்ததில்லை!" என்றாள் சூடாக.

"நானும் அப்படிப் பார்க்கிறவன் கிடையாது! ஆனால், அப்போது உன்னைக் காட்டி, அவனுக்காகத்தான் என்று ப்ரேம் கூறியபோது எனக்கு என்னமாக இருந்தது தெரியுமா?" என்று குமுறினான் சிவா!

என்னமாக இருந்தது?

சிவநந்தனின் குரலில் எதையோ கண்டு, ஆவலாக அவனைப் பார்த்தாள் சுகேசி!

ஆனால், அவளது பார்வை, அவனுக்கு எதையோ புரிய வைத்துவிட, "அது.. இப்படித் தரம்கெட்ட பெண்ணிடம் மனதை விடுகிறானே ப்ரேம் என்று, எனக்கு ஆத்திரமாக வரும்!" என்று முடித்தான் அவன்! "அதற்கு ஏற்றாற் போல, அவனை விடப் பணக்காரனிடம் தாவி விட்டாய் தானே? அந்த புத்தி விடவே இல்லையே!"

சலிப்புற்று, "இப்படித்தான் என்று தீர்மானித்து விட்டீர்கள்! அப்புறம், எதற்கு விளக்கமும் இன்னொன்றும்? இன்னும் நாலைந்து நாட்களே! அப்புறம், அவரவர் வழியில் போகப் போகிறோம்! அதனால் நீங்கள் என்னை, என்ன தப்பாக வேண்டுமானாலும் நினைத்துக் கொள்ளுங்கள்! போங்கள்!" என்றாள் சுகேசி வெறுத்த குரலில்!



அப்போதும் விடாமல், "தப்பாக, நா....ன் நினைப்பதா? அப்படி நினைக்க வைத்ததற்கு, உன் வாய் மொழிச் சான்றே இருக்கிறது, தெரியுமா?" என்றான் சிவா.

அவளது வாய் வார்த்தையே, அவளைக் குற்றவாளியாக்குவதா? இவன் இன்னும் என்னவெல்லாம்தான் சொல்லுவான்?

நம்பமாட்டாமல் பார்த்தாள் சுகேசி!



## 7

யாரும் குறுக்கிட முடியாத தனிமையில் தன்னைச் சந்தித்து, அவளை முடிந்த அளவு திட்டித் தீர்த்துவிட வேண்டும் என்று சிவநந்தன் ஏற்கனவே தீர்மானித்து வைத்திருந்தான் என்று, சுகேசிக்குத் தோன்றியது. அதற்கான வாய்ப்புக்காகப் பல காலமாக காத்திருந்தான் என்றும்!

அதற்காகவே, இந்த மலைப் பாதையில் கார் ஓட்டக் கற்றுக் கொடுக்கும்படி பரந்தாமன் கூறியதும், மறுக்காமல், தயங்காமல் உடனே ஒத்துக் கொண்டிருக்கிறான்!

அவளுக்கு 'ஒரு பாடம் கற்றுக் கொடுக்க வேண்டியிருப்பதாக'வும் சொன்னானே!

இதெல்லாம், அவன் ஏற்கனவே மனதில் திட்டமிட்டிருந்த பாடம்தான் போலும்!

ஆனால், நடந்த அனைத்துக்கும், 'காமாலைக்கண்' என்பார்களே, அதுபோல அவன் பூசிய வண்ணம், சுகேசியை ஏற்கனவே திகைக்க வைத்திருந்தது!

எல்லாவற்றுக்கும் மேலாக, அவளை இதுபோலக் கேவலமாக நினைக்க, அவளது பேச்சே காரணம் என்று சிவா கூறியது, அவளை ரொம்பவே அதிர வைத்து விட்டது!

ஏனெனில், எந்த நிலையிலும், தன்னைத்தானே கீழி றங்கும்படியான வார்த்தைகளை அவள் கூறியிருக்க மாட்டாள் என்பது, அவளுக்கு நிச்சயம்!

எனவே, நம்ப முடியாமல் அவள் பார்த்த பார்வை, சிவ நந்தனின் கோபத்தை இன்னமும் அதிகரிக்கவே உத வியது!

''அழகான பெண்களுக்கே இது ஒரு திமிர்! கண்களை விரித்து ஒரு போஸ் கொடுத்தால், உடனே எல்லோரும் அதில் மதி மயங்கிக் காலடியில் விழுந்து, சொல்வதற் கெல்லாம் தலையாட்டத் தொடங்கி விடுவார்கள் என்கிற எண்ணம்!'' என்றான் எரிச்சலை மறையாமல் காட்டி!

''வேண்டாத மருமகள் நின்றாலும் பிழை, உட்கார்ந் தாலும் குற்றம் என்கிற மாதிரிப் பேசுபவர்களிடம் எதைச் சொல்லி என்ன செய்வது? இப்போது சும்மா பார்த்தாலும் தப்பு என்கிறீர்கள்! அப்படி உங்களிடம் நான் என்னதான் சொல்லித் தொலைத்தேன் என்று...''

''என்னிடம் சொல்லவில்லை. ஆனால் நீ சொன்னது காதில் விழுந்தது!''

வாய்ப்பை விடாமல், ''ஒட்டுக் கேட்ட உண்மை யாக்கும்!'' என்றாள் அவள் ஏளனமாக!

''ஒட்டுக் கேட்பானேன்? நாம் இருக்கும் இடத்துக்கு வந்து ஒருவர் பேசும்போது, அதைக் கேட்டுவிடக் கூடாது என்று, காதை பொத்திக் கொள்ளவா முடியும்?''

''அப்படி என்னதான் சொன்னேன் என்று நீங்கள் இன்னமும் சொல்லவில்லையே!''

''தாராளமாகச் சொல்லுகிறேன்!'' என்று அவன் சொன்ன விவரத்தைக் கேட்ட சுகேசி இன்னமும் அதிர்ந்து போனாள்!



அன்று அவளது நாக்கில் என்ன இருந்தது? அவளது கெட்ட நேரமா?

மற்றபடி, சும்மாவே எதையும் திரித்து அவளிடம் தப்புக் கண்டு பிடிக்கிறவனின் காதில் விழும்படியாக, என்ன சொல்லி வைத்திருக்கிறாள்!

அது, சிவனந்தன் வந்த அன்று நிகழ்ந்தது!

அன்றுதான், கதிர், சுதிரின் சைக்கிள்களை, அவர் களிடம் கேளாமலே, அவளுடைய தங்கைகள் எடுத்துப் போய், மரத்தில் மோதி, இவன், சிவநந்தன் அவர்களை வீட்டுக்குக் கூட்டி வந்தது!

பெண்களுடைய தாயார் சுமதிக்கு விஷயம் தெரிந்து, அவர்களைத் திட்டிக் கண்டிப்பதற்காக, வீட்டின் பின் புறத்தில் இருந்துகொண்டு, இரட்டையரான தங்கைகளை அழைத்து வருமாறு, சுகேசியை அனுப்பியிருந்தாள்.

சுமதி எப்போதும் மக்களை அடுத்தவர் முன்னிலை யில் திட்ட மாட்டாள். ஆனால், தனிமையில் நன்றாகக் கொடுத்துவிடுவாள்.

இயன்றவரை அதைத் தள்ளிப்போட்டு நழுவிக் கொண்டிருந்த தங்கையரை அழைத்து வருகிற கட்டாயம் சுகேசிக்கு!

மற்றவர் அறியாமல் கூப்பிடப் போனபோது, சிவநந் தனின் காரைக் காட்டி, கார்க்காரனை வளைத்துப் போடும் படி, தங்கைகள் விளையாட்டாகச் சொன்னது! சுகேசியும், அவர்களுக்கு ஏற்ப அதே இலகுத் தன்மையோடு விளை யாட்டாகவும், அதே சமயம், திட்டு வாங்க இருக்கும் தங்கைகளுக்கு இதமாகவும், அவர்களை ஒட்டியே பேசியது!

யோசித்துப் பார்த்தால் அந்தப் பேச்சில் சீரியசாக ஒன் றுமே கிடையாது!

ஆனால், அவர்கள் மூவரும் செய்த தப்பு என்று ஒன்று உண்டானால், அது, காருக்குள் சிவநந்தன் இருந்ததை அறியாமல், அவன் காதில் விழுகிற அளவு சத்தமாகப் பேசியதுதான்!

ஆனால், அது விளையாட்டுப் பேச்சு என்பதைக் கூடவா, ஒருவனால் ஊகிக்க முடியாது?

முடியும்! சாதாரண நடுநிலையில் இருந்து சிந்திப்பவனால், அந்த விளையாட்டுப் பேச்சில் கடுகளவு கெடுதல் கூடக் கிடையாது என்று நிச்சயமாகக் கண்டுகொள்ள முடியும்!

ஆனால், ஏற்கனவே சுகேசிக்குக் கறுப்பு வண்ணம் பூசி வைத்திருந்த சிவநந்தனுக்கு, அவனது எண்ணத்தை, இந்த உரையாடல் இன்னமும் உறுதிப்படுத்திவிட்டது!

இவனிடம் பேசிப் பயன் இல்லை என்று உள்ளூரத் தெரிந்தபோதும், ''ஒரு வேடிக்கைப் பேச்சை, இப்படித் திரித்துக் கூறலாமா?'' என்று சுகேசி கேட்டுப் பார்த்தாள்!

ஆனால், ''உள்ளே இருப்பதுதானே வெளியில் வந்தது!'' என்று சர்வ நிச்சயம்போல அவன் சொல்லவும், அந்த முயற்சியைக் கைவிட்டாள்!

''சரி, உங்கள் இஷ்டம்! இது சுதந்திர நாடு! உங்கள் மனதில் என்ன நினைப்பதும், உங்கள் உரிமை! உங்கள் கருத்தில் நீங்கள் பிடிவாதமாக இருக்கிறவர் என்பதையும் புரிந்துகொண்டேன்! எனவே, விட்டுவிடலாம். இப்போது வீட்டுக்குத் திரும்புகிறோமா? அல்லது இந்தப் பகுதியில் காரை ஓட்டுவது பற்றி.. என்ன கற்றுக் கொண்டாய் என்று பெரியவர்கள் யாராவது கேட்டால், பதில் சொல்வதற்கு ஏதாவது இருந்தால் நல்லது என்று தோன்றுகிறது!'' என்றாள், முயன்று வருவித்த நிதானக் குரலில்.



'நான் பிடித்த முயலுக்கு மூன்றே கால்' என்று தவறான பிடிவாதம் பிடிக்கிறவனோடு தன்னைச் சேர்ப்பது போலப் பேசுகிறாள் என்று சிவநந்தனுக்கு இப்போதும் ஆத்திரம் தான்.

ஆனால், பழைய பேச்சைத் தொடர்வதும், இப்போது கொஞ்சம் சின்னத்தனமாக இருக்கும் என்று தோன்றவே, அவள் கேட்டது பற்றிச் சொல்லலானான்.

''பொதுவாக ஏற்ற இறக்கம் உள்ள பாதை என்பதால், நாலாவது கியரில் ஓட்டுவது கூடாது! அதிகப் பழக்கம் இல்லாத பாதைகள் என்பதால், மிருகங்கள்... மனிதர்களும் கூடச் சட்டென எதிர்ப்பட்டுவிடலாம். அதனால், முழுக் கவனத்துடன் ஓட்ட வேண்டும்! ஏதாவது மிருகங்கள் வழியில் அசையாது நின்றால், அவைகளை விரட்ட, கார் ஹாரனைப் பலமாக அடித்தால் மிரண்டு ஓடிவிடும். அப்புறம், இந்தப் பக்கத்தில் எங்களுக்குள் ஒரு சைகை வைத்திருக்கிறோம்! திருடரோ, மிருகமோ தாக்கினால், காரில் இந்த பட்டனை அழுத்தினால்,பூ வாணம் மாதிரி ஒன்று, காருக்கு நேர் மேலே உயரத்தில், வெளிச்சத்துடன் சற்று நேரம் நின்று, நின்று, நாலைந்து முறை வெடிக்கும். அதைப்பார்த்ததும் கண்டுபிடித்து, உதவிக்கு வந்துவிடுவார்கள்! இன்றைக்கு, இது போதும் என்று நினைக்கிறேன்!'' என்று காரை, வீடு செல்லும் பாதையில் திருப்பினான்!

வீடு வந்து சேரும்வரையில் காரினுள் அமைதியே நிலவியது!

வீட்டினுள்ளும், நேரே அவர்களுக்கான அறைக்குள் சென்று உட்கார்ந்துவிட வேண்டும் என்று சத்தமின்றி விரைந்தாள் அவள்!

யார் முகத்தையும் பார்த்து, சிரித்த முகமாகப் பேச முடியாது போல ஓர் இறுக்கம்... ஏதோ பெரிய மலை ஏறி

இறங்கினாற்போல உடம்பில் ஒரு களைப்பும், கூடவே, நெஞ்சில் ஒரு சுமையுமாக சுகேசி மாடிக்கு விரைந்து சென்றபோது, 'சிலீர்' என்ற சத்தமும், ''ஐயையோ! இப்போது என்ன செய்வது?'' என்று பயந்த குரல்களும் கேட்கவே, சற்றுத் திகைத்து நின்றாள்!

ஏதோ கண்ணாடிச் சாமான் உடைந்து போயிருக்கிறது! குரல்கள் பையன்களுடையவை.

''நீ ஏண்டா, இப்படி வீசினாய்?'', ''நீ ஏண்டா பிடிக்கவில்லை?'' என்ற பேச்சைக் கேட்டால், கதிரும், சுதிருமாக எதையோ உடைத்து விட்டிருக்கிறார்கள் என்று தெரிந்தது!

என்னவோ, உடையட்டும்! எப்படியோ போகட்டும் என்று உள்ளே ஒரு சலிப்புடன் அவள் மேலே இரண்டு எட்டு எடுத்து வைத்தாள் அவள்.

ஆனால், ''அப்பா அடித்தே நம்மைக் கொன்றுவிடப் போகிறார்! எல்லோர் முன்னாலும் வைத்துத் திட்டி... சே, செத்துவிடலாம் போல இருக்கிறதுடா!'' என்று கதிரின் குரல் கூற, ''ஆமாம்டா!'' என்று சுதிரின் குரல் தொடர்ந்த போது, அதற்கு மேல் அக்கறையற்றுச் செல்ல முடியாமல், குரல் வந்த பக்கவாட்டு அறைக் கதவைத் திறந்து கொண்டு உள்ளே சென்றாள்.

மிரண்டு போய்ப் பார்த்தவர்கள், சுகேசியைக் கண்டதும், ''அக்கா!'' என்று அழுதார்கள்!

அவள் ஊகித்தது போலவே, கண்ணாடிச் சிதறல்கள் அறை முழுவதும் பரவியிருந்தன! கைப்பிடிப் போல, ஒரு பகுதியைப் பார்த்ததுமே, அது பரந்தாமனுடைய தாயாரின் முகம் பார்க்கும் கைக் கண்ணாடி என்று புரிந்து போயிற்று!

நல்ல உயர்தரமான பெல்ஜியக் கண்ணாடி அது. வட்டவடிவான கண்ணாடியைச் சுற்றிலும் பூவும் இலையுமாக அழகான மர வேலைப்பாடு செய்யப்பட்டிருக்கும்.அந்த



மர வேலைப்பாடே ஒரு புறம் அடி மரம்போல வழுவழுப்பாகச் செதுக்கப்பட்டு, அழகிய கைப்பிடியாக நீண்டிருக்கும்!

சுகேசியுடைய குடும்பம் இங்கே வந்த மறுநாளே, இது போன்ற பல பொருட்களைப் பரந்தாமன் அவளுக்குக் காட்டி மகிழ்ந்தது, அவளுக்கு நினைவு இருந்தது!

அதிலும், சுகேசிக்கு இந்தப் பழைய கலைப்பொருட்களில் ஆர்வம் இருப்பதைக்கண்டு, அவளுக்குத் தனியாகவே காட்டியிருக்கிறார்!

ஓர் அருமையான பழங்காலப் பொருள் உடைந்துபோனது, அவளுக்கும் வருத்தமே என்றாலும், இந்தப் பையன்களின் பயந்த முகங்கள் அதைவிட அவளைப் பாதித்தன!

பெரியப்பாவுக்குத் தெரிந்தால், நிச்சயமாகக் கோபப்படுவார்தான்! கோபத்தின் வெளிப்பாடு, எப்படி இருக்குமோ என்று, பையன்களைப் போலவே, அவளுக்கும் அச்சமாகத்தான் இருந்தது!

''இருந்திருந்து, இதைப் போய், ஏண்டா எடுத்தீர்கள்?'' என்று கவலையோடு கேட்டாள்.

''எல்லாம் இந்தக் கதிரால் வந்தது அக்கா! அந்த அறையில், டேபிள் டென்னிஸ் ராக்கெட் இருக்கிறது, காட்டுகிறேன் என்று சொல்லி, என்னைக் கூட்டி வந்து, இதைக் காட்டினான்! சரி, விளையாட எடுத்துப் போவோம், பிடி என்று, அதை எடுத்து, அவனிடம் போட்டேன்! அவன் பிடிக்காமல்...''

''ஆமாம், பிடிக்கிற விதமாகவா, நீ போட்டாய்? என்னவோ, பந்து மாதிரி இதை எடுத்து வீசிவிட்டு.. நான் பிடிக்கவில்லை என்பதைப் பார்!'' என்று பொறுமினான் சுதிர்!

''இப்போது அப்பா வந்து, இருவர் முதுகிலும் மத்தளம் வாசிக்கப் போகிறார்!'' என்று நடுங்கினான் கதிர்.

''அம்மா வேறு, இன்று அப்பாவுக்கும் சித்தப்பாவுக்கும் மதியச் சாப்பாடு வீட்டில் என்றார்கள்! பக்கத்தில் ஏதோ ஏலத்துக்குப் போய்விட்டுச் சாப்பிட வீட்டுக்கு வரப் போவதாகச் சொன்னார்கள்! போச்சு! இதைச் சுத்தப்படுத்தி ஒளித்து வைக்கக்கூட நேரம் இராது! ஐயோ! அப்பாவின் கார் ஹார்ன் சத்தம் கேட்கிறதே!'' முன்னவனுக்கும் அதிகமாக நடுங்கினான் சுதிர்!

லேசாக வலித்த நெற்றிப்பொட்டை அழுத்தி விட்ட வாறு சுகேசி வேகமாக யோசித்தாள்.

பின்னர், பையன்கள் இருவரையும் கையைப் பிடித்து அறைக்கு வெளியே அழைத்துச் சென்றாள்!

''கதிர், சுதிர், இருவரும் நான் சொல்வதைக் கவனமாகக் கேளுங்கள்! இருவரும் நைசாக யார் கண்ணிலும் படாமல், பின்பக்கம் தோட்டத்துக்குச் சென்றுவிடுங்கள்! இந்தக் கண்ணாடி உடைந்தது பற்றி, யாரிடமும் மூச்சுக் கூட விடாதீர்கள்! இதை நான் பார்த்துக் கொள்கிறேன்!'' என்று அவர்கள் இருவரையும் அனுப்பி வைத்தாள்.

அறைக் கதவை இழுத்து சாத்திவிட்டுக் காத்திருந்தாள்!

கீழே கார் வந்து நின்று, பெரியவர்கள் இருவரும் வீட்டினுள்ளே வந்ததும், பரந்தாமனின் பின்னோடு ஒட்டிக்கொண்டு நின்றாள்.

பிறர் கவனியாத நேரத்தில், ''உங்களிடம் ஒன்று சொல்ல வேண்டும், பெரியப்பா!'' என்று அவரது காதோரம் கிசு கிசுத்தாள்.

அவள் தனித்துப் பேச விரும்புவதைக் கண்டுகொண்ட அவர், தம்பியை அழைத்து, ''நடந்த விவரத்தை நீ சொல்லு, ஈசா! இந்த சுகிக் குட்டியிடம், அம்மாவின் கைக்காப்பு ஒன்றை.. காப்பு என்றால் என்னவோ என்று எண்ண வேண் டாம். முன் காலத்தில், தங்க வளையலைக் காப்பு



என்றுதான் சொல்லுவார்கள். அதைக் காட்ட வேண்டும் என்று எடுத்து வைத்து, மறந்து மறந்து போகிறது! இப்போது, நினைவு வருகிறபோது, காட்டிவிடுகிறேன்! நீ வாம்மா!'' என்று அவளை அழைத்துச் சென்றார்.

மாடி ஏறத் தொடங்கி, அவர்கள் பேச்சு மற்றவர் காதில் விழாத தூரத்துக்குச் சென்றதும், ''என்னம்மா, சிவா பாடம் ஒழுங்காகத்தானே கற்றுக் கொடுத்தான்?'' என்று சிறு கவலையுடன் விசாரித்தார்!

''என்ன அங்கிள், இப்படிக் கேட்டு விட்டீர்கள்? உங்கள் சிவா என்னவெல்லாம் கற்றுத் தந்தார், தெரியுமா?'' என்று கேட்டு, வீடு திரும்புமுன், கடைசியாக சிவநந்தன் சொன்ன அனைத்தையும் அப்படியே ஒப்பித்தாள் சுகேசி!

திருப்தியடைந்து, ''வேறு என்னம்மா சொல்ல வேண் டும்?'' என்று கேட்டார் அவர்!

''அது.. வந்து பெரியப்பா, நான் ஒரு தப்புப் பண்ணி விட்டேன்! உங்களுக்கு ரொம்ப வருத்தம் தரக்கூடிய தப்பு! சாரி பெரியப்பா! அதற்காக, நீங்கள் என்னை மன் னிக்க வேண்டும்!'' என்றபடி, கண்ணாடி உடைந்து கிடந்த அறையைத் திறந்து, அவரை உள்ளே கூட்டிச் சென்று காட்டினாள்!

''எப்படி நடந்தது என்றே தெரியவில்லை, பெரியப்பா! எடுத்து, அதன் அழகைப் பார்த்து, ரசித்துக் கொண்டிருந் தேன்! பிடி வழுவழுவென்று எவ்வளவு அழகாக இருக் கிறது என்று நினைத்ததுதான் தெரியும்! பார்த்தால் கண் ணாடி கீழே உடைந்து கிடக்கிறது! பாட்டியுடையது! இதன் மேல், உங்களுக்கு எவ்வளவு பிரியம்! இப்போது உங் களுக்கு எவ்வளவு வருத்தமாக இருக்கும் என்று தெரியும்! ஆனால், தயவுபண்ணி, என்னை மன்னித்து விடுங்கள். பெரியப்பா!'' என்று முடித்தாள்.

''மன்னிப்பு என்னடா?'' என்று அவளது தலையை வருடித் தோளைத் தட்டிக் கொடுத்தார் பரந்தாமன்! ''ஒரு பழைய பொருள்! இப்போது அதனால் பயன்கூடக் கிடையாது! அது உடைந்து போனதே என்று, நீ வருத்தப்பட்டாயா? அவசியமே கிடையாதே!'' என்று, அவளைத் தேற்றினார்!

பிறகு, ''சுகிம்மா, நான் சொல்வதைக் கவனமாகக் கேள்! இந்தக் கண்ணாடி உடைந்ததைப் பற்றி, யாரிடமும், மூச்சுக் கூட விட வேண்டாம்! எல்லாம் நான் பார்த்துக் கொள்ளுகிறேன்! நீ கவலையே படாமல், எப்போதும் போல, சந்தோஷமாக இரு!'' என்று முடித்தார்!

அவளுக்குத் தலையாட்டிவிட்டு, என்ன செய்யப் போகிறாரோ என்று யோசித்தபடி அங்கிருந்து அகன்றாள், சுகேசி!

ஆனால், மதிய உணவுக்கு முன்னால், அவர் எல்லோரையும் மாடிக்குக் கூப்பிடவும் அவளுக்குக் கொஞ்சம் அதிர்ச்சிதான்.

பெரியப்பா உண்மையைக் கண்டு பிடித்திருப்பாரோ? எல்லோர் முன்னிலையிலும் கதிர், சுதிரைத் திட்டினால், நன்றாக இராதே!

இந்த மதுவும், மதியும் அதை விடாமல் ஜாடையாகச் சொல்லிச் சொல்லிக் கிண்டலடிப்பார்களே! பாவம்.. அந்தப் பையன்கள்!

சுகேசியின் மனம் இப்படி யோசித்தது என்றால், கண்ணாடி உடைந்து கிடக்கும் அதே அறைக்குப் பரந்தாமன் எல்லோரையும் அழைத்துச் செல்லவும், அவருடைய மகன்கள் முகத்தில் ஈயாடவில்லை!

ஒருவரையொருவர் பார்த்துக்கொண்டு பலிக்கடாக்கள் போலத் தந்தையைப் பின் தொடர்ந்த இருவர் மனதிலும் இருந்தது, இதுதான்!



இந்த அக்காவிடம் நம்பிச் சொன்னால், தங்கைகளுக்கு அக்காவாக, முதல் வேலையாக அப்பாவிடம் போட்டுக் கொடுத்துவிட்டாளே! அவர்களாக முதலில் போய்ச் சொல்லியிருந்தால் கூட, அபூர்வ வாய்ப்பாக, அப்பா அவர்களை மன்னித்திருக்கலாம்!

பையன்களின் முகத்தைப் பார்த்த சிவநந்தன், அவர்கள் தொடர்பான ஏதோ என்று உணர்ந்து, எதுவானாலும் அவர்களுக்கு ஆதரவாகப் பேச வேண்டும் என்று எண்ணி முன்னேறிச் சென்றான்.

பூட்டியிருந்த அறையின் இரட்டைக்கதவுகளையும் நன்றாகத் திறந்து, ''உள்ளே போக வேண்டாம். இங்கிருந்தே பாருங்கள்!'' என்று காட்டினார்.

உடைந்த கண்ணாடித் துண்டு, துகள்களைப் பார்த்ததும், ஒரு வேக மூச்சுடன் அபிராமி மகன்களையும், சுமதி சின்ன மகள்களையும் பார்த்தனர்.

மற்ற யாரையும் கவனியாமல், ''ஐயோ! பெரியம்மாவின் கைக்கண்ணாடி போலத் தெரிகிறதே!'' என்றது, வாகீசன்தான்.

ஒரு கேள்விக்காகக் காத்திருந்தவர் போல, ''ஆமாமடா ஈசா! சும்மா எடுத்துப் பார்த்துக் கொண்டிருந்தேன்! என்னதான் அழகான வேலைப்பாடு என்றாலும், இதனால் இப்போது யாருக்கு என்ன பயன்? கண்ணாடி கூட மங்கி விட்டதே என்று நினைத்ததுதான் தெரியும். பார்த்தால், கண்ணாடி இப்படி உடைந்து கீழே கிடக்கிறது! பிடி ஏதும் ஏற்கனவே கொஞ்சம் உளுத்துப் போயிருக்கும்போல! போகட்டும்! யாரும் பெரிதாக நினைக்க வேண்டாம்! நான் கூப்பிட்டுச் சொன்னதே, யாரும் தெரியாமல் வந்து, உடைந்த கண்ணாடித் துண்டுகளில் மிதித்துக் காலை வெட்டிக்கொள்ளக் கூடாதே என்பதற்காகத்தான்! அபி,

யாராவது உருப்படியான வேலையாளைக் கூப்பிட்டு, இதை நன்றாகச் சுத்தம் பண்ணச் சொல்லும்மா! இப் போதைக்குக் கதவைப் பூட்டி வைத்துவிட்டு...'' என்று எல்லோரையும் வெளியே வரச் சொல்லிக் கதவைப் பூட்டியவர், எல்லோரையும் மொத்தமாகப் பார்த்து முறுவலித்து, ''வாருங்கள், எல்லோரும் சாப்பிடப் போகலாம்! வா, ஈசா!'' என்று முன்னே நடந்தார்.

பெரியப்பாவின் பார்வையில், தன்னைப் பார்க்கையில் ஒரு சின்ன சிமிட்டல் இருந்ததோ என்ற சந்தேகம் சுகேசிக்கு!

எவ்வளவு பிரியம் இருந்தால், அவளுக்குப் பிரியமான ஒரு பொருள் உடைந்ததையும் பொருட்படுத்தாமல், உடைத்தவள் என்று அவர் நம்பும் அவளைக் குற்றத்தி லிருந்தும் மீட்டுப் பழியைத் தானே ஏற்பார்!

'அண்ணன், அண்ணன்' என்று அப்பா உருகுவதில் ஆச்சரியமே இல்லை!

விழிகளில் லேசாக அரும்பிய நீர்த்திரையைத் துப் பட்டாவால் ஒற்றிக்கொண்டு நடந்தவளை, சற்று மெல்ல நடந்து பின் தங்கிய பையன்கள் முற்றுகையிட்டார்கள்!

''அக்கா, என்னக்கா நடந்தது? நாங்கள் உடைத்தது, எப்படி அப்பா உடைத்ததாக ஆயிற்று? அவரே ஒத்துக் கொள்கிறார்! எங்களுக்கு ஒன்றுமே புரியவில்லையே?'' என்று அவளைக் குடைந்தார்கள்!

அவளுக்காக, அவர்களுடைய தந்தை, பழியைத் தன்பேரில் போட்டுக் கொண்டார் என்றால், இவர்களுக்கு எப்படி இருக்குமோ என்று யோசித்து, ''அ...துவாடா? பெரியப்பா பார்த்தபோது, நான் இந்தக் கதவுப் பக்கமாக நின்றேனா? நான் உடைத்திருப்பேனோ என்ற சந்தேகம் பெரியப்பாவுக்கு! நேராகப் பாராமல் சொல்ல முடியா



தில்லையா? அத்தோடு, வீட்டுக்கு விருந்தாளியாக வந்த பெண்! குற்றம் சொல்லி, எதற்கு அழ வைப்பது என்று நினைத்து, இப்படிச் செய்துவிட்டார் என்று தோன்று கிறது! வேண்டுமானால், அப்படித்தானா என்று பெரியப்பா விடம் கேட்போமா?'' என்று அப்பாவியாகக் கேட்டாள் அவள்!

தப்பித்தோம், பிழைத்தோம் என்று இருக்கும் இந்தப் பையன்களாவது, அவர்களுடைய தந்தையிடம் இதுபற்றிக் கேட்பதாவது என்று உள்ளூர நமுட்டுச் சிரிப்பு அவளுக்கு!

அவள் எதிர்பார்த்தது போலவே, ''ஐயையோ ஆளை விடு அக்கா! எப்படியோ, முதுகு கிழியாமல் தப்பித்தோம் என்று இருக்கிறோம்! இதைப் போய்த் திரும்பக் கேட்டு மாட்டிக் கொள்வதா? ஊகூம்!'' என்று கோரஸ் பாடினார்கள் இருவரும்!

ஆனால், கூடவே ''நீ ஒன்றும் வீட்டுக்கு வெறும் விருந் தாளி அல்ல, அக்கா! எங்களுக்கும் நிஜமான அக்காதான்!'' என்றும் சொல்லிவிட்டு அவர்கள் ஓட, அதற்கொரு தரம் கண் கலங்கியது, அவளுக்கு!

எல்லோரும் அவளிடம் பிரியமாக இருக்கிறார்கள். ஆனால், மிகவும் முக்கியமானவன் மட்டும் அடியோடு வெறுக்கிறானே!

மீண்டும் கண் கலங்கும் போலத் தோன்றவே, அவசர மாக, இந்த ஜன்னல் கிரில்லில் பத்து பூக்கள், ஜன்னலின் திரை 'சிந்தடிக் லேஸ்' லேசில் டெய்சிப் பூ என்று பிடி வாதமாக மனதை வேறு புறம் திருப்பி சமாளித்துவிட்டு, அதன் பிறகே உணவருந்தச் சென்றாள் சுகேசி!

மௌனமாக எல்லாவற்றையும் கவனித்த சிவநந்தன், கதிரையும், சுதிரையும் தனியே பிடித்து, விசாரித்து விஷயம் முழுவதையும் தெரிந்துகொண்டதோடு, மேற்

கொண்டு நடந்ததையும் ஊகித்துக் கொண்டான் என்பது, அவளுக்குத் தெரியாது!

ஏனெனில், அத்தை கணவரின் அந்த சின்னச் சிமிட்டலை, அவனும் கவனித்திருந்தான்.

அத்தோடு, அவனுடைய அத்தை பையன்களுக்காகப் பழியேற்க முன்வந்த சுகேசி. அவன் ஏற்கனவே அறிந்திருந்த சுயநலம் பிடித்த, அயோக்கிய சுகேசியுடன் கொஞ்சமும் ஒத்துப் போகவில்லையே என்று அவன் வெகு நேரம் குழம்பினான் என்றும் அவளுக்குத் தெரியாது!

அப்படித் தெரியாத காரணத்தினாலே, மறுநாளும் சிவநந்தனோடு சென்று, மலைப் பாதையில் கார் ஓட்டுதலை அவனிடம் நன்கு பழகிக் கொள்ளுமாறு, பரந்தாமன் கூறியபோது, வேறு வேலை இருப்பதாகச் சொல்லி, அவள் மறுத்தாள்!



## 8

அன்று இரவு வெகுநேரம் தூக்கமின்றித் தவித்து, ரொம்பவும் யோசித்து, மனதோடு மூளையையும் கசக்கி, சுகேசி எடுத்த முடிவு அது!

தீயிடம் நெருங்குவானேன்? பிறகு சூடு பட்டுக் கொண்டு வருந்துவானேன் என்ற எண்ணம் சுகேசிக்கு.

சிவநந்தன் மனதில், சுகேசி மிகவும் கெட்டவள், கேவலமானவள் என்ற எண்ணம், ஆழமாகப் பதிந்து போயிருந்தது!

அதை மாற்றிக் கொள்ளும் ஆவல் அவனுக்கு இல்லை என்பதோடு, மாற்றிக் கொள்ளக்கூடாது என்று பிடிவாதத்துடனும் இருந்தான்!

அதை மாற்றுவதற்கு, அவளால் என்ன செய்ய முடியுமோ, அதைச் செய்து முயற்சி பயனற்றும் போய் விட்டது!



பிடிவாதத்துக்கு மருந்து ஏது?

எதுவுமில்லை என்கிறபோது, அனாவசியமாக அவனை நெருங்கி, குட்டுப்படுவானேன்? அப்புறம் வலிக்கிறதே என்று அழுவானேன்?

அதனால், அங்கு இன்னும் இருக்கப் போகும் சில நாட்களும், அவனை விட்டுத் தூர விலகி இருந்து விடுவது என்று, சுகேசி தீர்மானித்தாள்.

ஆனால், அது அங்கிருந்த பெரியவர்களுக்குப் புரியாமல், மறுநாளும் சிவநந்தனோடு சென்று, மலைப் பாதையில் காரோட்டலை முழுமையாகக் கற்றுக்கொண்டு விடுமாறு கூறினார்கள்!

பாசிமணிக் கோத்து, அதைக்கொண்டு 'நிட்டிங்' கில் பூ வேலை செய்து, ஒரு கைப்பை செய்ய, அபிராமிக்குக் கற்றுக் கொடுக்கப் போவதால், அன்று கார் ஓட்டும் பயிற்சி வேண்டாம் என்றாள் சுகி.

ஆனால், ''அதெல்லாம் கற்றுச் செய்வதற்கு, உன் பெரியம்மாவுக்கு நேரம் ஏதும்மா? சும்மா மதுரைக்கு 'ஷாப்பிங்' போகிறபோது, வேண்டிய தினுசு வாங்கிக் கொள்ளட்டும்! நீ கிளம்பு!'' என்றார் பரந்தாமன்.

அபிராமியும் கூடச் சேர்ந்துகொண்டு ''பெரியப்பா சொல்வது சரிதான். சுகிம்மா! இந்த மாதிரி வேலைக்கெல்லாம், எனக்கு அவகாசம் கிடைக்காது! அதனால், நீ கிளம்பிப்போய், இந்தப் பக்கம் காரை நன்றாக ஓட்டப் படித்துக்கொண்டு வா!'' என்று, அவளை விரட்டாத குறையாகச் சொன்னாள்!

அப்போதும் சுகி அசைவதாக இல்லை!

அவள் பட்ட வேதனை, அவளுக்குத்தானே தெரியும்? இன்றும் என்ன கொசுறு?

எனவே, ''நாங்கள் இன்னும் இங்கே இருக்கப்போவது, மூன்று அல்லது நாலே நாட்கள்! அதற்குப்போய், இங்கே கார் ஓட்டுவது பற்றிப் படிக்க வேண்டுமா? எதற்குப் பெரியப்பா, வீண் வேலை? பாவம், மிஸ்டர் சிவநந்தனுக்கும் வீணான தொல்லை!'' என்று மேலும் மறுத்தாள்.

பெரியவர்கள் நால்வரும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டனர்!

பிறகு தம்பியைப் பார்த்து, ''என்ன ஈசா, நீ சுகியிடம் சொல்லவில்லையா? இனிமேல் எல்லா விடுமுறைக்கும், நீங்கள் இங்கே கொஞ்ச நாளாவது வந்துவிட்டுத்தான், வேற எங்கே போவதும்! உன் அப்பா, அம்மா இரண்டு பேரும் சரியென்று விட்டார்களே! நீயும் தங்கைகளும் கூட வருவீர்கள்தானே? அப்படி வரும்போது ஓட்ட வேண்டாமா? சொல்லேன் ஈசா!'' என்று தம்பியைத் தூண்டினார் பரந்தாமன்.

உடனே, ''ஆமாம்!'' என்றார் வாகீசன்!

சுமதியும் சேர்ந்துகொண்டு, ''ஆமாம்! அப்படி வரும் போது, நம் காரையே எடுத்துக் கொண்டு, பெரியம்மாவோடு எங்கே வேண்டுமானாலும் போய் வரலாமில்லையா? எதற்காக, வேண்டாம் என்று பிகு பண்ணுகிறாய்?'' என்று கேட்கவும், சுகேசிக்கு எரிச்சலாக வந்தது!

''நான் ஒன்றும் பிகு பண்ணவில்லை! தேவையற்ற ஒரு விஷயத்துக்காக, மற்றவர்களை எதற்கு அனாவசியமாகத் தொல்லை பண்ண வேண்டும் என்று நினைத்தேன்! அவரவருக்கு, ஏதேதோ வேலை இருக்கலாம் அல்லவா?'' என்றாள் அவள்.

''அந்த 'மற்றவர்கள்' என்பது நானாக இருந்தால், அத்தையும் மாமாவும் ஒன்று சொன்னால், அதற்கு மேல் முக்கியமாக இந்த உலகத்தில் எனக்கு எதுவும் கிடையாது! நீ கிளம்புவதானால், நான் எப்போது வேண்டுமானாலும் வரத்தயார்!'' என்று சொல்லி, அவன் பிகுவேதும் பண்ணாதவன், வீட்டுப் பெரியவர்கள் சொன்ன பேச்சுக் கேட்கிற நல்ல பிள்ளை என்று காட்டிக் கொண்டான் சிவநந்தன்!



வாகீசனும் அதைச் சுட்டிக்காட்டி, ''இதைப் போல இன்னொரு பண்ணையைத் திறம்பட நிர்வகிக்கிற பிள்ளை! அவரே உனக்காக நேரம் ஒதுக்குகிறார் என்றால், அப்புறம் என்னம்மா? கிளம்பு!'' என்று கூறவும் அதற்கு மேல் தயங்குவது நன்றாயிராது என்றுணர்ந்த சுகேசியும் ''சரிப்பா'' என்று எழுந்து, காரை நோக்கி நடந்தாள்.

கார் இன்று சென்றது வேறு வழி!

மலைப் பாதைகளுக்கே உரிய ஏற்ற இறக்கங்கள் இருந்தாலும், ஓரளவுக்குப் பாதையும் நன்றாக இருந்தது!

கார் கிளம்பிச் சற்று தூரம் சென்றதும், ''முதலிலேயே சொல்லி விடுகிறேன்! நான் ஒன்றும், உங்களோட கார்ச் சவாரி செய்யும் ஆசையிலோ. உங்களை மயக்கிக் கையில் போட்டுக் கொள்ளும் திட்டத்திலோ, இப்போது உங்களோடு வரவில்லை! முடிந்தவரை, இந்தப் பயிற்சியைத் தவிர்க்கத்தான் முயன்றேன். நினைவில் வைத்துக் கொள்ளுங்கள்!'' என்று கறாக் குரலில் இயம்பினாள் சுகேசி.

''அதைத்தான் வீட்டிலேயே ரொம்பத் தெளிவாகக் காட்டி விட்டாயே! நேற்று நமக்குள் ஏதேனும் தகராறு நடந்ததோ என்று கவலைப்படுகிற அளவுக்கு வீட்டுப் பெரியவர்கள் யோசிக்கத் தொடங்கி விட்டார்கள் என்றதால்தான், கூட்டிப் போகத் தயார் என்று நான் முன் வந்தேன்! மற்றபடி, உன்னோடு தனியாகக் காரில் செல்லும் ஆவலில் அப்படிச் சொன்னேன் என்று நீயும் நினைக்க மாட்டாய் என்று நம்புகிறேன்!'' என்றான் சிவநந்தனும், அதே போன்ற குரலிலேயே!

''நிச்சயமாய்!'' என்று பதிலுரைத்துவிட்டு, தலையை வெளிப்புறமாகத் திருப்பி வைத்துக் கொண்டாள் அவள்!

வெகு நேரம், அல்லது மணிக்கணக்காய்த் தோன்றிய அரைமணி நேரம் அமைதியிலேயே கார் ஓடிக் கொண் டிருந்தது!

பிடிவாதமாக வெளிப்புறம் திரும்பியிருந்தவளின் கண்கள் முதலில் எதையும் தெளிவாகப் பார்க்கவில்லை!

எதையும் பார்க்க வேண்டும், ரசிக்க வேண்டும் என்ற ஆர்வமே இல்லாமல் வெற்றுப் பார்வையாகக் கண் வெளியே நிலைத்திருந்ததே தவிர, உள் மனதில் இருந்த வலிதான் பெரிதாகத் தெரிந்தது!

அப்பாவின் ஆசைக்காக அந்த இடத்துக்கு வந்து, வாழ்நாள் முழுதுக்குமாக வேதனையை அல்லவா, உடும் பாகப் பிடித்து வைத்திருக்கிறாள்!

முன்பாவது, இவ்வளவு பழகாததால், கொஞ்சம் கொஞ்ச மாக மறக்க முடிந்தது!

இப்படியெல்லாம் அருகமர்ந்து செல்வதையும், வீட் டில் ஒரே அறையில் உண்டு பேசிச் சிரித்து... எதை மறப்பது?

இதே நினைவில் இருந்ததால், ஏதோ பச்சை நிறத்தில், ஒரு வெற்றுத் திரை ஓடிக் கொண்டே இருந்த உணர்வு தான் அவளுக்கு!

வெகு நேரம் கழித்துதான், அந்தப் பச்சைப் பசிய மரம், செடி, கொடிகளுக்கு அப்பால் இருந்த மலையும், மலை யில் அங்கங்கே வெள்ளி ரேக்குகளாக சூரிய ஒளியைப் பிரதிபலித்த நீர்த் தாரைகளும் அவளது பார்வையில் தெளிவாகப் பட்டன!

அதிலும் ஓரிடத்தில் சற்று அதிகமாகத் தண்ணீர் அருவிபோலக் கொட்டியதோ என்னவோ, வானவில் லாகவே வண்ணங்கள் தென்பட்டன.



தன்னையறியாமல் அவனிடம் திரும்பி, ''உங்களுக்குத் தெரிகிறதோ, இல்லையோ, கொஞ்சம் காரை நிறுத்தி விட்டுப் பாருங்களேன், தண்ணீர் விழுந்து தெறிப்பது வானவில்லைப்போலவே தெரிகிறது!'' என்றாள் சுகேசி!

மறுக்காமல், அவனும் காரை நிறுத்திப் பார்த்துவிட்டு, ''இந்த வழியில், இப்படி அழகான காட்சிகள் நிறைய இருக்கும்! இன்னும் கொஞ்சம் தூரம் போனால், ஒரு மலையின் பாறை, கை மாதிரி நீண்டுபோய், அடுத்த மலையைத் தொடப் போவதுபோலத் தோன்றும்! இரண டுக்கும் இடையே இடைவெளி அதிகம் உண்டு என் றாலும், இங்கிருந்து பார்ப்பதற்கு, அப்படித் தோன்றும்! இது போல, இன்னும்! அதனால்தான் இந்தப் பாதையில் வந்தேன்'' என்றான் சிவநந்தன்!

''ஓ!'' என்றவளுக்குச் சற்று நேரம் பேச்சே வரவில்லை!

அவளுக்காக சிவநந்தன் ஒன்று செய்தான் என்பது... அது எவ்வளவு சின்னது என்றாலும், தன்னை இவ்வளவு பாதிக்கும் என்று அவள் சற்றும் எதிர்பார்க்கவில்லை!

ஆனால், என்னவோ பெரிய அன்புச் செய்கை மாதிரி, அவளுக்கு, உள்ளம் சிலிர்த்துப் போயிற்று!

சேச்சே! இப்படி உணர்ச்சி வசப்படக் கூடாது! இங் கெல்லாம் கூட்டிப் போய்க் காட்டு என்று பெரியப்பா, அல்லது பெரியம்மாவை இவனிடம் சொல்லி அனுப்பி யிருக்கலாம்! திரும்பிப் போய்க் காட்டினான் என்று சொல்வதற்காகக்கூட, சிவா கூட்டி வந்திருக்கலாம்!

வெளியே சுற்றிலும் ரசிப்பது போலப் பார்த்துவிட்டு, திடப்பட்டு விட்ட குரலில், ''ரொம்ப நன்றி!'' என்றாள் சுருக்மாக!

''எதற்கு நன்றி? நீ இங்கிருந்து போன பிறகு, இந்த மலையின் அழகேனும் நினைவு இருக்கும் அல்லவா?''

அதாவது அவனை, மற்றவர்களை மறந்து போவாள் என்கிறானாக்கும்!

''நினைக்க வேண்டியது எதுவும் மறக்காது!'' என்றாள் அவள் பதிலுக்கு!

சிறிது நேரம் அமைதியில் கார் ஓடிய பின், ''நேற்று என்ன நடந்தது?'' என்று கேட்டான் அவன்.

அவனைத் திரும்பிப் பார்த்தாள் அவள்.

என்னவோ அவன் கேட்டால், அவள் எல்லாம் சொல்லி விடுவாள் என்பதுபோல, பாதையில் மட்டும் கவனம் வைத்த, ஒரு திடமான தோற்றம்!

முன்தினம் சொன்னாளே, எதையாவது நம்பினானாக்கும்? ஜோடித்தது என்றானே! இன்று மட்டும் ஜோடிக்க மாட்டானாக்கும்?

''ஆடு, மாடு, கோழி, குருவி... எல்லாம்தான் நடந்தது!'' என்றாள் சுகேசி, அந்த இலக்குத் தன்மையோடு.

''இதில் உன்னை விட்டுவிட்டாயே! நீ கூடத்தான் நடந்திருப்பாய்!''

''நீங்களும்தானே?''

தன்னை மீறி முறுவலித்துவிட்டு, ''என்ன நடந்திருக்கும் என்று எனக்குப் புரிகிறது! ஆனால், பையன்கள் உடைத்தது உனக்கு வந்ததும், பிறகு அது மாமா உடைத்ததாக மாறுவதும்... எல்லோரும் உன் மேல் இவ்வளவு அன்பு வைத்திருக்கிறார்களே என்றால்... அதுதான் ஒரே முரண்பாடாகப் புரிபட மாட்டேன் என்கிறது!'' என்றான் அவன், யோசனையோடு!

உதட்டைப் பிதுக்கினாள் சுகேசி. ''இனம் இனத்தோடே என்பார்கள். நல்லவர்களுக்கு, நல்லவர்களைப் பிடிக்கும்!'' என்றாள் தொடர்ந்து.



''அதுதானே முரண்பாடாக மனதைக் குழப்புகிறது என்றேன்!'' என்றான் அவன் விடாமல்.

குரல் இலகுவாக இருந்தாலும், சொன்னது, அதுவே தானே? நீ கெட்டவள் என்றே சொன்னால், கேட்பவளுக்கு மனம் நோகாதா?

புரியாதவனுக்குத் தேறுதல் சொல்லும் குரலில், ''ரொம்பக் கவலைப்படாதீர்கள்! பெரிய பெரிய ஞானிகளுக்கே எல்லாம் புரிவது இல்லையா!'' என்று சொல்லி இளக்காரம் செய்தாள்.

''ஞானிகள் என்ன ஞானிகள்! பெண்ணின் மனதை, அவளைப் படைத்த பிரம்மாவாலேயே புரிந்து கொள்ள முடியாதாம்! அவ்வளவு ஆழம் என்று படித்திருக்கிறேன்!'' என்றான் அவன் பதிலுக்கு.

''இப்படி ஏதாவது கிறுக்கித் தள்ளுவது, ஒரு நாகரீகமாகப் போயிற்று! ஏன், ஆண்களின் மனது மட்டும் திறந்த புத்தகமாகவா இருக்கிறது, அதிலும்தான் ஆயிரம் ரகசியங்கள்!''

''நான் எதையும்...'' என்று தொடங்கியவன், பேச்சோடு காரையும் நிறுத்தினான்! ''அந்தப் பக்கம் பார்!''

பக்கவாட்டில் விரிந்த காட்சி அவளது கருத்தைக் கவர்ந்தது!

ஏதோ சீராக அடுக்கி வைத்த மாதிரி, மரங்கள்!

அவள் ரசனையோடு பார்க்கையில், ''அந்தப் பக்கம் முழுவதும், எங்கள் பண்ணைப் பகுதி!'' என்றவனின் குரலில் மறைக்க முயன்றும், பெருமை எட்டிப் பார்த்தது!

வலி தரும் பேச்சை மாற்ற ஒரு வாய்ப்பு என்று, ''உங்கள் பண்ணையில் என்னென்ன வைத்திருக்கிறீர்கள்?'' என்று அவள் விசாரிக்க, அவன் உற்சாகத்துடன் விவரிக்கலானான்!

பழப் பண்ணை தவிர தமிழ்நாட்டில் தலை சிறந்த பூ ஏற்றுமதியாளர்களில், அவனும் ஒருவன் என்பதை, ஆச்சரியமும் மகிழ்ச்சியுமாகக் கேட்டாள் அவள்! ஆர்க்கிட், 'கிளாஸ் ஹவுஸி'ல் ரோஜாக்கள்...

இப்படி சுவாரசியமாகப் பேச்சு, போனபோதுதான், முகத்தில் ரத்தம் வழிய ஒருவன் நடு வழியில் நின்று, காரை நிறுத்துமாறு சைகை செய்தான்.

''அவசரப்பட்டுக் கார்க் கதவைத் திறக்க வேண்டாம்!'' என்று காரின் சீட் அடியில் இருந்து அவன் எடுத்த பொருளைக் கண்டதும், அவளுக்கு நெஞ்சு திடுக்குற்றது!

''போக்குவரத்து அதிகம் இல்லாததால், தனியாக வரும் கார்கள், திருடர்களுக்கு எளிதான இலக்காவதும் உண்டு!''

கைத்துப்பாக்கியை மறைவாகப் பிடித்துக் கொண்டு கார்க் கதவைத் திறந்து பார்த்தவன், ''மாயப்பா, நீயா?'' என்று துப்பாக்கியை இடையில் சொருகிக் கொண்டான்.

''நமக்கு அடுத்த எஸ்டேட்டில் ஒரு முக்கிய ஊழியன்'' என்று சுகேசியிடம் சொல்லிவிட்டு இறங்கி, என்ன வென்று விசாரித்தான்.''

அழுதுகொண்டே அந்த மாயப்பன் சொன்னது இதுதான்!

அவனுடைய மனைவிக்கு இது பிரசவ மாதம்! குழந்தை தலை இறங்கவில்லை என்று மருத்துவம் பார்க்கும் பெண் வைத்தியர் சொன்னாராம்! அறுவை சிகிச்சை செய்துதான் குழந்தையை எடுக்க வேண்டுமாம்! அவளும், பலவீனமாக இருப்பதால், மதுரையில் இருக்கும் வசதிகள் உள்ள பெரிய மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லுமாறு கூறி, கடிதமும் கொடுத்து விட்டார்களாம்!



அடிவாரம் வரை சைக்கிளில் கூட்டிப் போய்விட்டால், அங்கே தெரிந்தவர்கள் வீட்டில் சைக்கிளை விட்டுவிட்டு, பஸ்ஸில் மதுரைக்குப் போய்விடலாம் என்று மனைவியை சைக்கிளில் உட்கார வைத்து அழைத்து வந்தானாம்!

பேசிக் கொண்டே வந்தபோது, எப்படியோ கவனம் தவறி, சைக்கிள் கல்மேல் ஏறி, இரண்டு பேரும் விழுந்து விட்டார்களாம்!

அந்த இடம் கீழ்ச் சரிவு என்பதால் கொஞ்ச தூரம் உருண்டு...

இரண்டு பேருக்குமே அடி!

''அவளுக்கு, அசையவே முடியவில்லை!'' என்று மீண்டும் அழுதான் மாயப்பன். போய்ப் பார்த்தால், பெரிய வயிற்றுடன் வலியில் முனகியவாறு, ஒரு காலை நீட்டி, ஒரு மாதிரிக் கோணலாக உட்கார்ந்திருந்தாள். மாயப்பனுடைய மனைவி சக்கி! அவளது கை, கால்களிலும் பெரிய சிராய்ப்புகளும், ரத்தமும்!

சிவநந்தனைக் கண்டதும், முதலாளி இனம் என்ற மரியாதை நிமித்தம் எழ முயன்றவள் மீண்டும் வலியில் துடித்தாள்.

''இரு இரு! அப்படியே உட்கார்ந்திரு, மாயப்பா. நான் போய்க் காரை, முடிந்த அளவு அருகே கொண்டு வருகிறேன். பிறகு, மூவருமாகச் சேர்ந்து, சக்கியைத் தூக்கி, பின் சீட்டில் உட்கார வைப்போம்! ஆனால் முதலில்... சுகி, சக்கிக்கு எலும்பு ஏதும் முறிந்திருக்கிறதா என்று, உனக்குப் பார்க்கத் தெரியுமா?'' என்று, சுகேசியிடம் வினவினான் சிவநந்தன்.

''கிட்டத்தட்ட! கல்லூரியில் ஒரு தரம் இது பற்றி, ஒரு டெமோ செய்து காட்டினார்கள்!'' என்று, அருகில் சென்ற சக்கியைப் பரிசோதித்துப் பார்த்தாள் சுகேசி.

பிறகு, ''எலும்பில் பிரச்சினை இல்லை! ஆனால், கால்தான் அசைக்க முடியாமல் இழுத்துக் கொண்டிருப்பது போலத் தோன்றுகிறது! சுளுக்கியிருக்கலாம்!'' என்றாள்.

சிரமப்பட்டுப் பேசினாள். ''அது, இந்தப் புள்ளை எட்டாம் மாசத்திலேருந்தே, இப்படித்தான், இழுத்துக்கு துங்க! இன்னைக்கு, காலைக் கொஞ்சமும் அசைக்கவே முடியல்ல...''

''அழாதே... எல்லாம் சரியாகிப் போகும். நான் போய்க் காரைக் கொண்டு வருகிறேன்!'' என்று சென்று வீட்டுக்குத் தகவல் தெரிவித்துவிட்டுக் காரைக் கொணர்ந்தான்.

அவன் சொன்னது போலவே, காரில் அடிவாரத்துக்குப் போனார்கள்.

மாயப்பனுக்கும் அடி பட்டிருந்ததால், சக்கியின் உடம்பு பயணத்தில் குலுங்காமல், அவளை அணைத்துப் பிடித்தபடி சுகேசிதான் உட்கார்ந்திருந்தாள்.

சின்னக் குரலில் பரிவாகவும், பிரிவாகவும் பேசி, சக்கியின் பயத்தை மாற்றியபடி!

அங்கே முதலில் காணப்பட்ட மருத்துவமனையில் அடிபட்டவர்களுக்கு சிகிச்சை நடந்தது!

வயிற்றுக் குழந்தைக்குப் பாதிப்பு எதுவும் இல்லை. பல வசதிகள் கொண்ட மதுரை மருத்துவமனைக்குக் கூட்டிப் போவதே நல்லது என்று அங்குள்ள மருத்துவரும் சொன்னார்.

மாயப்பன் குறிப்பிட்ட மருத்துவமனையில் கவனிப்பு நன்றாக இருக்கும் என்பதோடு, நோயாளியின் வருமானத்துக்கு ஏற்ப பில் வருமாம். ஏசி அறை எடுக்கும் பணக்காரர்களின் பில்லில் நாலில் ஒரு பங்குகூட, வார்டில் சிகிச்சை பெறும் அடித்தள மக்களுக்கு வராது. ஆனால் கவனிப்பில் குறைவே இராது. மருத்துவமனையுடைய உரிமையாளரான ஒரு கோடீசுவரர், தரும காரியமாக இப்படிச் செய்கிறார் என்றும் விளக்கிக் கூறினார்!



எல்லோருக்கும் கொஞ்சம் வாழைப்பழங்களை வாங்கி, உண்ணக் கொடுத்துவிட்டு, மீண்டும் பயணத்தைத் தொடர்ந்தான் சிவநந்தன்!

மதுரை நகரில், சக்கியை மருத்துவமனையில் சேர்த்து விட்டு, அந்தக் கணவன் மனைவியின் உளமார்ந்த நன்றியைப் பெற்றுக் கொண்டு, இருவரும் கிளம்பினர்.

அடுத்து, வீட்டுக்கோ அல்லது அவளைப் போலவே அவனுக்கும் பசியுணர்வு இருந்தால், ஏதாவது ஹோட்டலுக்கோ போவான் என்று சுகேசி நினைத்தாள்.

ஆனால், சிவநந்தன் காரை நிறுத்திய இடம் ஒரு துணிக்கடை! அதிலும், நல்ல தரமான 'ரெடிமேடு' துணிகள் விற்குமிடம்! பணிப் பயிற்சிக் காலத்தில், வனிதாவும் அவளும் இங்கே வந்து ஒன்றிரண்டு வாங்கியிருக்கிறார்கள்!

இந்தப் பிறவியில்தானா, அது?

கடை வளாகத்தின் 'பார்க்கிங்'கில் அவன் காரை நிறுத்தவும், புரியாமல் பார்த்தாள் சுகேசி.

இறங்குமாறு சைகை செய்து ''மலையடிவாரத்திலேயே பார்த்தேன். உன் உடையில் ஆங்காங்கே ரத்தக் கறையும், அழுக்குமாக இருக்கிறது. இங்கே வேறு ஒன்றை வாங்கி அணிந்து கொள். அப்புறமாக, ஹோட்டலில் சாப்பிட்டுவிட்டுத் திரும்பலாம்!'' என்றான் அவன்.

சற்றுத் திகைத்து தன் உடையைக் குனிந்து பார்த்தாள் சுகேசி. இதில், ஹோட்டலுக்குப் போனால், என்னவோ என்று, எல்லோரும் அவளைத்தான் பார்ப்பார்கள்!

நான் பணம் கொண்டுவரவில்லையே என்று சொல்ல நினைத்து வாயை மூடிக் கொண்டாள் சுகேசி. அதைச் சொல்வது அசட்டுத்தனமாகத் தெரியும்!

எனவே, ''திருப்பித் தந்துவிடுவேன்!'' என்ற நிபந்தனையோடு கடைக்குள் சென்று, பொருத்தமான ஓர் உடையை

வாங்கி, அங்கேயே மாற்றிவிட்டுப் பழைய உடையை ஒரு பையில் போட்டு வாங்கிக் கொண்டு வந்தாள்.

பெண்கள் பகுதியை விட்டு வெளியே வந்து சிவநந்தனைத் தேடினாள்.

ஆண்கள் பகுதியில் அவனுக்காக எதையாவது தேடுகிறானோ என்று பார்த்தால், சுவரில் இருந்த படத்தைச் சும்மா வெறித்தபடி, எதையோ தீவிரமாக யோசித்துக் கொண்டிருந்தான் அவன்!

பெரிய குழப்பம் போலும்!

அருகில் சென்று, ''ரொம்ப முக்கியமான யோசனை போல?'' என்றாள் அவள்.

திரும்பிப் பார்த்து, ''ஆமாம் உன்னைப்பற்றி!'' என்று பளீரென்ற முறுவலுடன் கூறிஅவளைத் திகைக்க வைத்தான் அவன்!



## 9

மெய்யாகவே சுகேசிக்குத் திகைப்புத்தான்.

முதல் திகைப்பு, சிவநந்தனின் சிரிப்பு!

முற்பிறவி போலத் தோன்றிய அவளது பணிப் பயிற்சிக் காலத்தில், நண்பர்களோடு பேசும்போது, அவன் இப்படிச் சிரித்துப் பார்த்திருக்கிறாள்.

எவ்வளவோ கட்டுப்படுத்தியும், காந்தம் போல அந்தச் சிரிப்பு அவளை ஈர்த்திருக்கிறது!

அவளிடம் பாங்க் கடன் பற்றிப் பேச நேரும்போது கூட, இந்தப் பளீர் முறுவல்கள் சில முறை தலை காட்டியது உண்டு!

முதலில் மட்டுமே!

பிறகு முறுவலென்ன, ஆளே காணாமல் போனான்!

பெரியப்பா வீட்டில்கூட, ஊகூம், அவளிடம் அவன் இயல்பாக நகைத்ததில்லை!



எனவே, இந்தப் புன்னகை அவளுக்கு வியப்பையே உண்டுபண்ண, ''என்ன மதுரைக் காற்று, ரொம்ப நல்ல காற்றாகத் தெரிகிறது! உங்களுக்குச் சிரிப்புக்கூட வருகிறதே!'' என்று கேலியாகக் கேட்டுவிட்டு நாக்கைக் கடித்துக் கொண்டாள் அவள்!

நல்லவேளையாக அவன் கூட்டுக்குள் சுருக்கிக் கொள்ளவில்லை!

மாறாக, சிறுநகை புரிந்து, ''இன்றைக்கு அப்படித்தான் தோன்றுகிறது! சிரிக்க வைப்பது மட்டுமில்லாமல், சிந்தனையிலும் நல்லதை மட்டுமே எண்ணிப் பார்க்க வைக்கிறது! மற்றதை மறக்கடிக்கவும் செய்கிறது! நினைவுகூட வரவில்லை!'' என்றான் அவன்.

அவளைப் பற்றி யோசித்ததாக, இப்போதுதானே சொன்னான்? அதில் நல்லதை மட்டுமே நினைப்பது என்றால்...

வாய்ப்பை விடாமல், ''ஒருவேளை, நல்லது மட்டுமேதான் இருக்கிறதா? என்னவோ! இல்லாதது எப்படி நினைவு வரும்?'' என்று சொல்லிவிட்டு, மீண்டும் நாக்கைக் கடித்தாள் அவள்!

ரொம்பவும் சுயப் பிரதாபம் பேசுவதாக வக்கரித்து விடுவானோ?

ஆனால், அப்போதும் நல்ல வேளையாகத் தவறாக எடுக்காமல், ''அப்படியும் இருக்கலாமோ என்ற சந்தேகம் இப்போது வருகிறது! ஆனால்... பார்ப்போம்! இப்போது சாப்பிடப் போவோமா?'' என்று அவளை அழைத்துச் சென்றான் சிவா.

''இங்கே வந்தால், நாங்கள் வழக்கமாகச் சாப்பிடுகிற இடம்!'' என்று ஒரு ஹோட்டலுக்கு அவளைக் கூட்டிப் போனான்.

சுவை நன்றாக இருந்தது! பசியும் சேர்ந்து கொள்ளவே, சுகேசி ஒரு வெட்டு வெட்டிவிட்டாள்!

அல்லது, அவளை நல்ல விதமாகவும் நினைக்கிறான் என்ற எண்ணமே அவளுக்கு நிம்மதியை அளித்து, இயற்கையான பசியைத் தூண்டிவிட்டதோ?

அவ்வளவா, மனநிலை உடம்பைப் பாதிக்கும் என்று யோசிக்கும் போதே, முன்தினம் பசியின்றிக் கொறித்தது. அவளுக்கு நினைவு வந்தது!

இவ்வளவு தூரம், இவன் அவளைப் பாதிக்கிறானா என்று எண்ணும்போதே, உடல் சிலிர்த்தது அவளுக்கு!

பில்லுக்குப் பணம் கொடுத்து, டிப்சும் வைத்துவிட்டு எழுந்தபோது, ''வரவேற்பில் சில அருமையான சித்திரங் களை, இன்னும் அழகான சட்டமிட்டு மாட்டி வைத்திருப் பார்கள்! பார்த்துக் கொண்டிரு. இங்கே ஒரு தினுசு நெல் லிக்காய் முரப்பா கிடைக்கும். சுவையோடு உடம்புக்கும் நல்லது! அத்தைக்கும் ரொம்பப் பிடிக்கும். வாங்கிக் கொண்டு வந்து விடுகிறேன்!'' என்று, சிவநந்தன் உண வறையில் இருந்த 'கவுண்டர்' பக்கம் சென்றான்.

சிவா சொன்னது போல, மெய்யாகவே அந்த ஓவியங் கள் மிக அருமையாக இருந்தன.

அவற்றை ரசித்துப் பார்த்துக் கொண்டிருக்கும் போது, ''ஹல்லோ, சுகேசி!'' என்ற உரத்த அழைப்புடன் தோளில் யாரோ கை போடவே, அனிச்சையாக உதறியபடியே திரும்பிப் பார்த்தாள், சுகேசி.

''உன் தலைமுடியைப் பார்த்தே நீயாக இருக்கும் என்று கண்டுபிடித்துவிட்டேனே! அதே அடர்த்தி, அப்படியே இருக்கிறதே!'' என்று ஆர்ப்பரித்தவள் வனிதா!

வனிதாவை அங்கே காணவும், ஒரு கணம் சுகேசிக்குத் தூக்கி வாரிப் போட்டுவிட்டது!



இவளால், எவ்வளவு அசூசியும், அவமானமும் படும் படி ஆகிவிட்டது! சிவநந்தன் அவளை, எவ்வளவு தப்பாக எண்ணிவிட்டான்!

மனம் குமுறினாலும், உற்சாகத்துடன் அழைக்கிற வளிடம் அதைக் காட்ட முடியாமல், ''நீ எப்படி இருக் கிறாய்?'' என்று, வனிதாவிடம் குசலம் விசாரித்தாள்.

''ம்! நன்றாகத்தான்! ஆனால்... அந்த வகையில் அவ் வளவு நன்றாக இல்லை, சுகேசி. அதற்காகத்தான் உன்னை எப்படியாவது சந்திக்க வேண்டும் என்று தேடிக் கொண்டிருந்தேன்! இன்று என்னுடைய 'லக்கி டே' என்று தோன்றுகிறது! இல்லாவிட்டால் இந்த இடத்தில் உன்னை நான் இப்படிச் சந்திப்பேனா?'' என்றாள் அவள் பாவனையோடு!

எப்போதுமே கைகளை ஆட்டி, கண்ணை விரித்து, மூக்கைச் சுருக்கி, உதட்டைப் பிதுக்கி, முகத்திலும் பல் வேறு பாவனைகளைக் காட்டிப் பேசுகிறவள்தான்! அவளது இயல்பு என்று எண்ணி முன்பு ஏற்றவளுக்கு, இன்று எரிச்சல் வந்தது!

''ஆமாம் ஆச்சரியம்தான். ஏனெனில், நான் இன்று மதுரைக்கு வந்ததே, ஒரு விபத்து மாதிரிதான்! சரியாகச் சொல்வதானால், ஒரு விபத்து காரணமாகத்தான்!'' என்றாள் சுகேசி.

''ஓ! அப்படியா?'' என்று கண்களைப் பெரிதாக விரித்து வியந்தாள் வனிதா!

ஆனால், யாருக்கு என்ன விபத்தோ என்பது பற்றிய ஆர்வம் சிறிதுமின்றி, ''அதுவும் நல்லதுதான்! அந்த விபத்து நடந்ததே, எனக்காகத்தான். நான் உன்னைச் சந் திப்பதற்காகத்தான் என்று தோன்றுகிறது! கடவுள் எவ் வளவு நல்லவர் பார்த்தாயா?'' என்றாள் தொடர்ந்து!

''அது எப்படியோ? ஆனால், உலகம் சின்னதாகி விட்டது என்று சொல்கிறார்களே! அதனாலும் இருக்கும்!'' என்று வேண்டும் என்றே தட்டிப் பேசினாள் சுகேசி.

''இருக்கட்டும், இருக்கட்டும்! ஆனால், இனனும் நான் உன்னை எதற்காகத் தேடினேன் என்று நீ கேட்க வில்லையே!'' என்று உதட்டைக் குவித்துக் குறைப்பட் டாள் வனிதா.

''அது என்ன விபத்து என்று நீயும்தான் கேட்க வில்லை!'' என்று சுகேசி, வேண்டும் என்றே!

ஒரேயடியாக ஒருவர் தன்னிலேயே மூழ்கியிருக்கக் கூடாதுதானே?

ஆனால், 'எதற்காகக் கேட்பது?' என்று கேட்டாள் மற்றவள்! ''விபத்து உனக்கு இல்லை! நீ நன்றாகப் புதுத் துணியும் தானுமாக பளிச்சென்று நிற்கிறாய்! உனக்கு வேண்டியவர்களுக்கும் இருக்க முடியாது! நல்ல பெரிய ஹோட்டலில் சாப்பிட்டு, இனிப்பு சீரகம் குதப்பியவாறு, ஜாலியாகப் படம் பார்த்துக் கொண்டு நிற்கிறாய்! அப்புறம் எதற்கு விசாரிக்க வேண்டும்?'' என்று வனிதா அடுக்கிய போது, சுகேசிக்குத்தான் பதில் சொல்ல முடியாமல் போயிற்று!

''ஆனாலும் விபத்து என்றால், யாருக்கோ துன்பம் தானே? பாவம் என்ன கஷ்டமோ என்று விசாரிப்பாய் என்று நினைத்தேன்...'' என்று ஒருவாறு சமாளித்தாள்.

''ச்சு! நம் நிலைமையே அந்தரத்தில் ஆடுகிறபோது, அவசியமில்லாமல் மற்றவர்களைப் பற்றி யோசிப்பா னேன்?'' என்று சுகேசியின் காரணத்தை அலட்சியப் படுத்தி ஒதுக்கினாள் வனிதா!

ஒதுக்கிவிட்டு, ''நீ எனக்கு ஓர் உதவி செய்ய வேண டுமே!'' என்று அவள் தொடங்கவும், சுகேசிக்கு உள்ளே பகீரென்றது!



முன்னொரு நாளில், இவளுக்கு உதவியென்று ஒன்றைச் செய்துவிட்டு, இன்னமும் அதிலிருந்து மீள முடியாமல் தவிப்பது போதாதா?

நம்பவே மாட்டேன் என்றானே என்று வருத்தத்துடன் நினைத்தவளுக்குச் சட்டென ஒரு யோசனை தோன் றிற்று!

உதவி கேட்டு இதோ நிற்கிறாளே, இந்த வனிதாவால் தானே, அவளுக்குப் பிரச்சினையே! இவளையே அழைத் துப்போய், சிவநந்தனிடம், அன்று நடந்தது பற்றிச் சொல்லச் சொன்னால் என்ன?

உற்சாகமாக எண்ணமிடும்போதே, வனிதா உண் மையைச் சொல்வாளா என்ற சந்தேகமும் உண்டாயிற்று!

ஒருவேளை, தனக்கு ஒன்றுமே தெரியாது என்று வனிதா பொய் சொல்லிவிட்டால், உள்ளதும் கெட்டுப் போய்விடுமே! யோசித்துப் பார்த்தால், ஆண்களின் நடுவில் தன்னைப் பெரிதாகக் காட்டிக் கொள்ளும் வனி தாவின் குணத்துக்கு, அதுதான் சாத்தியமே! உண்மையைச் சொல்லித் தன்னை இறக்கிக் கொள்வதல்ல!

ஏதோ இரண்டு சம்பவங்களால், சுகேசி நல்லவளாக வும் இருக்கக் கூடுமோ என்ற ஐயமே இப்போதுதான் சிவநந்தனுக்கு ஏற்பட்டு இருக்கிறது! தோன்றிய வேகத்தி லேயே அதை அழிப்பதா?

சிவநந்தன் வருமுன், வனிதா கிளம்பிப் போய்விட வேண்டுமே என்று தோன்றத் தொடங்கிவிட்டது சுகேசிக்கு!

எனவே, ''என்னிடம் உதவியெல்லாம் கேட்காதே, வனிதா! உனக்கு ஓர் உதவியைச் செய்துவிட்டு, நான் பட்டபாடு, இந்தப் பிறவி முழுதுக்கும் போதும்! நீ என் செல்லைப் பயன்படுத்திக் கொண்ட விதத்துக்குப் பிறகும், நான் உனக்கு உதவினேன் என்றால்... ஐயோ கடவுளே

போதும், போதும்! ஆளை விடு! என்னை விட்டுவிட்டுத் தயவு செய்து போய்விடு!'' என்று ஒரேயடியாக மறுத்தாள்.

அவளது மறுப்பைச் சற்றும் பொருட்படுத்தாமல், ''ச்சின்ன உதவிதான். சுகேசி! ஒரு தோழிக்கு இதுகூடச் செய்யமாட்டாயா?'' என்று கைகளை ஏந்தி, அப்பாவியாய் நோக்கி, சோகப் போஸ் கொடுத்துக் கெஞ்சினாள் வனிதா!

இதுபோல, சொந்தக் குடும்பத்தைப் பற்றிப் புறம் சொல்லி, அவள் கேட்டதற்குச் சரி சொல்லித்தானே...

''ஊகூம், முடியாது. வனிதா! தயவு பண்ணி, உனக்கு வேண்டிய உதவியை, நீ வேறு யாரிடமாவது கேட்டு நிறைவேற்றிக் கொள்! என்னை விட்டுவிடு!'' என்று அவளை விரட்ட முயன்றவாறே, கவலையுடன் உணவறை வாயிலைப் பார்த்தாள் சுகேசி.

சிவநந்தன் எப்போது வந்துவிடுவானோ என்ற பயம் அவளுக்கு!

சுகேசியின் அவசரம் ஒரு மாதிரி புரிய, ''வேறு யாரையோ கேட்பதற்கு, நான் உன்னை ஏன் தேடப் போகிறேன், சுகேசி? எனக்கு வேண்டியது, உன்னிடம் தான் இருக்கிறது! அதாவது, உன் செல்லில் மட்டுமே! ஒரே ஒரு நம்பர்! அதை உன் செல்லில் பார்த்துச் சொன்னாய் என்றால், அப்புறம், வினாடி கூட இங்கே நிற்க மாட்டேனே!'' என்றாள் வனிதா.

''என் செல்லில் உள்ள எண்ணா? எ... என்ன எண் அது?''

''அதுதான், ப்ரேமின் செல் நம்பர்!''

திகைத்துப் போனாள் சுகேசி!

இவள் இன்னமும் ப்ரேமை விடுவதாக இல்லையா? இவளால், போதைப் பழக்கத்துக்கு அடிமையாகி, மறு வாழ்வு மையத்தில் ஒய்ந்து கிடக்கிறவன்! அவனது எண்ணைக் கேட்கிறாளே!



''அவரை விடப் பெரிய பணக்காரனைப் பிடித்துவிட்டதால், ப்ரேம் வேண்டாம் என்று போனவளுக்கு, இப்போது அது எதற்கு?'' என்று சிறு கடுப்புடன் கேட்டாள் அவள்.

''ச்சு! போனேனப்பா! அதுதான் நான் செய்த பெரிய தப்பு! அந்த ஆள், அவ்வப்போது நாய்க்கு எலும்புத் துண்டு போடுகிற மாதிரி நடக்கப் பார்த்தான். அப்புறமும் வேறு எதுவும்கூட சுகமில்லை! எனவே, மீண்டும் ப்ரேமைப் பிடித்து, வாழ்க்கையில் அப்படியே செட்டிலாகி விடலாமா என்று பார்க்கிறேன்!'' என்றாள் வனிதா.

மீண்டும் ப்ரேமைப் பிடிப்பதாம்!

எவ்வளவு எளிதாகத் திட்டமிடுகிறாள்!

''ப்ரேம் மறு வாழ்வு மையத்தில் இருக்கிறார் தெரியுமா?''

''ஓ! அவ்வளவு பாதித்துவிட்டதா? அவனது பதில்களைப் பார்க்கும் போதே நினைத்தேன். பையன் ரொம்பக் கிறங்கிவிட்ட மாதிரி இருக்கிறதே என்று! திரும்ப இவனைப் பிடிப்பதும் எளிதாக இருக்கும் என்று நினைக்கிறேன். சீக்கிரமாக அவனது செல்போன் எண்ணைத் தருகிறாயா?'' என்று அவசரப்பட்டாள் வனிதா.

''அந்த எண் என்னிடம் இல்லையே!'' என்று ஒரு விதமான திருப்தியோடு அமைதியாகக் கூறினாள் சுகேசி!

புரியாமல் பார்த்து, ''அதெப்படி இல்லாமல் போகும்? அவனோடு எவ்வளவு பேசியிருக்கிறேன்! எனக்கு, அவன் எத்தனை பதில் தந்தான்! எல்லாம் உன் செல்லில்தானே! கட்டாயம் இருக்கும்! செல்லைக் கொடு நானே பார்த்துக் கொள்ளுகிறேன்!'' என்று, செல்லுக்காகக் கையை நீட்டினாள் வனிதா.

எவ்வளவு நிச்சயம்!

கொஞ்சம் படித்த அளவிலேயே அவர்கள் இருவரின் உரையாடலை எண்ணும்போது, இப்போதும் சுகேசியின்

முகம் சூடேறிக் கன்றலாயிற்று! இந்த அளவுக்கு ஒருவனை இழுத்துவிட்டு... விட்டுப் போனாளே! இப்போது மீண்டும் பிடிப்பாளாமா?

சொல்லும் ஒவ்வொரு வார்த்தையையும் உள்ளூர ரசித்தபடி, சுகேசி கூறினாள். ''நீயும் அந்தப் ப்ரேமும் எழுதிக் கொண்டதைக் கொஞ்சம் படிக்கும்போதே, எனக்கு அருவருப்பாக இருந்தது, வனிதா! அதனால், அந்த 'ஸிம் கார்டை' எடுத்து வெட்டி, அழித்துத் தூரப் போட்டுவிட்டேன். இப்போது என்னிடம் இருப்பது, முற்றிலும் வேறு. அதனால், அந்த ப்ரேமின் எண் என்னிடம் இல்லை! என் செல் எண்ணும் முன்னிருந்தது அல்ல!''

வழக்கமான அலட்டல்கள் எல்லாம் மறந்து, வனிதாவின் முகம் ஏமாற்றமும் அதிர்ச்சியுமாகச் சுருங்கியதைப் பார்க்க. அவளுக்குத் திருப்தியாகவே இருந்தது!

இவ்வளவு பேச்சு நடக்கும் போதும் அடி மனதில், சிவநந்தனை இன்னும் காணவில்லையே என்றும், அதன் காரணம் யோசித்தும் சுகேசிக்கு உள்ளூர அதே நினைவு தான்!

உணவறை கவுண்டரில், அந்த நெல்லிக்காய் முரப்பாவை வாங்கிக் கொண்டு, அவன் எப்போதோ வந்திருக்க வேண்டும்! ஆனால், அவன் இன்னும் வரவில்லை என்றால், அவளோடு வனிதாவைப் பார்த்துவிட்டு, எங்கோ நின்று அவர்களது உரையாடலைக் கவனிக்கிறானோ என்ற ஐயம் அவளுக்கு வந்தது!

அவள் பேச்சை ஒட்டுக் கேட்கிறானா என்று ஒரு கணம் அவளுக்குக் கோபம் வந்தபோதும், உடனேயே அது தணிந்தது!

சந்தேகம் என்று வந்தால், அது தெளிந்துதானே ஆக வேண்டும்?



அவளாக, வனிதாவை அவனிடம் கூட்டிச் சென்று, தன்னை நிரூபிப்பது கடினம்!

பேசப் பேச, அவளுக்கே முழுசாகத் தெரியவரும் வனிதாவின் குணத்துக்கு, சுகேசியின் நன்மைக்காக என்று, அவள் உண்மை சொல்வது, ஒரு போதும் நடக்காது!

எனவே, இப்படித்தான் தெளியட்டுமே!

ஏமாற்ற மிகுதியில், பயின்று வைத்திருந்த செயற்கைப் பாவனைகள் அத்தனையும் மறந்து, ''அடிப்பாவி, உன் மடத்தனத்தால், என் எதிர்காலத்தையே கெடுத்துவிட்டாயே!'' என்று சீறினாள் வனிதா!

சிவநந்தனுக்கு முழுக்க முழுக்கத் தெளிய வைத்து விடும் கடைசி முயற்சியாக, ஒரு பெரிய மூச்சை எடுத்துக் கொண்டு, ''உன் எதிர்காலமா? என் செல்லில் உன் எதிர்காலம் எப்படி வரும்? ப்ரேம், உன்னைத்தான் நினைத்தார் என்று உனக்கு என்ன நிச்சயம்?'' என்று கேட்டாள் சுகேசி.

கேட்டுவிட்டு, அவளுக்கு உள்ளே உதறல்தான். ஏறுமாறாய் ஏதாவது பதில் வந்தால், அவள் அடியோடு தொலைந்தாள்தான்! ஆனால், இவர்கள் பேச்சை, சிவநந்தன் எதிலிருந்து கேட்டுக் கொண்டிருக்கிறானோ?

இதை விட்டால், அவனுக்கு முற்றும் தெளிய வைக்க, வேறு வாய்ப்பு ஏது?

நல்லவேளையாக, இப்போது வனிதா அவளை ஏமாற்றவில்லை!

''பின்னே, உன்னை நினைத்தார் என்று நினைத்தாயா?'' என்று குரோதமாகக் கேட்டாள் அவள். ''சும்மா மெழுகு பொம்மை போல அழகாக இருந்தால், ஆண்களைக் கவர்ந்துவிடலாம் என்று எண்ணினாயா? அதற்கு என்று ஒரு திறமை வேண்டாமா? ஒரு சிரிப்பு, ஓரப் பார்வை, கவர்ச்சியான போஸ்... இதெல்லாம், உனக்கு என்ன தெரியும்? இன்ன மாதிரி வருவேன், இன்ன மாதிரி

உடுப்பேன்... என்று எத்தனை சங்கேதங்கள்! சொல்லி விட்டுச் செய்யாமல் அலைக்கழிப்பது! சில சமயம், தெரியாமல், என்னதின் நிறத்திலேயே நீயும் மக்கு மாதிரி அணிந்து கொண்டு வந்து நிற்பாய்! அப்போது, நீயும் வலை வீசுகிறாயோ என்று அவன் முழிக்கும் போது எனக்கு எப்படிச் சிரிப்பு வரும், தெரியுமோ?''

தன் திட்டத்தைப் பாழாக்கிவிட்டாளே என்ற ஆத்திரத் தில், அதற்குப் பழி வாங்குவதற்காக சுகேசியை இகழ்வ தாக எண்ணி, வனிதா அடுக்கிக் கொண்டே போனது, சுகேசிக்கே வசதியாயிற்று என்பது, பாவம், வனிதாவுக்குத் தெரியாது!

ஆனால் சுகேசிக்கு இது போதுமானது!

''சிரிப்பு ஆரோக்கியத்துக்கு நல்லது, வனிதா! அந்த வகையில் நீ ஆரோக்கியமாக இருப்பதற்கு, நான் உதவி யிருக்கிறேன் என்பது, எனக்குக் கொஞ்சம் சந்தோஷ மாகவே இருக்கிறது! ஆனால், என்ன செய்வது? இப்போது உனக்கு உதவ, என்னால் முடியாது! அதனால் போய் வருகிறாயா?'' என்று கரம் குவித்தாள் சுகேசி!

வெறுப்புடன் நோக்கி, ''போய் வருவதா? மீண்டும் உன்னிடம் வந்து எனக்கு என்ன லாபம்? அதனால் போகிறேன், வரமாட்டேன்!'' என்றுவிட்டு வெளியேறி னாள் மற்றவள்.

அங்கே கிடந்த குஷன் இருக்கை ஒன்றில் கையைக் கட்டிக் கொண்டு அமர்ந்து, காத்திருப்பதைக் காட்டிக் கொண்டாள் சுகேசி.

அருகில் கிடந்த இருக்கையில் ஆள் அமர்வதை உணர்ந்தும், அவள் வேண்டும் என்றே திரும்பிப் பார்க்க வில்லை!

ஆனால், நமுட்டுப் புன்னகையோடு, ''மிகவும் அருமை யான முத்தாய்ப்பு! சிரிப்பு ஆரோக்கியத்துக்கு நல்லதா?



பிரமாதம்!'' என்று பாராட்டியவனுக்குத் தன்னை மீறிச் சிரிப்பு வந்தது!

தலை சரித்து நோக்கி, ''உங்கள் ஆரோக்கியத்துக்கும் தான்!'' என்று மிடுக்காக உரைத்தவள், அதற்கு மேல் அடக்கமாட்டாமல் தானும் நகைக்கலானாள்!

இணைந்து ஒலித்த நகை, மற்றவர்களின் கவனத்தைக் கவர்வதை உணர்ந்து, இருவரும் எழுந்து காருக்குச் சென்றனர்.

காரைச் செலுத்தியபடி, ''இங்கே எப்போது வந்தாலும், கோமளவிலாஸ் அல்வா வாங்கிப் போவது வழக்கம்! இப்போது வாங்கிப் போவது, பொருத்தமாகவும் இருக் கும்'' என்றான் சிவநந்தன்.

''பொருத்தமா? யாருக்குக் கொடுப்பதற்காகவோ? அல்வாவைச் சொன்னேன்!'' என்று புருவம் உயர்த்திக் கேட்டாள் அவள்!

''அம்மாடியோ! வாழ்க்கையில் இனி ஒவ்வொரு வார்த்தையையும் கவனித்துப் பேச வேண்டியிருக்கும் என்று தெரிகிறது நான் வெறும் இனிப்புக் கொடுப்ப தாகத்தான் நினைத்தேன், தாயே!'' என்றான் அவன்.

அப்போதும், ''இனிப்புக் கொடுப்பதா? எதற்காக? ஓ, இரண்டு நாட்களில் கிளம்புகிறோமே, அதற்கு வழி யனுப்பு உபசாரம் போல?'' என்றாள் சுகேசி.

''போச்சுடா! இன்னும் வனிதா வாடை போகவில்லை போல இருக்கிறதே!''

''எனக்குப் போய்விட்டது. ஆனால், அவ்விடத்தில் தான், எதற்காக இனிப்பு என்று மனம்விட்டுச் சொல்ல வாய் வரமாட்டேன் என்பதாகத் தெரிகிறது!'' என்றாள் அவள்!

அதிகப்படியாகப் பேசிவிட்டாளா?

''சொல்லிவிடலாம்! ஆனால், திரும்பிப் போகும் வழியில் சொன்னால், சொல்லும் சேதிக்குப் பொருத்த மான முத்தாய்ப்பும் வைக்க முடியும் அல்லவா?''

முத்தாய்ப்பாமே!

தன்னை மீறிச் சிவந்த முகத்தை வெளியே திருப்பிக் கொண்டு உட்கார்ந்திருந்தாள் சுகேசி.

உன்னைக் காதலிக்கிறேன் என்று இன்னோரன்ன வார்த்தைகளால், சிவா, தெளிவாகக் கூறும்வரை, அவ ளுக்கு இந்தப் படபடப்பும் தவிப்பும் போகாதோ?

எப்படிப் போகும்?

அவளது நடத்தை பற்றிய விஷயத்தில், சிவாவுடைய சந்தேகம் தீர்ந்ததே தவிர, அதற்காக அவளை அவன் நேசிக்க வேண்டும் என்று என்ன கட்டாயம்?

பணிப் பயிற்சிக் காலத்தில் சில நாட்கள் அருகில் வந்து நின்று பேசிக் கொண்டிருப்பான்! ஆனால், அளவு மீறி, ஒன்றுமிராது!

அதுவும், கடைசி இரண்டு நாட்களில், கண்ணிலேயே படவில்லை!

பிறகு... முழுக்க முழுக்க தீக் காய்ச்சல்தானே?

என்னவோ அவள்தான் அந்தப் ப்ரேம் மனதைக் கலைத்து... ப்ரேம்!

சிவநந்தனின் புறம் திரும்பி, ''உங்கள் நண்பர் ப்ரே மிடம், அவருக்கு அ... அந்த மாதிரித் தகவல்கள் அனுப் பியது நான் அல்ல. வனிதாதான் என்று சொல்லிவிட்டால் நல்லதல்லவா? நான் ஆசை காட்டவில்லை என்று தெரியும்போது, இல்லாததை நினைத்து ஏங்கியது புரிந்து மாறலாமே! அதாவது, அவரது ஆசைக்கு அடிப்படையே கிடையாது என்று அறியும்போது, அடச்சீ விட்டுத் தள்ளு. இல்லாத ஒன்றுக்காகவா, இவ்வளவு கஷ்டப்பட்டோம்



என்று அலட்சியமாக விட்டுவிடத் தோன்றாதா?'' என்று கேட்டாள் சுகேசி.

சிவநந்தனின் முகமும் தீவிரமடைந்தது!

''இது ஒரு நல்ல யோசனை, சுகி. ஆனால், ப்ரேம் இருக்கும் நிலையில், நாம் டாக்டரிடம் கேட்டுத்தான், அவ னிடம் எதையும் சொல்ல முடியும்! அவன் மதில் மேல் பூனை! மறுபக்கம் பாய்ந்துவிட்டால், என்ன செய்வது? இழைந்து, வழிந்து ஏமாற்றியவள் வேறு ஒருத்தி என்று தெரியும்போது அவன் மாறலாம்தான். ஆனால், மோசக் காரப் பெண்ணான அந்த வனிதா எப்படி வேண்டு மானாலும் போகட்டும்! அழகான, நல்லவளான சுகேசி என்னைக் காதலிக்கட்டுமே என்று தொடங்கிவிட்டால் அப்புறம், நான் எங்கே போய் முட்டிக் கொள்வது? முத லில், அவனுக்கு வேறு விதமான பிடிப்புகளை வளர்த்து விட்டு, அதன் பிறகு இதைச் சொல்வது மேல் என்று எனக்குத் தோன்றுகிறது!'' என்றான் அவன்.

அவன் அல்வா வாங்கும் இடமும் வந்துவிடவே, பேச்சை நிறுத்திக் கொண்டு, இறங்கிப் போனான் சிவா.

''நான் எங்கே போய் முட்டிக் கொள்வது'' என்றானே! அப்படியானால், அவள் மேல், சிவாவுக்கு ஆசை என்று தானே அர்த்தம்?

மீண்டும் காரில் ஏறி, மதுரை மாநகரின் நெரிசலான போக்குவரத்தைக் கடக்கும்வரை, சிவநந்தன் எதுவும் பேசாமலே காரை ஓட்டினான்!

ஊரைவிட்டு வெளியே வந்து சற்று இலகுவாகக் காரை ஓட்டத் தொடங்கியதும், ''சுகி, இப்போது உனக்கு என் மனம் புரிந்திருக்கும் என்று நினைக்கிறேன்!'' என்று தொடங்கினான் அவன்.

''வந்து... இந்தப் புரிவது, நினைப்பது, உணர்வது, அறிவது எல்லாவற்றையும் விட்டுவிட்டு, எதையும் தெளிவாகவே பேசி விடலாமே!'' என்றாள் சுகேசி.

அவன் சற்று வியப்பான பார்வை ஒன்றை அவள் பால் வீசவும், ''ஆமாம், சிவா! எதையும் நேரடியாகக் கேட்டுத் தெரிந்து கொள்ளாமல், வெறும் ஊகத்தினால் என் வாழ்க்கையே வீணாகி விட இருந்தது! இன்னொரு தரம், அதே வேதனை எதற்கு? அதனால், உங்கள் மனதையும் தெளிவாகவே சொல்லி விடுங்கள்!'' என்றாள் அவள் பிடிவாதமாகவே.

சில பல குறிப்பான வார்த்தைகளால், அவள் மீது அன்பு என்று சிவநந்தன் மறையாது காட்டியபோதும், சூடுபட்ட பூனையாக, சுகேசியின் மனம் அதை முழுமையாக நம்ப மறுத்தது!

ஒன்றரை ஆண்டுகளுக்கு முன்பாக ஒரு தரம், ஏதோ இருக்கும் இருக்கும் என்று எண்ணி, எதிர்பார்த்து இல்லை என்று உணர்ந்து சோர்ந்து இன்னும் மறக்கவில்லையே!

மறக்காதது மட்டுமில்லை! இப்போது இரு மடங்காக நினைவு திரும்பிவிட்டதே!

இது பற்றி, எதுவும் தெரியாததால், சிறு பிள்ளைத் தனமாக ஏதோ எதிர்பார்த்து விட்டோம் போல என்று, அன்று எளிதாக சமாதானப்படுத்திக் கொண்டது, அப்படி சமாதானப்படுத்திக் கொண்டு தானாக இயல்புக்குத் திரும்பியது எல்லாமே, இப்போது முடியாது என்று சுகேசி தெளிவாக உணர்ந்தாள்!

இல்லை! இனியும், இதைச் சும்மா விடுவதற்கில்லை!

மீண்டும் பார்வை திரும்பி மீள, ''ரொம்பவும் துன்புறுத்திவிட்டேன் போலத் தெரிகிறது. இனி அப்படி ஒரு போதும் நடவாது!'' என்று உறுதியான குரலில் கூறி, ஒரு கை நீட்டி, சீட்டில் இருந்த அவளது கை மீது வைத்து, லேசாக அழுத்தினான் சிவநந்தன்.

அதுவரை இருந்த ஏக்கம், படபடப்பு எல்லாம் தானாக வடிவதை உணர்ந்தாள் அவள்!





## 10

''இனி நம் வாழ்வில் குழப்பமே கூடாது. சுகி! அதனால், முதலில் இதைத் தெளிவாகச் சொல்லி விடுகிறேன்! நான் உன்னை என் உயிராய் நேசிக்கிறேன்! நீயும் அதே போல என்னிடம் அன்பு கொண்டிருக்கிறாய் என்றும் அறிந்து கொண்டேன். அதனால், நம்பிக்கையோடு கேட்கிறேன், சொல்லு! நீ என்னைத் திருமணம் செய்து கொள்வாய் அல்லவா?'' என்று பெருமளவு சீரியசாகவே சிவநந்தன் சுகேசியிடம் கேட்டான்.

குரல்கூடக் கரகரத்திருந்தது!

சட்டென சுகியின் கண்களில் நீர் மல்கியது!

இப்படியொரு கேள்வியை, சிவநந்தன் கேட்கக் கூடும் என்று கற்பனை செய்யும் தைரியம் கூட, இல்லாதிருந்தாளே!

''ஹேய், என்ன பதிலையே காணோம்? மாட்டேன் என்று சொல்லி, இந்தக் கால்கட்டு என்பார்களே, அதிலிருந்து தப்பித்துக் கொள்ள எனக்கு வாய்ப்புக் கொடுக்கப் போகிறாயா?'' என்று, வேடிக்கையாகக் கேட்டவன், தொடர்ந்து ''அப்படி எதுவும் சொல்லி, நீ தப்பித்துக் கொள்ளலாம் என்று நினைக்காதே! நீ எங்கே போனாலும், உன் பின்னேயே வந்து உன் காதைப் பிடித்து இழுத்து வந்து, தாலி கட்டிவிடுவேன்! காது, கை, கால் எல்லாம் ஒழுங்காக இருக்க வேண்டும் என்றால், மரியாதையாகச் சரி சொல்லிவிடு!'' என்று மிரட்டலோடு பேச்சை முடித்தான்!

அவளை இலகுவாகப் பேச வைக்க முயற்சிக்கிறான்!

அவளும்தான் என்ன, அசட்டுப் பெண் போல, வாயடைத்து உட்கார்ந்திருப்பது,

லேசாகச் செருமித் தொண்டையைச் சீர்ப்படுத்திக் கொண்டு, ''ஆஹா இப்படி ஏதாவது மிரட்டி, என்னைப்

பயப்பட வைத்து, மறுக்க வைக்கப் பார்க்கிறீர்களா? அதெல்லாம் நடக்காது சார். நான் உங்களைக் கட்டாயமாக மணந்தே தீருவேன்!'' என்றபோது, சுகேசியின் குரலும் தளுதளுத்துவிட்டது!

காரை ஓரமாக ஒதுக்கி நிறுத்தினான் அவன்.

அவளது கைகளைப் பற்றி, அவற்றை உதட்டால் ஒற்றி, ''ஹேய் சுகி, என்னதிது? நாம் இரண்டு பேரும், இவ்வளவு உணர்ச்சி வசப்படுகிறோம்?'' என்று வியந்து கூறினான் சிவநந்தன்.

அப்போதும் தொண்டையை நம்பாமல், ஆம் என்பது போலத் தலையாட்டினாள் சுகேசி!

அவனது கையிழுப்பில் நெருங்கி, சற்று நேரம், அவனது தோளில் கண்மூடிச் சாய்ந்திருந்துவிட்டு, சுகேசி மெல்ல நிமிர்ந்தபோது, இருவருமே இயல்புநிலைக்குத் திரும்பியிருந்தனர்!

முறுவலித்து, ''காரணகாரியம் ஆராய்ந்து, நடக்கவே நடக்காது என்று முடிவு கட்டி, அதற்கேற்ப மனதைத் தயார் செய்திருந்தபோதும், ஆழ் மனது, ரொம்பவும் ஆசைப் பட்டிருக்கும் போல! கிடைக்காது என்றிருந்தது. சட், சட்டென்று எதிர்பாராத திருப்பங்களால், திடுமெனக் கைக்குக் கிட்டியது. ஒரு மாதிரி உள்ளத்தை உலுக்கி விட்டது என்று தோன்றுகிறது!'' என்றாள் அவள்.

ஒப்புதலாகத் தலையசைத்து, ''எனக்கும் அப்படித்தான் தெரிகிறது!'' என்றான் அவனும்!

தொடர்ந்து, ''ஏனென்றால், தொழிலுக்கான கடனுக் காக, அந்த பாங்க்கிற்கு வந்து, உன்னைப் பார்த்த முதல் நாளில் இருந்தே எனக்குள் ஈர்ப்புதான்! ஆனால்...'' என்று நிறுத்தினான்!

''ஆனால்?'' என்று அவனை உந்தினாள் சுகேசி.



அவன் என்ன விதமாக உணர்ந்தான்? எப்படி ப்ரேமுக் காக ஒதுங்கினான் என்று தெரிந்து கொள்ள வேண்டும் போல ஒரு வேகம் உண்டாகவே, மீண்டும் வினவினாள்.

''சொல்லுங்கள், சிவா. முதல் நாளே ஈர்ப்பு என்றால், அது எப்படி மடிந்தது?''

''தானாக மடியவில்லை! கஷ்டப்பட்டுச் சாகடித்தேன்!'' என்று, மரத்த குரலில் விவரம் சொன்னான் அவன்!

''ப்ரேமுடைய பெரியப்பா மகன் சுந்தரேசன்தான் என் நண்பன். இன்னொரு நண்பனுடன் சேர்ந்து தொழில் தொடங்குவதாக இருந்தோம்! முக்கியமாக, வாழ்வில் கஷ்டப்பட்டுக் கொண்டிருந்த, அந்த இன்னொரு நண்பன் தினகரனைக் கைதூக்கி விடுவதற்காகத்தான் அந்தத் தொழிலே! பாங்க்கில் எங்களை அறிமுகம் செய்வதற்காக, ஏற்கனவே அதில் கணக்கு வைத்திருந்த ப்ரேம்! சில கையெழுத்துக்கள் இடவேண்டிய தருணங்கள் தவிர, நான் அங்கே அதிக அவசியம் கிடையாது! ஆனால், தினமும் உன்னைப் பார்ப்பதற்காகவே காலையிலேயே பண்ணையிலிருந்து கிளம்பி வருவேன்! நீயும் என்னை... நீ சற்று என் பக்கம் சாய்ந்தது போலத்தான் இருந்தது! வரக்கூடிய நேரத்தில் ஒரு தேடல், நேரில் பார்க்கும்போது கண்ணில் ஓர் எதிர்பார்ப்பு! என் பேச்சில் ஓர் ஈடுபாட் டுடன் கூடிய கவனம்... இப்படி எல்லாமே எனக்குச் சாதகம்தான் என்று எண்ணி சந்தோஷமாக இருந்தேன்!

''ஆனால், என்னைக் கண்டுபிடித்துவிட்ட ப்ரேம் அவனுக்கு உன் மீது காதல் என்றது சிறு அதிர்ச்சி என் றால், அவனது செல்போனில் உன் பதில்களைக் காட் டியது, பேரதிர்ச்சியாய் இருந்தது!''

''என் செல் என்று எப்படித் தெரியும்?''

''காதல் என்று வந்த பிறகு, இதைக் கூடக் கண்டு பிடிக்க மாட்டேனா? அவசரமாக ஒரு திருத்தம் செய்யும்

படி உன்னிடம் தெரிவித்தே ஆக வேண்டும், அதற்காக உன் செல்போன் எண் உடனே வேண்டும் என்று பாங்க்கில் கதை சொல்லி அதைக் கேட்டுத் தெரிந்து கொண்டேன்!''

இவ்வளவுக்கு வந்த பிறகு, எல்லாம் கெட்டுப் போயிருக்கிறதே என்று ஒரு கணம் மனம் தவித்தது, அவளுக்கு!

ஆனால், அதுவும் நல்லதற்கேதானோ?

இப்போது வேலை பார்க்கத் தொடங்கிய பிறகு, சற்றுப் பெரிய பெண்ணாக நினைக்கும் பெற்றோருக்கு, அப்போது அவள் குழந்தையாகத்தான் தேற்றினாள். எனவே, அப்போது அவர்கள் திருமணத்துக்குச் சம்மதித்து இருப்பார்கள் என்று சொல்ல முடியாது!

அத்தோடு, இன்றைய மன வளர்ச்சி இல்லாத அந்த நிலையில், அந்தத் திருமணமுமே வெற்றி பெற்றிருக்குமோ, என்னவோ?

அவளிடம், அவன் காட்டிய கடுமையை நியாயப்படுத்த எண்ணினானோ? அவள் தூண்டாமலே, இப்போது சிவா தொடர்ந்தான்.

''அவனது பேச்சை நான் நம்பவில்லை என்றுதான் ப்ரேம் அவனது செல்லை, எனக்கு மட்டும் காட்டினான்... உன் செல் எண்ணோடு, அதிலிருந்த வாசகங்களைப் படித்ததும் எனக்கு... சே! உலகத்தில் யாரை நம்புவது என்றே புரியாமல் போய்விட்டது! தோற்றத்தில் அவ்வளவு கண்ணியமாக இருப்பவள், இவ்வளவு கேவலமாக எழுதுவதா என்று ஒரே அருவருப்பாகிப் போயிற்று! உலகமே வெறுத்துப் போயிற்று எனலாம்! அதற்குப் பிறகு, பாங்க் வேலையைப் பார்க்க வருவதை அடியோடு நிறுத்திவிட்டேன்!

''தொழிலைக்கூட, அவர்கள் இருவரையும் வைத்துத் தான் நடத்தினேன்! நான் பேருக்கு, அவ்வப்போது கணக்குகளைப் பார்ப்பதோடு சரி!



''ஒரு தாம் அப்படிப் போனபோதுதான், ப்ரேம் காதல் தோல்வியில் போதைப் பழக்கத்துக்கு அடிமையாகி, மறுவாழ்வு மையத்தில் இருப்பதைத் தெரிந்து கொண்டேன்!

''ப்ரேமிடம் தனியாகக் கேட்டபோது, தகவலே இல்லாமல் நீ மறைந்து விட்டதாகச் சொன்னான்! செல்போனிலேயே கிட்டத்தட்டக் குடும்பமே நடத்திவிட்டு, நீ பிரிந்ததை, அவனால் தாங்க முடியவில்லையாம்!

''அந்த வாசகங்கள் சிலதை நானும் படித்தவன் ஆயிற்றே! உன்னைப் பற்றி என்ன நினைத்திருப்பேன், யோசித்துப் பார்!

''அதற்குப் பிறகு ப்ரேம் பற்றிக்கூட, நான் யாரிடமும் எதுவும் கேட்டது இல்லை. தொடர்ந்து உன் நினைவு வருமல்லவா?

''அத்தை வீட்டு பண்ணையில் உன்னை பார்த்தது எவ்வளவு பெரிய அதிர்ச்சி தெரியுமா?

''அத்தைக்காக, அம்மா அனுப்பிய பொருட்கள் சிலது, கார் சீட்டுககு அடியில் போயிருந்தன. காரில் ஏறி அவைகளை எடுக்கையில் வெளியே பார்த்தால், நீ!

''திகைப்பு, தீருமுன்னே, உன் தங்கையிடம் அந்தக் கார்க்காரனைப் பிடிக்கப் போவதாக வேறு சொல்கிறாய்...''

''அது...'' என்று, அந்த முதல் நாள் பேச்சுக்கு விளக்கம் சொல்ல முன்வந்தாள் சுகேசி.

ஆனால் அதைத் தடுத்து, ''அது, வெறும் வேடிக்கைப் பேச்சு என்று தெரியும்! ஆனால், உன் தங்கை விளையாட்டாகச் சொன்னால் என்று ஒப்புக் கொண்ட மனதால், உன் வார்த்தைகளை அப்படி எடுக்க முடியவில்லை! உனக்குத்தான் ஏற்கனவே, பயங்கரமாகத் தார்வண்ணம் பூசி வைத்திருந்தேனே!'' என்று வருத்தத்துடன் விளக்கினான் சிவநந்தன்!

அவன் தன்னைத் தானே நொந்துக் கொண்டு வருந்துவதை உணர்ந்து. கையால், அவனது கன்னத்தை லேசாக வருடினாள் அவள்.

கன்னத்தோடு, அவளது கையை அவன் அழுத்திக் கொள்ள, ''இவ்வளவுக்குப் பிறகும் என்னிடம் உங்களால் நல்லதைப் பார்க்க முடிந்தது என்றால், அதுதான் ஆச் சரியம்!'' என்றாள் சுகேசி.

வனிதாவோடான அவளது பேச்சைக் கேட்கும் முன்ன தாகவே, அவளைப் பற்றி நல்லது மட்டுமே நினைவு வருவ தாகச் சொல்ல வேண்டும் என்றால், அவன் மனதிலும், சுகேசி வேரோடிப் போயிருந்தாள் என்றுதானே பொருள்!

தன்னைப் பற்றிக் கேவலமாக நினைப்பதால், அவ னுக்கு அன்பு இல்லை என்று சுகேசி எண்ணியது, இப் போது தவறாகத் தெரிந்தது!

என்னவோ, ஒரு நீண்ட கெட்ட கனவாக, அந்த வேதனை எல்லாம் இப்போது முடிந்தே போயிற்று என்ற எண்ணமே, இப்போது நிம்மதியைத் தந்தது!

அடுத்து, அவளைப் பற்றிய விவரம் கேட்டான் அவன்.

அவள் எப்படி மனதைத் திடப்படுத்திக் கொண்டாள் என்று தெரிந்ததும், சிவநந்தன் பெரிதும் உருகிப் போனான்.

''ஆனால், நம் இருவரையும் சேர்த்து வைக்க வேண் டும் என்பது, கடவுளின் திட்டம் என்பது நிச்சயம், சுகி! மற்ற படி, கோயிலுக்குப் போன மாமாவும், உன் அப்பாவும், ஒருவரை ஒருவர் இப்படிச் சந்தித்திருப்பார்களா?'' என்று சிவநந்தன் சொல்ல, அதுவும், அவளுக்கும் சரியாகவே தோன்றிற்று!

வெறும் ஓர் ஐந்து நிமிஷ வித்தியாசத்தில் சந்திப்பு தட்டிப் போயிருக்கக் கூடுமே!

''வீட்டுக்குப் போய் விஷயத்தைச் சொன்னால், எல் லோரும் ஆச்சரியப்படப் போகிறார்கள்!'' என்றாள் அவள்!

''நினைத்துக் கொண்டிரு! இப்படி நடக்க வேண்டும். நம் இருவரையும் ஜோடி சேர்க்க வேண்டும் என்ற ஆசையில்தான், இந்த காரோட்டும் பயிற்சியையே



பெரியவர்கள் வற்புறுத்தியிருக்க வேண்டும் என்று எனக்குத் தோன்றுகிறது! நீ வேண்டாம் என்று சொன்ன போது கூட, எப்படி விரட்டினார்கள், பார்! அவர்களது உறவை, அடுத்த தலைமுறையான நம் மூலமாக வளர்க்க முயற்சிப்பதாக அவர்களுக்கு எண்ணம்! ஆனால் நாம் என்றோ தொடங்கிவிட்டது, அவர்களுக்குத் தெரியாது!'' என்று சிரித்தான் சிவநந்தன்.

கூடச் சேர்ந்து சிரித்துவிட்டு, ''இது குட்டிகள் பதினாறடி பாய்கிற காலம் என்று, பாவம் அவர்களுக்குத் தெரிய வில்லை!'' என்றாள் சுகேசி.

''ஓஹோ! அப்படியானால், நம் பிள்ளைகள், எவ்வளவு தாண்டுவார்களோ தெரியவில்லையே... அவர்களை 'லிமிட்'டில் வைத்துக் கொள்ள வேண்டுமே!''

''கல்யாணமே இன்னும் ஆகவில்லை! அதற்குள் ளாகப் பிள்ளைகள் பற்றிக் கவலைப்படத் தொடங்கிவிட் டீர்களே...!'' என்று சிரித்தாள் சுகேசி.

பக்கவாட்டில் இருந்த நீண்ட பெரும் பாறையைக் காட்டினான் அவன்.

''யானைத்தலை போலத் தோன்றும் இந்தப் பாறையைப் பார்! நம் வாழ்வில் இனி என்றேனும், இதை மறக்க முடி யுமா?'' என்று கூறியவாறு காரை அவன் எடுக்க, அரு கமர்ந்து அவளும் அந்தப் பாறையை வியந்து நோக்கினாள்.

''ஆமாம்! இந்தப் பாறையின் அருகில்தான், நம் மனச்சுமை முழுவதையும் இறக்கி வைத்தோம் என்று, நம் பழைய கதையை நினைத்துப் பார்க்கும் போதெல்லாம் கட்டாயமாய் நினைவு வரும்!'' என்று இனிய புன்னகை யோடு அவளும் இயம்பினாள்.

''ஸ்வீட் நத்திங்ஸ்'' என்று சொல்வார்கள்! அதுபோல, மனம் இனிக்க, இனிக்க, இருவருமாக ஏதேதோ பேசிச் சிரித்தபடியே பயணம் செய்தார்கள்!

இடையிடையே விஷயமும் பேசினார்கள்!

வீட்டில் பெற்றோர், பெரியவர்களிடம் பழைய கதையைச் சொல்வதா வேண்டாமா என்று யோசித்துவிட்டு, வேண்டாமே என்று முடிவு செய்தார்கள்!

அதைப் பற்றிச் சொல்வதானால், முதலில் அறிந்த மாதிரி காட்டிக் கொள்ளவில்லையே என்ற கேள்வி வரும்.

என்ன இருந்தாலும், அவர்களிடம் மறைத்தார்கள் என்பது, ஒரு பானகத் துரும்புதானே? எதற்கு, அனாவசியமாக அந்தத் தேவையற்ற உறுத்தல்!

அத்தோடு, மறைத்ததற்குக் காரணம் சொல்லும் போது, ப்ரேம், வனிதா பற்றி, சுகியை சிவா தவறாக நினைத்தது எல்லாம் சொல்ல நேரும்!

என் பெண்ணைப் பற்றி இவ்வளவு மோசமாக நினைத்தவனுக்கு எப்படி அவளைத் திருமணம் செய்வது என்று வாகீசன் யோசிக்கத் தொடங்கிவிட்டால், அப்புறம் அவரை ஒத்துக் கொள்ள வைப்பது, பெரும் பிரச்சினையாகி விடும்.

முக்கியமாக இதுக்காகவே, முன் விவரம் சொல்ல வேண்டாம்... பெரியவர்களின் திட்டம் வெற்றி பெற்றது போலவே இருக்கட்டும் என்று இருவருமாகத் தீர்மானித்தனர்.

பேசிக் கொண்டிருக்கும் போதே, ஏதோ யோசனையில் மூழ்கி, சிறுபொழுது சுகேசி மௌனமாக இருந்தாள்.

சற்று நேரம் பொறுத்து, ''என்ன யோசனை சுகி?'' என்று வினவினான் சிவநந்தன்.

''அது... இங்கே இப்படி இருக்கட்டும், சிவா. ஆனால், நீங்கள் அந்த ப்ரேமிடம் எல்லாம் சொல்லி விடுவதுதான் மேல் என்று எனக்கு ரொம்பவும் தோன்றுகிறது!'' என்றாள் அவள்.

''அது அவசியமா, சுகிம்மா? முதலிலேயே நாம் அது பற்றியும் யோசித்தோமே! அவன், உன்னைப் பற்றி



ஏதாவது தொடங்கிவிட்டதால் வீணான மனச் சங்கடம் தானே?'' என்று தயங்கினான் அவன்.

''ப்ரேம் அப்படி ஏதாவது கேட்டால், முதலில் இருந்தே என் மனம் உங்களைத்தான் நாடியது என்று தெளிவாகச் சொல்லி விடுவோம்! நாம் ஒருவரை ஒருவர் நேசிக்கும் போது அவரது ஒருதலை விருப்பம் சரியல்ல என்றும் எடுத்துச் சொல்வோம்! யோசித்துப் பாருங்கள் சிவா! நம் விஷயம் அவருக்குத் தெரியாமலே இருந்துவிட வாய்ப்பில்லை! நீங்கள் இந்தப் பகுதியில் இருக்கிறீர்கள். 'இம்' என்றால், எதற்கும் மதுரைக்குத்தான் ஓடுகிறீர்கள்!

''நமக்கு மணமான பிறகும் அப்படித்தான் இருக்கப் போகிறது! எனவே, ப்ரேம் குணமாகி வீடு வந்ததும், சீக்கிரமே, அவருக்கு நம்மைப் பற்றித் தெரிந்துதான் தீரும்! நிச்சயமாய்!

''விஷயம் தெரிந்ததும், அவர் மீண்டும் பழைய நிலைக்குப் போய்விட்டால்!

''இன்னும், அதைவிட மோசமாக விபரீத முடிவு எதுவும் எடுத்துவிட்டால், அது ரொம்பவும் ஆபத்து அல்லவா? ஒரு வாழ்வு அழியக்கூடும் என்பதோடு, பழி நம் மீது அல்லவா விழும்!

''ஏனென்றால், போதை, குடி போன்றவற்றின் ஆதிக்கங்களில் இருந்து மீண்டு வரும்போது, அவர்களுக்கு மனப் பாதிப்பு சட்டென ஏற்படக்கூடும் என்று படித்திருக்கிறேன். அதனாலேயே, அவர்களுடைய குடும்பத்தினருக்கும் கட்டாயம் பல விதமான ஆலோசனைகள் கொடுத்துதான். அப்படிப் பாதிக்கப்பட்டவர்களை வீட்டுக்கு அனுப்புவார்களாம்! ஒருவாறு ப்ரேம் குணமாகி வந்துவிட்டார் என்கிற நிலையில், நம்மால் மீண்டும் பாதிப்பு ஏற்பட்டுவிடக் கூடாதே என்று இருக்கிறது, எனக்கு!

''அதைவிட, மையத்தில் இருக்கும்போதே விவரத்தைத் தெரிவித்துவிட்டால், அதனால் பாதிப்பு இருந்தால்கூட, அதற்கும் சேர்த்து அங்கே சிகிச்சை தரக்கூடுமே! இது பற்றி, உங்கள் நண்பர் சுந்தரேசனிடம் வேண்டுமானால், கலந்து பேசிப் பாருங்களேன்!'' என்று நீளமாகப் பேசி முடித்தாள் சுகேசி.

குறுக்கிடாமல் கேட்டிருந்தவன், தனக்கும் அது விஷயமாக உள்ளூர சஞ்சலம்தான் என்றான்!

''எனக்கும் ப்ரேம் பற்றி மனதில் நெருடல்தான், சுகி! நம்மைப் பற்றித் தெரியவரும்போது, அது பிரச்சினையாகுமே என்ற உறுத்தல், இருக்கத்தான் செய்தது! இப்போதே அவனிடம் தெரிவித்தால், அவன் ஏதாவது ஆர்ப்பாட்டம் செய்து, அதனால் நம் திருமணத்தைத் தள்ளிப்போட நேருமோ என்ற பயம்தான்! அதற்கு மட்டும் நிச்சயமாக நான் இடம் கொடுப்பதாக இல்லை! ஆனாலும், அவன் பற்றி, எப்போது என்ன முயற்சி எடுப்பது? சரி என்றுதான் நானும் யோசித்துக் கொண்டிருந்தேன்! நீ சொல்வதை எண்ணிப் பார்த்தால், தள்ளிப் போடுவதைக் காட்டிலும், உடனே ஏதாவது செய்து முடிப்பதுதான், நமக்கும் நல்லதாக இருக்கும் என்றே தோன்றுகிறது! பார்ப்போம்! இலங்கைக்குப் பழம் அனுப்புவது தொடர்பான வேலையாக, விரைவிலேயே நான் மதுரைக்குப் போக வேண்டியிருக்கிறது! அப்போது சுந்தரேசனையும் பார்த்துப் பேசிவிடுகிறேன்! அதன் பிறகு இறுதியாக முடிவு செய்வோம்!'' என்றான் சிவநந்தன்.

## 11

வீடு போய்ச் சேர்ந்து, அல்வாவை எடுத்துக் கொடுத்து, இனிப்பான செய்தியையும் கூற, 'பொன்னருவி'ப் பண்ணை வீடே விழாக் கோலம் பூண்டது!



பக்கத்துப் பண்ணைதானே, சிவநந்தனுடைய தாயும் தந்தையும் உடனே கிளம்பி வந்து, அவளை ஆசீர்வதித்தார்கள்.

''ஹே, இனி சிவாண்ணனை, அத்தான் என வேண்டுமா?'' என்று ஆச்சரியமும் திகைப்புமாகக் கேட்டார்கள் சுகேசியுடைய தங்கைகள்!

உடனே பையன்கள் பக்கம் திரும்பி, ''என்னவோ, உங்களுக்குத்தான் சிவாண்ணன் உறவு. அதனால் உங்களுக்குத்தான் அவரிடம் உரிமை அதிகம் என்றீர்களே! இப்போது எங்களுக்கும் சொந்தக்காரர் ஆகப் போகிறாரே!'' என்று பெருமை காட்டினார்கள்!

''ஆனாலும், எங்களுக்குத்தான் அதிக சொந்தம்!''

''எங்களுக்குத்தான்!''

''எங்களுக்குத்தான்! அக்காவும் எங்கள் பக்கம் வந்து, டபுள் சொந்தம்!''

''அதேபோல, சிவாண்ணன் அத்தானாகி, எங்களுக்குத்தான் இரண்டு பேரும் சொந்தம்!''

''இல்லை, எங்களுக்குத்தான்!''

''ஷ், இதிலும் சண்டையா?'' என்று அதட்டினாள் சுமதி! ''உறவைப் பார்த்தால், நாலு பேரும் சகோதர, சகோதரிகள் ஆகிறீர்கள்! தெரிந்து கொள்ளுங்கள்!''

''இதுங்களா, எங்களுக்குச் சகோதரிகள்? ஐயே!''

''இதுங்களா, எங்களுடைய அண்ணன், தம்பிகள் அச்சோ!''

சுமதியைத் தொடர்ந்து, ''ஆமாம், ஆமாம்! இப்போது நீங்கள் நாலு பேருமே மகாபாரதப் பாண்டவர்கள் போலத்தான் அவர்களுடைய ஒற்றுமை நினைவிருக்கிறதல்லவா? உங்களுக்குள்ளும் இனிச் சண்டை வந்தால், சகிக்காது! முக்கியமாக, சுகிக்கும் சிவாவுக்கும் ரொம்பவே கஷ்டமாக

இருக்கும் என்று, அதுவேனும் நினைவு இருக்கட்டும்!'' என்றாள் அபிராமி சற்று அதட்டலாக.

''ஆமாம்! இப்படியெல்லாம் சண்டை போட்டுக் கொண்டால், நீங்கள் இருக்கும் பக்கமே வராமல், நானும் சுகியும் 'ஜூட்' விட்டு விடுவோம்!'' என்றான் சிவநந்தன் பாதி மிரட்டலாக.

இதற்கு என்ன பதில் சொல்வது என்று அறியாமல், சின்னவர்கள் நால்வரும், ஒருவரை ஒருவர் பார்த்து விழித்தவண்ணம் பேசாதிருந்தனர்.

''ஆஹா! இந்த நால்வருக்கும் இடையே ஒற்றுமையை நிலைநாட்டுவதற்கு ஒரு காரணத்தைக் கண்டுபிடித்த பெரியம்மாவுக்கு நிச்சயமாகப் பெரிய பெரிய பரிசு ஒன்று கொடுக்க வேண்டும், பெரியப்பா!'' என்றாள் சுகேசி.

தயங்காமல், ''உன் பெரியம்மாவுக்குக் கொடுப்பதற்கென் னம்மா, பொற்கிழியே கொடுக்கலாம்!'' என்று கூறி, தன் சங்க காலத் தமிழறிவை வெளிப்படுத்தினார் பரந்தாமன்!

''என்னது? பொற்கிளியா?'' என்று சந்தேகமாகக் கேட்டான், கதிர்.

''பொன் என்றால் தங்கம்! தங்கக் கிளி'' என்று தன் தமிழறிவைக் காட்டிக் கொண்டாள் மதுமதி!

''ஆனால், தங்கக் கிளியை வைத்துக் கொண்டு என்ன செய்வது? சாதாரணக் கிளி என்றாலும், 'பெட்'டாக வளர்க்கலாம்! என்று அதை இன்னும் விரித்தாள் மதுமிதா.

''ஆமாம்ப்பா! அம்மாவுக்கு நீங்கள் வெறும் கிளியே வாங்கிக் கொடுங்கள்! நாங்கள் நாலுபேரும் சேர்ந்து அதை வளர்க்கிறோம்!'' என்று புதிய உறவுக்காக, சமாதானக் கொடியை ஏந்தத் தயார் என்று சொல்லாமல் சொன்னான் சின்னவன் சுதிர்!



அதையே ஒத்துக் கொள்வது போல, 'ஆமாம்', 'ஆமாம்' என்று மற்ற மூன்று பேரும் சேர்ந்து கத்தினர்!

ஆனால், பிள்ளைகளின் ஒற்றுமை முயற்சியை அலட்சியப்படுத்தி, தலையில் அடித்துக் கொண்டார் பரந்தாமன்.

''தங்கக் கிளியாம்! நம் பிள்ளைகளின் தமிழ் அறிவு இருக்கும் அழகைப் பார், ஈசா!'' என்று தம்பியிடம் அங்கலாய்த்தார் பரந்தாமன்!

பிறகு பிள்ளைகள் பக்கம் திரும்பி, ''அது 'கிளி' அல்லடா, பிள்ளைகளா! 'கிழி' என்று விளக்கினார்.

ஆனால், இன்னமும் குழம்பி, ''கிழிப்பதா? எதை? அப்பா, உங்களுக்கு 'சயன்ஸ்' மறந்துவிட்டது என்று நினைக்கிறேன்! நீங்கள் சொல்லுகிற மாதிரி, தங்கத்தை யெல்லாம் துணி மாதிரிக் கிழிக்க முடியாதுப்பா! அது கிழிக்க முடியாத அளவு கடினமான உலோகம்'' என்று தான் படித்ததைக் கொண்டு, தகப்பன்சாமியான முருகன் அவதாரமாகத் தந்தைக்கு நிதானமாக விளக்கினான், அவருடைய மூத்த மகன்!

பரந்தாமன் பொறுமையிழப்பதைக் கண்ட சுகேசி உதவிக்கு வந்தாள்!

''இது பறவையான கிளியும் அல்ல! அதேபோல நீ நினைக்கிற 'கிழி'யும் அல்ல, கதிர்! சங்க காலம் என்பார் களே, அந்தப் பழைய ராஜா ராணி காலத்தில், எதையாவது மிகவும் சிறப்பாகச் செய்கிறவர்களுக்குப் பரிசாகப் பொற்கிழி என்று கொடுப்பார்கள். பொற்கிழி என்பதற்கு, பொன்னாலான, அதாவது தங்கக் காசுகள் அடங்கிய துணிமுடிச்சு என்று அர்த்தம்!'' என்று விளக்கினாள்!

''இதுதான் கண்ணுகளா, பொற்கிழி என்பது! இதைத் தான் இவ்வளவு நேரமாகக் கிழிகிழி என்று நீங்கள் எல்

லோரும் சேர்ந்து கிழித்தது!'' என்று சிவா கிண்டலாகக் கூற, எல்லோருக்கும் சிரிப்புவந்தது!

பிள்ளைகளுக்குத் தமிழறிவு குறைவாக இருக்கிறதே என்று பரந்தாமனுக்குச் சற்று வருத்தமே என்றாலும், சூழ இருந்தோரின் குதூகலம் அவரையும் பற்றிக் கொள்ளக் கூடச் சேர்ந்து சிரித்தார்!

''இந்தப் பிள்ளைகளுக்குத் தனியாகக் கொஞ்சம் தமிழ் கற்றுக் கொடுக்க ஏற்பாடு பண்ண வேண்டும், ஈசா!'' என்று தம்பியிடம் ஒரு தரம் சொன்னபோதும், அதற்கு மேல், அது பற்றி வற்புறுத்தவில்லை!

வாகீசனைப் பற்றிக் கேட்வே வேண்டாம்! ''சும்மா பிறந்து வளர்ந்த இடத்தைப் பார்த்துவிட்டு, அண்ணன் குடும்பத்தோடு இரண்டு வாரம் சந்தோஷமாகப் பொழுது போக்கிவிட்டுப் போகலாம் என்று, குடும்பத்தைக் கூட்டி வந்தேன்! பார்த்தால், என் மகளுக்கு அருமையான மாப்பிள்ளை கிடைத்து இருக்கிறார்!'' என்று சொல்லி மகிழ்ந்தார்!

''அதைவிட, ஓர் அன்பும் அழகும் நிரம்பிய மருமகளை, இங்கேயே கூட்டி வந்து எங்களுக்குத் தந்திருக்கிறீர்கள் என்று சொல்லுங்கள்!'' என்று சிவநந்தனுடைய தாயார் சொன்னது, எல்லோருக்கும் மகிழ்ச்சியை அளித்தது!

இன்னும் மூன்று தினங்களில் கிளம்புவதாக இருந்ததை, மேலும் மூன்று நாட்கள் தள்ளிப் போட்டார்கள்!

அன்றைக்கு ஐந்தாவது நாள் மிகவும் நல்ல நாளாக இருக்கிறது என்று கணித்தார்கள்.

அன்று, சுகேசி, சிவநந்தனின் திருமண நிச்சயத்தைக் குடும்பத்தோடு, அக்கம் பக்கம் உள்ள வெகு சிலரை மட்டும் அழைத்துக் கொண்டாடி விடலாம் என்று முடிவு செய்தார்கள்!



''எல்லோரையும் கூப்பிடாவிட்டாலும், செய்வதை உரிய விதத்தில் சிறப்பாகச் செய்ய வேண்டும் அண்ணி! நாம் எல்லோருமாக இரண்டு பெரிய கார்களில் மதுரைக்குப் போய், வேண்டிய துணிமணி, நகை எல்லாம் வாங்கி வந்துவிடலாம்! காலையில் கிளம்பினோம் என்றால், கடை கண்ணி வேலையை முடித்துவிட்டு, அங்கேயே சாப்பிட்டுவிட்டு மாலையில் திரும்பி விடலாம்!'' என்று சிவநந்தனுடைய அன்னை கூறினாள்.

''அப்புறம் ஒரு நாள் தனியாகக் கோயிலுக்குப் போய் விட்டு வரலாம்!''

அவள் சொன்ன அனைத்தையுமே மற்றவர்களும் ஒப்பி, எப்போது கிளம்புவது, என்னென்ன, எப்படியெப்படி வாங்குவது என்று திட்டமிட, சுகேசியும், சிவநந்தனும் பொருள் பொதிந்த பார்வையால், ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டனர்.

எதற்கும் மதுரைதான்!

எனவே, ப்ரேம் விஷயத்தைத் தள்ளிப்போடலாகாது!

இரண்டு நாட்களில், எல்லாரும் கிளம்பி, மதுரைக்கு ஷாப்பிங் வந்தார்கள்!

ஒரு சிறு வேலையை முடித்துக் கொண்டு, விரைவிலேயே வந்து விடுவதாகச் சொல்லி சுகேசியிடம் கண்ணால் விடை பெற்றுக் கொண்டு, சிவநந்தன் தனியே கிளம்பிச் சென்றான்.

ப்ரேம் விஷயமாகப் போகிறான் என்று புரிந்து கொண்ட சுகிக்கு, உள்ளூர வயிற்றுக்குள் பிசைந்தது.

இந்தப் ப்ரேம் அவளது வாழ்வில் பெரும் தொல்லையாகிவிடக் கூடாதே!

என்னதான் வனிதாவின் பேராசைக்குப் பலியானவன் என்றாலும், ப்ரேமும் அப்படி ஒரே அப்பாவி என்று, சுகிக்குத் தோன்றவில்லை!

அவளுக்குச் சரியாக, அசிங்க அசிங்கமாக எழுதியவன் தானே, இவனும்!

குறைந்தபட்சமாக, புத்தி கொஞ்சம் மட்ட ரகமாகத் தான் இருந்திருக்க வேண்டும்!

இப்போது எப்படியோ?

சுமார் இரண்டு மணி நேரம் கழித்துத் திரும்பி வந்த சிவநந்தனின் முகம் மலர்ந்திருந்தது!

அப்போதைக்கு நம்பிக்கை ஊட்டும் விதமாகத் தலையசைத்ததோடு நிறுத்திக் கொண்டாலும், தனியே கிடைத்த முதல் தருணத்தில் அவளுக்கு விவரம் சொன்னான்.

ப்ரேம் கிட்டத்தட்டக் குணமாகிவிட்டானாம்!

முழுமையாக என்றுகூடச் சொல்லலாமாம்! இன்னும் சில 'கவுன்சிலிங்' முடிந்ததும், வீட்டுக்குப் போய் விடலாம் என்று மறுவாழ்வு மையத்தில் சொல்லி விட்டார்களாம்!

அதைவிட நல்லசேதி என்னவென்றால், அவனுக்குத் திருமணமும் ஆகப் போகிறது!

அவன் அம்மா வழி உறவில் பெண் கொடுக்கிறேன் என்கிறார்களாம்!

மையத்தில் கேட்டபோது செய்யலாம் என்றதோடு, அந்தப் பெண்ணுக்கும் சில ஆலோசனைகள் கொடுப்பதாகச் சொல்லியிருக்கிறார்களாம்!

ஒரு புதிய வகையில், அவனது கவனம் திரும்புவது, மிகவும் நல்லதே என்றார்களாம்!

எல்லாவற்றையும் விட முக்கியமாக ப்ரேமும் அந்தப் பெண்ணுடன் திருமணத்துக்குச் சரியென்றிருக்கிறானாம்!

"இவ்வளவும் கேட்டதும், எனக்கு அப்பாடி என்றாகி விட்டது! நம் விஷயத்தைச் சுந்தரிடம் சொல்லி, அவனையும், தினகரையும் நிச்சயத்துக்கு அழைத்தேன். வருவதாகச் சொன்னார்கள்! யாரையாவது கடையில் உட்கார வைத்துவிட்டு வருவதாகச் சொன்னார்கள்! என்னவோ, இப்போது நிம்மதியாக இருக்கிறது, சுகி!



"நல்லவேளையாக, ப்ரேம் விஷயமாக, நீ வற்புறுத்திப் பேசினாய்!"

"மனது இருந்த சந்தோஷத்தில், இன்றைக்கே போய், ப்ரேமிடமும் நம் திருமணம் பற்றிச் சொல்லி விட்டு வந்துவிடலாம் என்று ஆசையாக இருந்தது! ஆனால், ஊருக்கு வெளியே, சற்று தூரத்தில், அந்த மையம் இருக்கிறது! இந்தப் போக்குவரத்து நெரிசலைக் கடந்து போய்வர, அதிக நேரம் பிடிக்கும்! குறைந்த பட்சம், இரண்டு மணி நேரம்! எனவே, நிச்சயம் முடிந்து, நீங்கள் சென்னைக்குக் கிளம்பியபிறகு, ஒரு நாள் அங்கே போய்ப் ப்ரேமிடம் சொல்லிக் கொள்ளலாம் என்று வந்துவிட்டேன்!" என்று அவன் கூறவும், சுகேசிக்கும் மனது நிம்மதி அடைந்தது.

எப்படியும், இன்னொரு பெண்ணை முழுச் சம்மதத்துடன் திருமணம் செய்துகொள்ள இருக்கும் ப்ரேமால், இனி அவள் வாழ்வில் தொல்லை இராது!

தனக்குத் தெரியாமல்தான் என்றாலும், தன் காரணமாக ஒருவன் வாழ்வு வீணாகிவிட்டதே என்ற உறுத்தலும், இனி அவளுக்கு இருக்கத் தேவையில்லை!

சொர்க்கலோகம் என்கிறார்களே, அங்கே இதைவிட சந்தோஷமாக இருக்க முடியுமா என்று சுகேசிக்கு சந்தேகமாக இருந்தது!

முன்போல வெகு நேரம் 'பொன்னருவி'யிலேயே இருக்காவிட்டாலும், சிவநந்தன் காலையில் ஒரு தரமும், மாலையில் இன்னொரு தடவையும் இங்கே வந்து போனான்.

சின்னவர்களுடனும் சேர்ந்தே சுற்றினாலும், தனியே அவளிடம், ''நீ சென்னைக்குப் போனபிறகு, என்ன செய்யப் போகிறேன் என்றே தெரியவில்லை! உன்னைப் பாராமல் என்னால் எப்படி இருக்க முடியும்? ஒவ்வொரு நாளும் யுகமாகப் போகிறது! மாமாவிடம் சொல்லித் திருமணத்தைச் சீக்கிரமே வைக்கச்சொல்லு!'' என்று இதுபோல ஏதாவது சொல்லுவான்!

அவளுக்குமே அதே போன்ற உணர்வுதான்!

இந்த சிவாவைப் பாராமல், இவனோடு பேசாமல் இத்தனை ஆண்டுகள் எப்படி வாழ்ந்தாள்?!

இருவருமே வரப்போகும், நிச்சயதார்த்தத்தை எண்ணி, ஒரு புறம் மகிழ்ச்சியும், அடுத்து மறுநாளே இருவரும் பிரிந்து சுகேசி சென்னைக்குச் செல்வது பற்றி வருத்தமுமாக இருவிதமான உணர்ச்சிக் கலவையில் சிக்கியிருந்தனர்!

சின்னவர்களுக்கு ஒரே உற்சாகம்! நால்வரும் சேர்ந்து கொண்டு ஆட்டம் போட்டனர்!

அவர்களது அன்புக்குரிய இரு மூத்தவர்களையும் திரைப்படங்களில் பார்த்தும், புத்தகங்களில் படித்தும் அறிந்த அளவில், கண்டபடி கேலி செய்வதும், உட னேயே ரொம்ப அதிகப்படியாகப் பேசிவிட்டோமோ என்று அசடு வழிவதுமாக இருந்தனர்.

பெரியவர்கள் திருமணம் தொடர்பான பேச்சுகளிலும் வேலைகளிலும் ஈடுபட்டிருக்க நேரம் பறந்தது!

இன்று மாலை நிச்சயதார்த்த விழா என்று வைபவம் நெருங்கி வந்துவிட, அன்றையப் பொழுதும் அழகாக விடிந்தது!

வழக்கம் போல அன்று காலையும் சிவா வருவானா என்ற ஏக்கத்துடன் வழி பார்த்துக் கொண்டிருந்த சுகேசிக்கு, அவனைக் கண்டதும் மிகவும் குதுகலமாக இருந்தது!



''இன்றும் நீங்கள் வரவேண்டுமே என்று ரொம்பவும் ஆவலாக இருந்தது! நல்லவேளையாக வந்துவிட்டீர்கள்!'' என்று கண்களும் முகமும் பளபளக்கப் பேசிய அவளைக் கண் கொட்டாமல் பார்த்தான் சிவநந்தன்.

முகம் சிவக்க, ''என்ன...?'' என்று அவள் சிணுங்கவும், காதருகே நெருங்கி, ''பத்தே நாட்கள்தான் மாமனாருக்கு அவகாசம்! அதற்குள் திருமண நாள் குறித்தாக வேண்டும் என்று சொல்லிவிடு! அதற்குமேல் போனால், தேசிங்கு ராஜன் போல வந்து, உன்னை இங்கே தூக்கி வந்து விடு வேனாக்கும்!'' என்று மிரட்டலாக மொழிந்தான் அவளுடைய வருங்காலக் கணவன்!

கலகலவென்று நகைத்தபடியே உள்ளே ஓடத் திரும் பியபோது, காரோடும் பாதை வழியே ஒரு டாக்சி உள்ளே வரவும், சுகேசி சற்றுத் தயங்கி நின்று பார்த்தாள்.

அவளைத் தொடர இருந்த சிவநந்தனும் அதேபோல நிற்கையில், வீட்டு வாயிலில் வந்து நின்ற டாக்சியில் இருந்து இறங்கினான் ப்ரேம்!

ஏனோ, இருவருமே சற்றுத் திகைத்துப் போயினர்!

தமிழ்நாட்டு விருந்தோம்பல் உடம்பில் ஊறியதாயிற்றே!

விரைவில் சமாளித்துக் கொண்டு, ''வாருங்கள், ப்ரேம்!'' என்று புன்னகை காட்டி வரவேற்றவாறு வாயில் படி களில், இறங்கினான் சிவநந்தன்.

டாக்சிக்குப் பணத்தைக் கொடுத்துவிட்டுத் திரும்பி, ''விழா மாலையில்தான் என்று எனக்குத் தெரியும், சிவா! ஆனால், இரவுக்குள் நான் மீண்டும் மறுவாழ்வு மையத்துக் குத் திரும்பிச் சென்றாக வேண்டும். இவ்வளவு பழகி விட்டு, நேரில் வந்து வாழ்த்தாவிட்டால் எப்படி? அதனால் தான் இப்போதே வந்தேன்! அதில் ஒன்றும் தப்பு... நான் வந்ததில் உங்களுக்குச் சங்கடம் எதுவும் இல்லையே?'' என்று லேசான தயக்கத்துடன் கேட்டான் ப்ரேம்.

''சேச்சே! அப்படியெல்லாம் ஒன்றுமே கிடையாது! நீங்கள் நேற்றே வந்திருந்தால்கூட, எங்களுக்கு மகிழ்ச்சி தான்!'' என்று முன்னே வந்து, அவன் கையைப் பற்றி அழைத்துச் சென்றான் சிவா.

அதற்குள் சுகேசியும் இளகியிருந்தாள்.

மனவேதனை, அது தாளாமல் போதை வயப்படுதல், அதைக் குணப்படுத்தல், குணப்படுத்தலின் போது உடல் வேதனை என்று, எவ்வளவோ கஷ்டப்பட்டிருப் பான்! அதை எல்லாம் மறந்து, இரவில் மையத்துக்குத் திரும்பியாக வேண்டிய நிலையிலும், இதற்கென்று கிளம்பி வந்திருக்கிறானே!

புன்னகை செய்து, ''இவ்வளவுக்குப் பிறகும், எங்களை வாழ்த்தவென்று கிளம்பி வந்ததற்கு ரொம்ப நன்றி, மிஸ்டர் ப்ரேம்! சீக்கிரமே உங்கள் வீட்டிலும் கல்யாணம் வரப் போகிறது என்று கேள்விப்பட்டேன். அட்வான்ஸ் வாழ்த்துக்கள்!'' என்று கரம் குவித்தாள் அவள்.

பெரிதாக முறுவலித்து, ''இந்த வாழ்த்துக்கு, உங்களுக்கு என் நன்றி!'' என்றான் ப்ரேம்.

வீட்டில் அறிமுகப்படுத்தப்பட்ட எல்லோருடனும் ப்ரேம் கலகலப்பாகப் பேசினான்.

வீட்டை அலங்காரம் செய்வதாகச் சொல்லிக் கலகலத் துக் கொண்டிருந்த சின்னவர்களோடு, அவனும் சேர்ந்து, அலங்காரப் பொருட்களைத் துடைத்து வைப்பதும், பலூன் ஊதி, வண்ணப் பேப்பர் ஒட்டுவதுமாக வேலை செய்தான்!

சற்றுப் பொறுத்து, சிவநந்தன் கிளம்புகிற நேரம் வந்தது!

ப்ரேமின் திட்டம் தெரியாமல் சற்று யோசித்துவிட்டு, ''இனி நான் மாலையில், எங்கள் வீட்டாருடன் தான் வருவேன். ப்ரேம்! ஆறு மணி ஆகிவிடும்! உங்களுக்கு



வேண்டுமானால், கார் அனுப்பட்டுமா? அல்லது, என் னோடு வந்தீர்கள் என்றால், அங்கிருந்து, நீங்கள் திரும்பு வதற்கு ஏற்பாடு செய்கிறேன்!'' என்றான் அவன்.

''இல்லையில்லை! எனக்கு டாக்சியே வந்துவிடும். அதற்கான ஏற்பாடு செய்துவிட்டேன்! 'பொன்னருவி'யில் தான் விழா என்றதால், டாக்சியை இங்கேயே வரச் சொன்னேன்! வந்து, நான் அதுவரை இங்கே இருப்பதில் ஒன்றும் கஷ்டம் இல்லையே! ரொம்ப நாளாக... இது போலக் குடும்பச் சூழலில் இருப்பது சந்தோஷமாக இருக் கிறது! ஆனால், என்னால் தொல்லை என்றால், உடனே கிளம்பி விடுகிறேன்!'' என்றான் அவன், சிறு ஏக்கம் கலந்த குரலில்.

''ஷ்! என்ன ப்ரேம் இது? நீங்கள் எவ்வளவு நேரம், இங்கே இருப்பதானாலும் எங்களுக்கு சந்தோஷமே! இது என் சொந்த அத்தை வீடு என்றேனே! உங்கள் டாக்சி வரும்வரை, நீங்கள் தாராளமாக இங்கே இருக்கலாம்! ஆனால், நான் இப்போது கிளம்பியாக வேண்டும்!'' என்ற வன் சுகேசியைக் குறிப்பாய்ப் பார்த்துவிட்டு, வெளிப் புறம் சென்றான்.

கூடச் சென்றபடி, ''அவரைப் பார்த்தால் பாவமாக இருக் கிறது, சிவா! மாதக் கணக்கில் மறுவாழ்வு மையத்தி லேயே தனியாக இருந்திருப்பார்போல! இந்தப் பிள்ளை களோடு சற்று நேரம் குதூகலமாகப் பொழுதுபோக்கி விட்டுப் போகட்டுமே என்றிருக்கிறது!'' என்றாள் அவள்.

முறுவலித்து, ''நானும் அதைத்தான் சொல்ல நினைத் தேன்! பாவம், ரொம்பக் கஷ்டப்பட்டுவிட்டார்! அவரிடம் கொஞ்சம் இதமாகப் பேசு என்று சொல்லவே நினைத் தேன்! நீ, என்னை முந்திக் கொண்டுவிட்டாய்!'' என்றான் சிவநந்தன் பெருமையோடு!

அவனது பாராட்டில் சிவந்து, ''மாலையில் சரியான நேரத்துக்கு வந்துவிடுங்கள்ப்பா! தாமதம் பண்ணினால், என்னால் தாங்க முடியாது! என்னவோ என்று பயமாக இருக்கும் என்று தோன்றுகிறது!'' என்றாள் அவள்!

''பயப்படத் தேவையே இராது! என் ரதியைப் பார்க்க, எனக்கு மட்டும் ஆவலாக இராதா? டான் என்று, ஆறு மணிக்கு இங்கே இருப்போம் பார்!'' என்ற உறுதிமொழி யோடு, அவளது கன்னத்தை லேசாகத் தட்டிவிட்டுக் கிளம்பினான் சிவா.

நடக்கப் போகிறது என்று, அவன் மனதார நம்பி யதைத்தான் சொன்னான்!

ஆனால்...

## 12

சுமார் ஒரு மணி நேரத்துக்கும் மேலாக, கதிர், சுதிர், மதுமதி, மதுமிதா நால்வருட னும் சேர்ந்து வேலை செய்தபடி, அவர் களுடன் பேசிச் சிரித்துக் கொண்டிருந்தான் ப்ரேம்!

அபிராமி சொன்னபடி, முகத்தில் ஏதோ பழக் கூழை ஊற வைத்துக் கழுவிவிட்டு வந்த சுகேசி, வீட்டை அலங்கரித்துக் கொண்டிருந்த எல்லோருக்கும் பழச்சாறு கொண்டு வந்து கொடுத்தாள்!

சிறிது நேரம் அங்கேயே உட்கார்ந்து பேசிக் கொண் டிருந்தாள்.

சற்றுப் பொறுத்து, ப்ரேம் கைக்கடிகாரத்தைப் பார்த்தான்.

''என்ன ப்ரேம், நீங்கள் கிளம்ப வேண்டிய நேரம் ஆகிறதா? மதியம் சாப்பிட்டு விட்டு, அதன் பிறகு கிளம்ப லாமே!'' என்று யோசனை சொன்னாள் சுகேசி.

''அதில்லை! டாக்சி வருகிற நேரம் பற்றி பார்த்தேன். இன்னும் சமயம் இருக்கிறது! ஏன் சுகேசி, இங்கே மலைப்



பாதையில் கார் ஓட்டுவதெல்லாம் படித்து விட்டீர் களாமே! வாருங்களேன், என் டாக்சி வருமுன், சின்னதாக ஒரு சுற்று சுற்றிவிட்டு வருவோம்!'' என்று அழைத்தான் ப்ரேம்!

''அது...'' என்று சுகேசி முதலில் தயங்கினாள்!

அவளுக்கு ஓட்டத் தெரியாது என்று இல்லை!

முதல் இரண்டு நாட்களும், சுகேசி காரை ஓட்டி யிராவிட்டாலும், அடுத்தொரு நாள் சிவா, அவளை ஓட்ட வைத்துப் பார்க்கத்தான் செய்தான். நன்றாகவே ஓட்டு கிறாள் என்று பாராட்டவும் செய்தான்! ஓட்டுவது பிரச் சினை இல்லை!

வாகீசனின் கார் பெரிதாக இருந்ததால், இரவு விருந் துக்கான பொருட்கள் எடுத்து வர, மற்ற திருமண வேலையாக சென்றிருந்தது!

ஆனாலும், ஏதேனும் அவசரத்துக்கு என்று இன்னொரு காரும் அங்கே நிறுத்தப்பட்டிருந்தது.

அது கொஞ்சம் சிறிய காரே என்பதால், ஓட்டுவதில் பிரச்சினையும் இராதுதான்!

ஆனாலும் தயங்கி, ''இப்போது எதற்கு, மிஸ்டர் ப்ரேம்? பிறகு எப்போதாவது பார்ப்போமே!'' என்றாள் அவள்.

''ஓ, சாரி!'' என்றான் அவன் முகம் வாடி! ''நா...ன் நான், ஒரு காரணமாக உங்களிடம் தனியாக, மன்னிப்புக் கேட்க நினைத்தேன்! ஆனால், என்ன இருந்தாலும், நான் அன்னியன்! போதை, அது இதென்று சிகிச்சை எடுத்துக் கொண்டிருப்பவன்! கிட்டத்தட்டக் குணமாகி விட் டாலும், போதை மருந்து எடுத்தது இல்லை என்று ஆகுமா? என்னோடெல்லாம் வருவதற்கு, நீங்கள் விரும்ப மாட்டீர்கள் என்று புரியாமல், மடத்தனமாகக் கேட்டுவிட்

டேன். மன்னித்து விடுங்கள்! ஆனால், மன்னிப்புக் கேட்பதற்காகத்தான்...'' என்று மேலே முடிக்க மாட்டாமல் வருத்தத்துடன் நிறுத்தினான் ப்ரேம்!

சும்மாவே மனம் நொந்து சோர்ந்து இருப்பவனை, மேலும் வருத்தமடையச் செய்துவிட்டாளே!

அதுவும், அவனது மனதுக்கு அழுத்தத்திற்குச் சிறு அளவிலேதான் என்றலும், அவளும் ஒரு காரணமாக இருந்திருக்கும் போது!

எல்லாவற்றுக்கும் மேலாக, சிவாவே அவனிடம் இதமாகப் பேசும்படி சொல்லியிருக்கிறான்.

''நீங்கள் நினைப்பது போல எதுவும் எண்ணவில்லை, மிஸ்டர் ப்ரேம். ஆனால், நீங்களே உண்மை தெரியாமல் இருந்ததற்கு மன்னிப்புக் கேட்பது எதற்கு? அவசியமே இல்லையே என்று பார்த்தேன்....'' என்று இழுத்தவள், அவன் நம்பாத பாவனையோடு சோகமாகப் பார்க்கவும், ''சரி போவோம்!'' என்றாள்.

''அம்மாவிடம் சொல்லிவிட்டு, கார்ச் சாவியை எடுத்து வருகிறேன்!'' என்று உள்ளே சென்றாள்.

சிவநந்தனுடைய சினேகிதனுக்கு, இங்கே பக்கத்தில் காரை ஓட்டிக் காட்டி விட்டு வருவதாகத் தாயிடம் சுகேசி சொன்னபோது, அவள் தடையேதும் சொல்லவில்லை!

வருங்கால மருமகனுடைய நண்பன் என்று நினைத்தாள் போலும்! ''பக்கத்தில் என்றால் போய்வா! ஆனால் அதிகத் தூரம் வேண்டாம்! மாலை வைபவத்தில், முகம் அலுத்துக் களைத்துத் தெரியக் கூடாது!'' என்று மட்டும் சொல்லி அனுப்பினாள்.

கிட்டத்தட்ட இதே சமயத்தில், சிவநந்தனுடைய நண்பன் சுந்தரேசன், சிவாவுக்கு போன் செய்து ஒரு விவரம் கேட்டான்.



''நிச்சயதார்த்த விழா, மாலையில் சரியாக எத்தனை மணிக்குத் தொடங்கி, எப்போது முடியும்?'' என்று விசாரித்தான்!

''ஆறு மணிக்குத் தொடங்குவதாக இருக்கிறோம்! நம் வீட்டில் வாங்கிப் போகும் பட்டுச் சேலையை, சுகிக்குக் கட்டி, நலங்கு என்று ஏதோ வைப்பார்களாம்! அது, ஓர் அரை மணி நேரம் நடக்கும். அப்புறம் சாப்பிட்டு விட்டுக் கிளம்ப வேண்டியதுதான்!'' என்றான் அவன்! ''என்ன சுந்தர், அவ்வளவு கணக்காக நேரம் கேட்கிறாய்?'' என்று இவனும் வினவினான்.

''அதுவா? நானும் தினுவும் அங்கே வரும் சமயத்தில், நம் ப்ரேம் அப்பாவைத்தான் கடையில் உட்காரச் சொல்லிக் கேட்டிருந்தேன்! நேரம் எவ்வளவு என்று சரியாகக் கேட்டுச் சொல்லு என்றார். அதனால்தான் தலைவா, உன் தலைவி ஜபத்தில் குறுக்கிட்டுத் தொல்லை செய்யும்படி ஆயிற்று!'' என்று கேலி செய்தான் நண்பன்!

சிரித்துவிட்டு, ''தலைவி ஜபமா? ஐயா, இப்போது ஏலக்காய் புழுக்குகிற இடத்தில் நின்று வெந்து கொண்டிருக்கிறார்! மாலையில் கிளம்புமுன் இந்தச் சூடு எல்லாம் மாற, நன்றாகக் குளியல் போட வேண்டும் என்று நீ கூப்பிடும் போது அதைத்தான் நினைத்துக் கொண்டிருந்தேன்! அப்புறம் இன்னொன்று! நீ, ப்ரேமிடம் எங்கள் விவரம் சொன்னது நல்லதாயிற்று! எங்களை வாழ்த்த, இங்கேயே வந்துவிட்டார்! ரொம்பவும் இயல்பாக ஏற்று வளைய வருகிறார்! இதிலேயே, அவர் நன்றாகக் குணமாகி விட்டது தெரிகிறது!'' என்றான் சிவநந்தன் நிம்மதியுற்ற குரலில்!

ஆனால், ''வளைய வருகிறானா?'' என்ற சுந்தரேசனின் குரல் கிரீச்சிட்டது! ''அவன் மறுவாழ்வு மையத்திலிருந்து

வெளியே வருவதே, அடுத்த வாரம்தானே? இதில் என்னவோ தப்பிருக்கிறது, சிவா'' என்றான் அவன் பதட்டத்துடன்!

சற்று திகைத்தபோதும், ''அமைதி, சுந்தர்! மையத்தில் அனுமதி கேட்டுக் கொண்டே, ப்ரேம் வந்திருக்கலாமில்லையா?'' என்று கேட்டான் சிவா.

''எதற்கு? உங்களை வாழ்த்தவா? அப்படியென்றால், முதலில் இதைத் தெரிந்து கொள்! நான் உங்கள் இருவரையும் பற்றி, ப்ரேமிடம் ஒரு வார்த்தைக் கூடச் சொல்லவில்லை! அத்தோடு, ஒரு மணி நேரத்துக்கு முன்பாக, அவனைப் பார்க்க மையத்துக்குப் போனபோது, இன்று மாலை வரை தியானம் பண்ணப் போவதால், யார் வந்தாலும் பார்க்க முடியாது என்று திருப்பி அனுப்பச் சொல்லிவிட்டு, தியானக் கூடத்துக்குள் போய்விட்டதாகச் சொன்னார்கள்! இங்கே தியானக் கூடத்துக்குத் தியானம் பண்ணப் போனவன், அங்கே இயல்பாக வளைய வருவது எப்படி?''

மேலும் திகைத்து, ''நீ சொல்லவில்லை என்றால்... ஓ!'' என்றான் சிவநந்தன்! ''உன் பெரியப்பா! அவர்தான் உனக்கு உதவியாகக் கடைக்கு வருவது பற்றி, அதன் காரணம் பற்றி, ப்ரேமிடம் ஏதோ சொல்லியிருக்க வேண்டும்! ஆனால், அவன் இங்கே வந்து...'' என்று பதறிப் போனான் அவன்.

அதே பதற்றத்துடன், ''சிஸ்டர் எப்படி இருக்கிறார்கள் என்று விசாரிப்பா! நான் வைத்து விடுகிறேன்!'' என்றான் சுந்தரேசன்!

அவசரமாக சுகேசியின் செல்லைத் தொடர்பு கொள்ள முயன்றால், அதற்கு உயிர்ப்பே இருக்கவில்லை!

கவலை அதிகரிக்க, அத்தை வீட்டைத் தொடர்பு கொண்டு சுகேசியைக் கேட்டால், அவனுடைய நண்பனோடு, அவள் டிரைவிங் போயிருப்பதாகச் சொன்னார்கள்!



நண்பனோடு டிரைவிங்கா?

தலையில் கை வைத்துக் கொண்டு உட்கார்ந்து விட்டான் சிவா!

ஆனால், அப்படி உட்கார இது நேரமில்லை!

அத்தோடு, ப்ரேம் டாக்சியில் அல்லவா வந்தான்? எந்தக் காரில் டிரைவிங் அழைத்துப் போயிருப்பான்?

மீண்டும் அபிராமியைக் கூப்பிட்டுக் கார் பற்றி விசாரித்தான்.

ஆனால், அண்ணன் மகனின் குரலில் வேறுபாடு உணர்ந்து, ''ஏதேனும் பிரச்சினையா, சிவா?'' என்று விசாரித்தாள் அவள்!

என்னவென்று சொல்லுவான்? வீட்டுச் சூழ்நிலையே மாறிவிடுமே!

''அ... அது, அவன். அந்த ப்ரேம் வீட்டில் பிரச்சினை அத்தை! அவனை உடனே கண்டுபிடித்தாக வேண்டும்! அத சுகி செல்லில் சார்ஜ் இல்லை போலத் தெரிகிறது! அத னால், கார் எது எந்தப் பக்கம் போகிறது என்று தெரிந் தால்...''

''ஒரு நிமிஷம் பொறு, சிவா!'' என்று விசாரித்து விட்டு வந்து, ''நம் சின்னக் கார்தான், சிவா! அவர்கள் கிளம்பி, பத்திலிருந்து, இருபது நிமிஷம்தான் இருக்கும். 'பொன் நருவி'யில் இருந்து வடக்கே செல்லும் பாதையில் போகிறதாம்!'' என்று பயன்படும் என்று அவள் நினைத்த விவரத்தைச் சுருக்கமாகவும், வேகமாகவும் சொன்னாள் அபிராமி!

வீட்டை விட்டு வெளியே சென்றதும், ''இதே சாலையிலேயே சற்று தூரம் போங்கள், சுகேசி. அந்தப் பக்கமாக

ஓர் ஏலக்காய் எஸ்டேட் விலைக்கு வருகிறதாம்! வாங்கலாம் என்று எண்ணம்! அந்தப் பக்கம் ஓட்ட முடியுமா?'' என்று மரங்கள் நிறைந்த பகுதிக்குள் ஓட்டச் சொன்னான் ப்ரேம்!

கார் ஓடும் போதே, அருகில் அவள் வைத்திருந்த அவளது செல்போன் கருவியை எடுத்து, ''இது என்ன நிறுவனத் தயாரிப்பு?'' என்று ஆராய்ந்தான்.

சுற்றிலும் பெரிய மரங்கள் அடர்ந்து, சற்று தூரத்தில் கூட எதுவும் தெரியாது என்பது போன்ற ஓர் இடம் வந்தது.

போக்குவரத்தே இல்லாத வனாந்திரமாய் மரம் செடிகள் மிகுவது போலத் தோன்றவும், கார் வேகத்தை வெகுவாகக் குறைத்து, ''வழி தப்பி வந்து விட்டோம் போலத் தோன்றுகிறது! ஆள் நடமாட்டமே காணோமே மெல்லத் திருப்பி விடுகிறேன்'' என்றாள் சுகேசி.

சொன்னது போலவே, அவள் காரை சற்று சிரமத்துடன் திருப்பத் தொடங்கவும், ''இல்லை, இங்கேதான்!'' என்று காரை நிறுத்தச் சொன்னான்.

அவள் காரை நிறுத்தியதும், கார்ச் சாவியை எடுத்துத் தன் பைக்குள் போட்டுக் கொண்டான் அவன்!

ஒரு கணம் திகைப்பும், உடனே நம்ப இயலாத பிரமிப்புமாக அவள் பார்க்கவும், ''எப்படியெப்படி? உனக்கும், அந்த சிவநந்தனுக்கும் கல்யாணமா? கருமாதி வேண்டுமானால், பண்ணச் சொல்லு! எப்படி எப்படியோ, எனக்கு எழுதிவிட்டு, இன்னொருவனை நீ மணப்பாயா? அப்படி மணக்கவிட, நான் என்ன கேணயனா?'' என்று கண்கள் பளபளக்கக் கேட்டான், ப்ரேம்.

இவன் குணமாகி... மனம் திருந்தி மன்னிப்புக் கேட்க விரும்பியதாக... அதை நம்பியது, சே, என்ன மடத்தனம்! பயங்கர மூடத்தனம்!



தலையை உலுக்கிக் கொண்டு ப்ரேமைப் பார்த்தாள் சுகேசி.

''ப்ரேம், நீங்கள் தப்பாக நினைத்துக் கொண்டு இருக்கிறீர்கள். உண்மையில், என் செல் மூலமாக, அந்தச் செய்திகளை அனுப்பியது, வனிதா! வனிதா நினைவிருக்கிறதல்லவா, பணிப் பயிற்சிக்கு என்னோட வந்தவள்! அவள்தான்...'' என்று அவனுக்கு விளக்க முயன்றாள் சுகேசி!

நம்பிக்கையில்லாமலேதான்!

உள்ளூர உண்மையான அன்பு கொண்டிருந்த சிவநந்தனே நம்பவில்லையே! கீழ்த்தரமான வக்கிரம் பிடித்த இவன் எங்கே?

அவள் எண்ணியதற்கு ஏற்ப, "இதையெல்லாம் அந்தக் கேணப்பயல் சிவநந்தன கிட்டே சொல்லு! அந்தக் கிறுக்கன் நம்புவான்! ஆனால், நான் கெட்டிக்காரன், கண்ணு! எப்படிப்பட்ட கூட்டத்திலே இருந்து, எந்த நேரம் பார்த்து, உன்னைப் பிரித்து, தனியாக இங்கே கொண்டு வந்தேன் பார்த்தாயா? சரி, அதெல்லாம் இப்போது எதற்கு? என்னை, என் திறமையைப் புரிந்து கொண்டாயில்லையா? அது போதும்! இப்போது நேரத்தை வீணாக்காமல், முன்னே எழுதின மாதிரியெல்லாம் என்னோட இருக்கப் போகிறாய்! அதுவரைக்கும், ஒரு ஈ, காக்காய் வராத இடத்திலே, நீயும் நானும் மட்டும்தான்! என்ன தொடங்குவோமோ?'' என்று அவளது தோளில் கையை வைத்தான் ப்ரேம்!

அருவருப்பு தாங்காமல், அனிச்சைச் செயலாக அவனது கையைத் தட்டிவிட்டு, கார்க் கதவைத் திறக்க முயன்றாள் சுகேசி.

காரை விட்டு இறங்கிவிட்டால், குதிங்கால் பிடரியில் இடிபட எங்கேனும் ஓடினால், இவனிடமிருந்து தப்பி

விடலாமே! எப்படியும், இவனை விட வேகமாக அவளால் ஓட முடியும்!

ஆனால், அவள் கையை விடாமல், அவன் பற்றி இழுத்த வேகத்தில், கை இற்றுத் தனியாக வந்து விடும் போல வலித்தது அவளுக்கு!

அவனது கண்களில் இருந்த பயங்கர ஒளியும், இந்த அசுர பலமும்!

போதை மையத்தில், முதலில் உடம்பைத்தான் பலப்படுத்துவார்கள் போல!

வெறி கொண்டவன் போலத் தோன்றும், இவன் குணமாகிவிட்டதாக எப்படிச் சொல்வது?

இந்தக் கையை விடுவித்துக் கொள்வதே முடியாது போலத் தோன்றும் போது, இவனிடமிருந்து தப்புவது, எப்படி? உதவிக்கு யாரும் வர வழியில்லாமல், இவன் பொய் சொல்லிக் கடத்தி வந்திருப்பதும், வேறு யாருக்கும் தெரிய வழியில்லை!

அதேபோல, இந்த இடத்தில் அவளைத் தேடவும் யாருக்கும் தோன்றாது!

முதலில், அவளைத் தேடும் எண்ணமே, இப் போதைக்கு யாருக்கும் வராதே!

இவன் கெட்டிக்காரத்தனமாக அல்லவா, திட்டம் போட்டு, அவளை இங்கே கொண்டு வந்திருக்கிறான்!

கடவுளே! பாவீ! அந்த அசிங்கம் பிடித்த வனிதாவால், இவள் நாசமாகி விடுவாளா? அதெப்படி முடியும்?

ப்ரேமின் பிடியிலிருந்து, தன் கையை விடுவிக்க முழு மூச்சுடன் போராடிய படியே, ஆத்திரமும், பயமுமாக, மனதால் என்னென்னவோ நினைத்துப் புலம்பித் தீர்த் தாள் சுகேசி!

அவளை வலியில் துடிக்க வைத்துப் பணிய வைக்கப் ப்ரேம் எண்ணினான் போலும்!



அவனது பிடியில் இருந்த அவளது கையை, ஓங்கி முன்புறப் 'பேனல்' மீது அடித்தான.

பயங்கர வலிதான்.

ஆனால்,'பேனலை'ப் பார்த்ததும் அவளுக்கு ஓர் ஐடியா தோன்றிவிட்டது!

அவளை, இந்த இடத்தில் தேடும் எண்ணம் யாருக்கும் தோன்றாதுதான்!

ஆனால், இந்த இடத்தில் ஒரு தேடலை... இங்கே எதையோ தேடுவதற்கு ஆட்களைக் கொண்டு வரலாமே!

நினைத்ததைச் செயலாற்றும் வாய்ப்பு உள்ளபோதே, செய்து விட வேண்டும் என்று எண்ணியவளாய், அபாய அறிவிப்பு செய்யும் வாணத்தை உயரே அனுப்பும் பட்டனை, பலம் கொண்ட மட்டும் அழுத்தி விட்டாள் சுகேசி!

அப்போதும் கூட, இன்னும் எவ்வளவு நேரம், இந்த வெறி பிடித்த அசுரனுடன் போராட நேருமோ, உதவி வரும் வரை தாக்குப் பிடிக்கும் பலம் இருக்க வேண்டுமே என்று கலங்கியபடியேதான், பட்டனை அழுத்தினாள்!

ஆனால், ஏற்கனவே, அபிராமி கொடுத்த குறிப்பின்படி இந்த பக்கமாகவே அவளைத் தேடி வந்து கொண்டிருந்த சிவநந்தன், அந்த வாணத்தையும் வெடியையும் பார்த்து, சரியான இடத்தைக் கணித்து, வெகு சில நிமிஷங்களி லேயே அவர்களை எட்டிவிட்டான்!

பெண்ணிடம் வெறிப் பலத்தைக் காட்டியவன், அவனினும் வலுவான ஆணைக் கண்டு ஓரிரு அறைகள் வாங்கியதுமே, சொத்தென விழுந்தான்.

வாணம், வெடியைப் பார்த்து உதவிக்கு வந்த, நம் பிக்கையான வேறு சிலரிடம், மனநிலை சரியில்லாதவன் என்பதால் பத்திரமாகப் பாதுகாக்குமாறு ப்ரேமை ஒப் படைத்தான்.

சுகேசி ஓட்டி வந்த காரைத் திருப்பிக் கொண்டு வரவும் ஏற்பாடு செய்துவிட்டு, சிவநந்தன், அவளுடன் கிளம்பினான்!

அவனது தோளில் சாய்ந்து கிடந்தவளின் உடல் அவ்வப்போது தூக்கி வாரிப் போடவும், காரை நிறுத்தி, அவளை ஆதரவாய் அணைத்து ஆறுதல் சொன்னான் சிவநந்தன்.

''இந்த ராஸ்கலிடம் போய், இதமாகப் பேசு என்றேனே!'' என்று தன்னையே நொந்து கொண்டான் சிவா! ''அதனால்தான் அவன் கூடக் காரில் வந்தாயா?'' என்று பரிவுடன் கூந்தலை வருடியவாறு கேட்டான்.

அவனிடம் நன்றாக ஒண்டிக் கொண்டு, ''அது மட்டுமில்லை! எனக்கும், ஒரு குற்றக் குறுகுறுப்பு! இந்த மனிதன் இப்படிக் கெட்டதற்கு, நம்மையறியாமல், நாமும் ஒரு காரணம் ஆகிவிட்டோம் என்று! தன்னைத்தானே நொந்து கொள்வது போல வேறு இருந்ததா? பாவம், கொஞ்ச தூரம் அவனோடு காரில் போவது அவனுக்கு இதம் என்றால், போய்விட்டு வருவோமே என்று நினைத்தேன்! ஆனால், வக்கிரம் பிடித்த மனதோடு, பயங்கரமாகத் திட்டம் போட்டுக் கொண்டு வந்திருப்பான் என்று, சற்றும் எதிர்பார்க்கவே இல்லை! ஆனால், என்னவோ சிவா, இ... இவ்வளவு நடுக்கத்துக்கும் மேலே, உள்ளே மனசு ஏதோ கொஞ்சம் லே..சான மாதிரி இருக்கிறது! அந்த... அந்தக் குற்ற உணர்ச்சி போய்விட்டது என்று நினைக்கிறேன்!'' என்றாள் அவள்!

யோசித்துக் கொண்டிருந்தவள், திடுமென நிமிர்ந்து, ''நீங்கள் எப்படி, உடனே வந்தீர்கள்? எவ்வளவு நேரம், இவனைத் தாக்குப் பிடிக்க வேண்டியிருக்குமோ. முடியுமா என்று ரொம்பக் கலங்கியிருந்தேனே?'' என்று அப்போதும் சிறு நடுக்கத்துடன் கேட்டாள்.



தோளோடு பற்றி லேசாகக் குலுக்கி, ''முடியாமல் என்னடா? இதெல்லாம், அந்த நிமிஷத்து வெறி தரும் பலம்! சமாளித்துக் கொண்டு, தைரியமாய்ப் புருவ மத்தியில் ஒரு குத்து விட்டிருந்தாயானால, அப்போதே சுருண்டிருப்பான்!'' என்று அவளுக்குத் தெம்பூட்டினான், அவன்.

பிறகு, ''சுந்தர் போன் செய்தான்!'' என்று கூறி அந்த விவரம் சொன்னான் சிவா.

''வீட்டிலும், ப்ரேம் சம்பந்தமாகத்தான் பிரச்சினை என்று சொல்லியிருக்கிறேன்! அவனைப் பாதுகாப்பாக வைத்திருந்தது, சுந்தர், தினகருடன் திருப்பி அனுப்பி விட்டால், அத்தோடு பிரச்சினை தீர்ந்தது! ஆனால், அவன்தான் இன்னும் நீண்ட காலம் சிகிச்சை எடுக்க வேண்டியிருக்கும்!'' என்றான் சிவநந்தன்.

யோசித்துவிட்டு, ''அதுவும் நல்லதுதான்! அவர் வெளியே வருமுன், அந்தப் பெண்ணுக்கு வேறு ஒருவருடன் திருமணம் நடந்து விட்டால், அவளும் தப்பி விடுவாளே! ப்ரேமின் அசுர பலமும், அவர் கண்ணில் தெரிந்த பளபளப்பும்... ஊகூம், அவரை நம்பவே முடியாது சிவா!'' என்றவள், திடுமென நிமிர்ந்தாள்!

''என்னடா?''

''சமயத்தில் உங்கள் நண்பர் போன் செய்திராவிட்டால், என்ன ஆகியிருக்கும்?'' என்று ப்ரேம் 'பேனலி'ல் அடித்த கையின் வீக்கத்தை, அருகில் இருந்த காரை ஓட்டியவன் அறியாமல் தடவிப் பார்த்தபடி, மீண்டும் சிறு நடுக்கத்தோடு கேட்டாள் சுகேசி!

''அது எப்படிப் பண்ணாமல் இருப்பான்?'' என்று, சிறு அலட்சியத்தோடு, எடுப்பாகப் பதில் கேள்வி கேட்டான் சிவா.

அவன் எதிர்பார்த்தது போலவே, மனநிலை மாற, ''வாட்? எ... என்ன?'' என்று வியப்புடன் வினவினாள் அவள்.

''நான் பளளியில் கற்ற அளவில், இரண்டு வார்த்தைகளுக்கும் ஒரே பொருள்தான் என்று படித்திருக்கிறேன்! ஆனால்... அங்கே எப்படியோ?'' என்று ஓரக்கண்ணால் பார்த்துச் சிரித்தான் அவன்!

அவனை உணர்ந்தாற்போல, ''எனக்கும் தெரியும்! ஆனால், அங்கே எப்படியோ என்றுதான் மொழி பெயர்த்துச் சொன்னேன்'' என்று மிடுக்காகப் பதில் கொடுத்தாள் அவள்.

''ஆஹா! இந்தச் சின்ன விஷயம் எனக்குத் தெரியாது என்றா, நினைத்தாய்? ஐயா, அறிவுக் களஞ்சியம் ஆயிற்றே! எனக்கு என்ன என்ன தெரியும் என்று தெரிந்தால், அப்புறம் நீ அதிசயக் கடலில், அப்படியே முழுக வேண்டியதுதான்!'' என்று பெரிதாக அளந்தவன், குரலைத் தணித்து, ''அதையெல்லாம், நம் திருமணத்துக்கு அப்புறம்தான் உனக்கு கற்றுக் கொடுக்கலாம் என்று நினைத்து வைத்திருக்கிறேன்! ஆனால், அதைப் பற்றித் தீர்மானிக்கும் உரிமை உனக்குத்தான்! என்ன, வசதி எப்படி?'' என்று அவள் காதோரம் முகத்தை நீட்டிக் கிசுகிசுத்தான் சிவநந்தன்!

''ம்ம்ம்! என் வசதி, இப்போது, உங்கள் முதுகில் நாலு வைப்பதுதான்! எப்படி அங்கத்தி வசதி?'' என்று மிரட்டும் தொனியில் கேட்டு சுகேசி சிரிக்க, அவனும் அதில் கலந்து கொள்ள, இருவரின் நகையொலியும் சேர்ந்து, அந்த சுகமான மலைக்காற்றில் இனிமையாகப் பரவலாயிற்று!